# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# இலங்கை

## முப்பத்தி ஐந்தாவது வருடாந்த அறிக்கை

# 2013

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ) | 1 |
| | நிறைவேற்று சுருக்கக் குறிப்பு | 2 |
| 1. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முகாமைத்துவம் | 7 |
| 2. | பல்கலைக்கழக முகாமைத்துவம் | 8 |
| 3. | நிறுவகங்கள் | 11 |
| 4. | பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் | 13 |
| 5. | கல்வித்துறை அபிவிருத்தியும், கல்வித்துறை தராதரங்களைப் பேணுதலும் | 26 |
| 6. | நிதி நிர்வாகம் | 44 |
| 7. | ப.மா.ஆ. குழு செயலகத்தின் ஊழியர் கோப்பு | 53 |
| 8. | மனித வளங்களின் முன்னேற்றம் | 55 |
| 9. | உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 61 |
| 10. | தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி | 64 |
| 11. | உயர்கல்வியில் நியமத்தைப் உறுதிப்படுத்தல் | 64 |
| 12. | மாணவர் தொடர்பான விடயங்கள் | 66 |
| 13. | பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி | 66 |
| 14. | அதிமேதகு ஜனாதிபதியின் உயர் கல்வி அமைச்சிற்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குமான வருகை | 68 |
| 15. | கௌரவ உயர் கல்வி அமைச்சருடான முன்னேற்ற கூட்டங்கள் | 68 |
| 16. | தேசிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் | 70 |
| 17. | சட்ட விவகாரங்கள் | 71 |
| 18. | பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டுச் சபை (USAB) | 72 |
| 19. | நிதி முகாமைத்துவத்தையும், மத்திய உள்ளக கணக்காய்வையும் மேம்படுத்தல் | 72 |
| 20. | ஆய்வுகள், பிரசுரங்களும், ஆராய்ச்சி கற்கைகளும | 73 |
| 21. | பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் | 74 |

| | |
|---|---|
| 22. பல்கலைக்கழக செமலாப நிதியம் | 75 |
| 23. 2013ல் வெளியிடப்பட்ட ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களும், தாபன சுற்றுநிருபக் கடிதங்களும் | 77 |
| 24. ப.மா.ஆ. குழுவின் நிதி நிலைமைக் கூற்று | 80 |
| 25. ப.மா.ஆ. குழுவின் 2013 டிசம்பர் 31 ம் தேதியன்றுடன் முடிவுற்ற கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 85 |
| 26. ப.மா.ஆ. குழுவின் 2013 டிசம்பர் 31 ம் தேதியன்றுடன் முடிவுற்ற கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 95 |
| 27. பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2013ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் | 125 |
| 28. பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2013 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 129 |
| 29. பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2013 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 136 |
| 30. பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் 2012ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள் | 140 |
| 31. பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் 2012 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 144 |
| 32. பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் 2012 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் | 149 |

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## அறிமுகம்

இலங்கையின் பல்கலைக்கழக முறைமையின் உச்ச சபையாகச் செயற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ) 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் 1978ம் ஆண்டு டிசெம்பர் 22ம் திகதியன்று நிறுவப்பட்டது. ப.மா. ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பல்கலைக்கழக கல்வியியை திட்டமிடலும், ஒன்றிணைத்தலும், உயர் கல்வி நிறுவனங்களுக்கான (உகநி) நிதிகளை ஒதுக்குதல், கல்விசார் தரங்களை பேணுதல், உ.க. நிறுவனங்களின் நிருவாகத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் உ.க. நிறுவனங்களுக்கான மாணவர்களின் அனுமதியினை ஒழுங்குபடுத்தல் ஆகியனவாகும்.

## ப.மா.ஆணைக்குழுவின் தூரநோக்கு

2020ல் ஆசியாவில் இலங்கை உயர் கல்வி தகவல் மையமாகவும்,
பிராந்தியத்தின் தலைவராகவுமிருத்தல்

## ப.மா.ஆணைக்குழுவின் நோக்கு

நல்லாட்சி மற்றும் முகாமைத்துவம் ஊடாக தேசிய அபிவிருத்திப் பாதையில் நியமமான கல்வியூட்டல், கற்றல், உயர் தாக்கமுள்ள ஆய்வு, புதுமையான தொழில் முயற்சி, ஆக்கமுள்ள சமூதாய ஈடுபாடு, சமாதானமும், ஒற்றுமையையும், மற்றும் இலக்குள்ள சர்வதேச கூட்டுறவு ஆகியவற்றிக்கு அர்ப்பணிப்புள்ள உறுதியானதும், பரந்தளவிலும் பராட்டப்படவும், அணுகவும் கூடிய உயர் கல்வி முறைமையயை வழிகாட்டி, நிறுவி விருத்தி செய்தல்.

## நிறைவேற்று சுருக்கக் குறிப்பு

1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம், இலங்கையில் பல்கலைக்கழக முறைமையின் செயற்பாடுகளை வழிகாட்டி, ஒன்றிணைப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ) வை உச்ச மட்டத்தில் நிறுவும் ஏற்பாட்டைச் உருவாக்கியது. ப.மா. ஆணைக்குழு, பல்கலைக்கழக கல்வியியை திட்டமிடலும், ஒன்றிணைத்தலும், பல்கலைக்கழகங்கள்/உயர் கல்வி நிறுவனங்களுக்கான (உகநி) நிதிகளை ஒதுக்குதல், கல்விசார் தரங்களை பேணுதல், உ.க. நிறுவனங்களின் நிருவாகத்தை ஒழுங்குபடுத்தல், உ.க. நிறுவனங்களுக்கான மாணவர்களின் அனுமதியினை ஒழுங்குபடுத்தல் மற்றும் அதன் அதிகார எல்லைக்குட்பட்ட சகல நிறுவனங்களைின் முன்னேற்றத்திற்கும், அபிவிருத்திற்கும் உதவியளித்தல் ஆகிய பிரதான பொறுப்புக்களைக் கொண்டுள்ளது.

இவ் வருடாந்த அறிக்கை 2013ம் வருடத்தில் ப.மா. ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்கின்றது. 2013ம் வருடத்தின் போது முக்கிய அம்சங்களாகவும், சாதனை அடைவுகளாகவும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதி, கல்விசார் மற்றும் ஆய்வு அபிவிருத்தி, மாணவர் விவகாரங்கள், ஆளணியினர் விருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், தகவல் தொழில்நுட்பங்கள் (IT) அபிவிருத்தி, நியமத்தை உறுதி செய்தல், நிதி நிர்வாகமும், முகாமை செய்தலும், மற்றும் வெளிநாட்டு பல்கலைக்களங்களுடன் கல்விசார் கூட்டுறவும், ஆய்விற்கான ஒத்துளைப்பு ஆகியவற்றையும் உள்ளடங்கியுள்ளன.

### பல்கலைக்கழகங்கள்/உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

மாணவர்களைத் தெரிவு செய்யும் முறைமையை மாணவர்களால் சட்ட நீதிமன்றத்தில் ஆட்சேபிப்பட்டதால், ஆவணி மாதம் 2011ம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ த) பரீட்சையில் இரண்டு பாடத்திட்டங்களின் கீழ் பரீட்சை எழுதிய மாணவர்களின் அனுமதி 2012ம் வருட இறுதி வரையும் காலதாமதமானது. உயர் நீதிமன்ற அடிப்படை உரிமைகள் வழக்கு இல. 29/2012 மற்றும் இல. 418/2012 ஆகியவற்றில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி அனுமதி 2013 முற்பகுதியிலேயே இடம் பெற்றது. மேலும் 2012/2013 ம் கல்வியாண்டின் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆவணி மாதம் 2012ல் நடாத்தப்பட்ட க.பொ.த (உ த) பரீட்சையின் பெறுபேறுகனை அடிப்படையாகக் கொண்ட தெரிவுகளும் 2013ம் ஆண்டிலேயே நடாத்தப்பட்டது.

ஆகவே, 2011 ஆகஸ்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ/த) பரீட்சை, 2012 ஆகஸ்டில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ/த) பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத் அனுமதிக்காக இரு தொகுதி மாணவர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவு செய்ய வேண்டியிருந்ததால் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக 2013ம் வருடம் மிகவும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

மொத்தமாக 141,411 பரீட்சார்திகள் 2011/2012 வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதி பெற்றார்கள். அத்துடன் 28,908 பேருக்கு உயர் கல்வி நிறுவனங்களுக்கு சாதாரண மற்றும் விசேட ஏற்பாடுகளின் கீழ் அனுமதி வழங்கப்பட்டது. சென்ற கல்வியாண்டுடன் ஒப்பிடுகையில், சாதாரண மற்றும் விசேட ஏற்பாடுகளின் கீழ் பல்கலைக்கழக அனுமதி 6,892 மாணவர்களினால் அதிகரிப்படைந்துள்ளது. தகவல் தொழில் நுட்பம், பிரயோக விஞ்ஞானங்கள், மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் போன்ற தொழில் கற்கை நெறிகளில் பாரிய அதிகரிப்புக்கள் காணப்பட்டன.

மொத்தமாக 144,816 பரீட்சாத்திகள் 2012/2013 ம் வருட கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான தகமையைக் கொண்டிருந்தார்கள். அவர்களில் 22,943 விண்ணப்பதாரிகளுக்கு அவ் வருடத்தில் கடைப்பிடிக்கப்பட்ட பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு சாதாரண மற்றும் விசேட ஏற்பாடுகளின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், கல்வியாண்டிற்கான விசேட ஏற்பாடுகளின் கீழ் மாணவர்களின் அனுமதிக்கான தெரிவு 2013 வருட இறுதிவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

**கல்விசார் மற்றும் ஆய்வு அபிவிருத்திகள்**

மீள்பார்வையின் கீழுள்ள காலத்தின் போது, 12 இளநிலைப் பட்டதாரி நிகழ்ச்சித் திட்டங்கள், கடந்த வருடத்தில் அறிமுகம் செய்ப்பட்ட 01 நிகழ்ச்சித்திட்டத்தை ஒப்பிடும் போது முறைமைக்குள் அறிமுகம் செய்யப்பட்டன. இதன் தொடர்பாக ப.மா. ஆணைக்குழு மொழிபெயர்ப்புத் துறையில் உள்ள தகுதிபெற்ற பட்டதாரிகளின் பற்றாக்குறையை கவனத்தில் எடுத்து விசேட பட்டமானி நிகழ்ச்சித்திட்டத்தை மாதிரி பாடவிதானமாக அறிமுகம் செய்யப்பட்டது முக்கியமான நடவடிக்கையாகும்.

இந் நிகழ்ச்சித் திட்டம் களனிப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்படும். உயர்/மேற் படிப்பு வாய்ப்புக்களை மேம்படுத்தும் பொருட்டு 28 புதிய பட்ட மேற்படிப்பு பட்டமானி நிகழ்ச்சித்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டன. இது சென்ற வருடத்தில் அனுமதிக்கப்பட்ட 6 நிகழ்ச்சித் திட்டங்களை ஒப்பிடும் போது, 3 மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் அனுமதிப்பதற்காக தகுந்த மதிப்பீடும், திருத்தப்பட்ட பொறிமுறையும் பின்பற்றப்பட்டது.

பல்கலைக்கழக முறைமையில் தொழில் நுட்ப விஞ்ஞான பாடநெறிகளுக்கு அனுமதிப்பதற்காக தொழில்நுட்ப பாடங்களையிட்டு ஆலோசனை வழங்கும் பொருட்டு பல்கலைக்கழக சட்டத்தில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப ப.க.மா.ஆ வினால் தொழில்நுட்ப பிரிவிற்காக புதியதொரு நிலையில் குழு நிறுவப்பட்டது. கல்வி அமைச்சினால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட தொழில்நுட்ப பாட விதானத்தின் கீழ் க.பொ.த. (உ/த) பரீட்சையில் தொழில்நுட்ப பாடங்களை தெரிவுசெய்ய எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளின் கேள்வியை நிவர்த்தி செய்ய இது அவசியமாகின்றது. 2015 க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகங்களுக்கு குறைந்தது 1,500 மாணவர்களை தொழில் நுட்பப் பிரிவில் முதலாவது மாணவர் தொகுதிக்கு 2016ல் அனுமதிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

உ.க. நிறுவனங்களில் ஆய்வு கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான ப.மா. ஆணைக்குழுவின் அர்ப்பணிப்பின் ஓர் அங்கமாக, உயர் கல்வி அமைச்சுடன் இணைந்து பிராந்திய மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்வான புதுமையாக்கமுரிய ஆய்வை மேம்படுத்தும் நோக்காக, புதியதொரு மானியத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நோக்கத்திற்கான ரூபா. 53 மில்லியன் மேலதிக நிதி ஒதுக்கப்பட்ட வேளையில், ப.மா. ஆணைக்குழவில் ஆய்வு ஆலோசனைக்குழு கூடவே நிறுவப்பட்டு ஆய்வில் உயர் தரப் புள்ளிகள் பேணப்படுகின்றன. கல்விதுறைசார்ந்தோரின் ஒத்துழைப்பை மேம்படுத்தி, வசதியளிக்கவும், வெளிநாட்டு பல்கலைக்கழங்களின் ஆய்வுடன் இணைவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்தகைய பல்கலைக்கழகங்களுடன் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைசாத்திடப்பட்டுள்ளன. மற்றும் இந்திய ஜெயின் பல்கலைக்கழகத்துடன் ஆய்வில் இணைந்து அதன் கீழ் குறிப்பிடத்தக்க பல நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ் வருடத்தில் அதியுத்தம சனாதிபதி, மற்றும் ஏனைய துறைகளில் பிரபல்ய கல்விமான்களுடன் தேசிய முக்கியத்துவம் பெற்ற விடயங்களையிட்டு பல தேசிய/சர்வதேச மட்ட கலந்துரையாடல்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டன.

ப.க.மா ஆணைக்குழுவின் நிலையியல் குழுக்களினால் HETC திட்டம், மற்றும் ஏனைய அரச, தென்கிழக்கு ஆசிய உயர் கற்கை நிறுவனங்கள் சங்கம், பெற்றோலியம் மூலவள அபிவிருத்தி செயலகம், ஜோன்கீல்ஸ் கம்பனி, மைக் புலோரா (தனியார்) லிமிடட் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து சில ஏனைய தொழிற்பட்டறைகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. அத் துறைகளில் அபிவிருத்திக்கான கொள்கைப் பிரச்சினைகள், வாய்ப்புக்கள், நிறுவன, தொழில் நுட்ப, உட்கட்டமைப்பு பிரச்சினைகள போன்றவற்றை இனம்காணும் நோக்காகவும், உாசழளைை மனைநெல னளைநயளந போன்றன தொடர்பாக உயர் ஆய்வுகளை இனம் காணவும், கல்வியாளர்களுக்கும், தொடர்பான பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் ளலநெசபளைவளை ்யசவநெசளாிளை அபிவிருத்தி செய்யும் நோக்காக இந் நடவடிக்கை மேற்கோள்ளப்பட்டது.

**மாணவர் விவகாரங்கள்**

அரச பல்கலைக்கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கட்டாய வகிபங்கினை ஆற்றுவதற்கு மாணவர்கள் ஒத்துழைத்து, பங்களிப்பு செய்து சாத்தியமடைய ஊக்கப்படுத்தும் எதிர்பார்ப்புடனும், நிறுவனத்தின் மூலாதார பெறுமதிகளையும், கொள்கைகளையும் காப்பதற்கும், நிலைநிறுத்தவும் பங்களிக்கும் பொருட்டும், பல்கலைக்கழக மாணவர் சாசனமொன்று 2013ல் ப.மா.ஆ வினால் வழங்கப்பட்டது.

2013 யூனில் உயர் கல்வி அமைச்சு, ப.மா. ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்ட HETC வேலைத்திட்டத்துடன் இணைந்து சகல சமூகங்களையும் சேர்ந்த மாணவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக சகல பல்கலைக்கழக கலாச்சார பெருவிழா ஒழுங்கு செய்யப்பட்டது. அத்துடன், ப.மா. ஆணைக்குழுவில் சமயப் பெரியார்களையும், சிவில் சமூகத்தின் பிரபல்ய நபர்களையும் கொண்டு இத் திட்டத்தின் கீழ் வழிநடத்தும் குழுவும், ஆரம்பிக்கப்பட்டது.

ஆய்விலுள்ள இவ் வருடத்தில், ஆணைக்குழு ‘‘சமாதான கற்கைகள்’’ சகல பட்டமானி நிகழ்ச்சித்திட்டங்களில் கட்டாய பாடநெறியாகவிருக்க வேண்டுமெனத் தீர்மானித்ததுடன், பல்கலைக்கழகங்களும்/உ.க. நிறுவனங்களும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய அறிவிக்கப்பட்டன.

இவ் வருடத்தில் மஹாப்பொல பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 39,471 ஆகவிருக்கும் வேளை, உபகாரக் கொடுப்பனவு பெறுவோர் 28,983 ஆகவும், நன்கொடை/கல்வி உபகாரக் கொடுப்பனவு பெறுவோர் 55 ஆகவுமுள்ளது. சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது உபகாரக் கொடுப்பனவு பெறுவோரின் எண்ணிக்கையில் 24% அதிகரித்திருக்கும் வேளை, மஹாப்பொல பெறுபவர்களின் எண்ணிக்கை 19% மாத்திரமே அதிகரித்துள்ளது.

**ஆளணியினர் அபிவிருத்தி**

2013ல் மொத்தமாக 613 புதிய ஊழியர் கோப்புப் பதவிகள் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்டன. இவ் எண்ணிக்கையுடன், பல்கலைக்கழக முறைமையின் மொத்த அனுமதிக்கப்பட்ட ஊழியர் கோப்புப் பதவிகள் 21,656 ஆக அதிகரித்துள்ளது. அனுமதிக்கப்பட்ட 613 புதிய ஊழியர் கோப்புப் பதவிகளில் 218 பதவிகள் கல்விசார் ஊழியர் கோப்புப் பதவிகளுக்கானதாகும்.

ஆய்விலுள்ள வருடத்தில், பல்கலைக்கழகங்களில் ஆளணியினர் அபிவிருத்தி நிலையங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயனளிக்கும் பொருட்டும், ஆளணியினர் அபிவிருத்திக்கான புதிய நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதற்காகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அண்ணளவாக ரூபா. 65 மில்லியனை ஒதுக்கி வழங்கியது. அத்துடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கொள்கைக்கு ஏற்ப, கல்விசார் ஆட்சியிலும், கல்வி வழங்குவதிலும் சிறப்பினை அடையும் பரந்த குறிக்கோளுடன், பல்கலைக்கழகங்கள்/உ.க. நிறுவனங்களின் கல்விசார் ஆளணியினர்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று பட்டப்பின்படிப்பு தராதரங்களைப் பெறுவதற்காக விமானப் பயணங்களுக்கான நிதி உதவித் தொகையாக ரூபா. 7.046 மில்லியன் வழங்கப்பட்டது. மேலும், கல்விவியளாலர்களுக்கு உள்நாட்டு ஆராய்ச்சி மானியத் திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்பு தராதரங்களைப் பெறுவதற்காக ரூபா. 5.62 மில்லியன் பெறுமதியான மானியங்களும் வழங்கப்பட்டன.

ஆய்விலுள்ள வருடத்தில், நிர்வாக, நிதி அதிகாரிகள் தரத்திலுள்ள சகல புதிய ஊழியர்களுக்காக வடிவமைக்கப்பட்ட ‘‘பல்கலைக்கழக சேவையிலுள்ள நிர்வாக, நிதி அதிகாரிகளுக்கான தூண்டுதல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்’’ 2013 மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இது 3 தொடர் மாதங்களில் (மாதத்திற்கு ஒரு கிழமையில்) 3 பயிற்சியளித்தல் பருவங்களில் நடாத்தபட்டன. இவைகளுக்கான பயிற்சி கைநூல்கள் தொடர்பான துறைகளிலுள்ள நிபுணர்களால் தயாரிக்கட்டன.

இவைகளுடன், எல்லா பதினைந்து பணியாளர் அபிவிருத்தி நிலையங்களும் (ப.அ.நி.கள்) கல்விசார், நிர்வாக, நிதி, நிறைவேற்று, தொழில் நுட்ப, கல்விசார்பற்ற, எழுதுவினைஞர், சிற்றூழியர் தரங்களைச் சேர்ந்த சகல ஆளணி வகையைச் சேர்ந்தோருக்காக கல்விசார் ஆளணி, குறுங்கால பயிற்சித் திட்டங்கள், தொழிற்பட்டறை, வெளிவாரி பயிற்சியளித்தல் போன்ற தூண்டுதல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை கிரமமாக நடத்துகின்றன.

2013ல், பமாஆணைக்குழு சுமார் ரூபா. 50 மில்லியனை ஒதுக்கியது. அதில் ரூபா. 30 மில்லியன் ப.அ.நிலையங்களுக்கு விடுவிக்கப்பட்டன. அதாவது ஒவ்வொரு ப.அ. நிலையத்திற்கும் ரூபா. 2 மில்லியனை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை தொடர்வதற்கும், புதிய பணியாளர் அபிவிருத்தி நிகழ்சித் திட்டங்களை வடிவமைப்பதற்கும் நிதிகளின் முதல் இரண்டு வட்டத்தில் விடுவிக்கப்பட்டன.

அத்துடன் ப.க.மா. ஆணைக்குழுவின் கொள்கைக்கு ஏற்ப, இலங்கையில் அல்லது வெளிநாடொன்றில் புதிய பட்டப்பின்படிப்பு ஆய்வு வெகுமதித் திட்டத்தின் கீழ் கல்விசார் ஆரசாட்சி மற்றும் வழங்கலில் மேம்மையடைவதற்காக பிராந்திய தேவைகள், பிரச்சினைகள் ஆகியவற்றையிட்டு பட்டப்பின்படிப்பு மேற்கொண்டு தேசிய கொள்கையான பிராந்திய அபிவிருத்தியடையும் பரந்த நோக்கிற்காக ரூபா. 35.0 மில்லியன் தொகை நிதியுதவி வழங்கப்பட்டது. மேலும், கல்விவியளாலர்களுக்கு உள்நாட்டு ஆராய்ச்சி மானியத் திட்டத்தின் கீழ் பட்டப்பின்படிப்பு தராதரங்களைப் பெறுவதற்காக ரூபா. 8.8 மில்லியன் பெறுமதியான மானியங்களும் வழங்கப்பட்டன. மேலும் பல்கலைக்கழகங்கள்/உ.க. நிறுவனங்களின் கல்விசார் ஆளணியினர்களுக்கு வெளிநாடுகளுக்குச் சென்று பட்டப்பின்படிப்பு தராதரங்களைப் பெறுவதற்காக விமானப் பயணங்களுக்கான நிதி உதவித் தொகையாக ரூபா. 6.8 மில்லியன் வழங்கப்பட்டது.

### உட்கட்டமைப்பு அபிவிருத்தி

திறைசேரியினால் பலவிதமான கட்டுப்பாடுகளை விதித்ததன் பின்னர், பல்கலைக்கழகங்களும், உ.க. நிறுவனங்களும் 2012ம் ஆண்டில் பெற்றுக் கொண்ட ரூபா. 5,504 மில்லியனை ஒப்பிடும் போது, இவ் வருட இறுதிவரை ரூபா. 5,590 மில்லியனை மட்டுமே பெற முடிந்தது.இத் தொகை 2013ல் புதிய கட்டட நிர்மாணம், தொடரும் திட்டங்கள், புனருத்தாபன திட்டங்கள், பொருட்கள் பெறுதல், உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள், மாணவர்களின் திறன் உருவாக்க செயற்பாடுகள் ஆகியவற்றிக்கு பிரதானமாக ஒதுக்கப்பட்டது.

இவ்வருடத்தின் போது, ஆணைக்குழு கவனமாக பரிசீலித்து, மதிப்பிட்டதன் பின்னர் 39 புதிய கட்டடமைப்பு திட்டங்களை அனுமதித்தது. 2013ம் வருடத்தில் 26 திட்டங்கள் பௌதீகரீதியாக ஆரம்பிக்கப்பட்டன. 48 நிர்மானிப்புத் திட்டங்கள் வடிவமைப்பிலும் மற்றும் நிர்மான செயல்முறையிலும் பல்வேறு கட்டங்களில் பல்கலைக்கழக முறைமையினுள் ரூபா. 10,201.92 மில்லியன் தொகையில் நடைமுறையிலுள்ளன. அதேவேளை சென்ற வருடத்தை ஒப்பிடும் போது ரூபா. 1,5515.5 மில்லியன் மதிப்புள்ள 13 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழக முறைமைக்கு கையளிக்கப்பட்டன.

மேலும், 2013ல் பல்கலைக்கழக முறைமையில் மாணவர் விடுதிகளைக் நிர்மாணிப்பதற்கான துரிய திட்டத்தின் கீழ் ரூபா. 13,860 மில்லியன் பெறுமதியான 30 மாணவர் தங்குமிடங்களை நிர்மாணிக்க அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### தகவல் தொழில் நுட்ப (IT) அபிவிருத்தி

2013ம் வருடத்தில் பல்கலைக்கழக முறைமையின் தகவல் தொழில் நுட்ப வசதிகளை மேம்படுத்தி, வலுப்படுத்துவதற்காக, சென்ற வருடத்தின் ரூபா. 50 மில்லியனை ஒப்பிடும் போது, இவ் வருடத்தில் (சுமார்) ரூபா. 11.397 மில்லியன் (சுமார்) ஒதுக்கப்பட்டது.

**தரக் காப்பீட்டை அங்கீகரித்தல்**

இவ்வருடத்தின் போது, ஆணைக்குழு கவனமாக பரிசீலித்து, மதிப்பிட்டதன் பின்னர் 39 புதிய கட்டடமைப்பு திட்டங்களை அனுமதித்தது. 2013ல் 26 திட்டங்கள் பௌதீகரீதியாக ஆரம்பிக்கப்பட்டன. 48 நிர்மானிப்புத் திட்டங்கள் வடிவமைப்பு மற்றும் நிர்மான செயல்முறையில் பல்வேறு கட்டங்களில் பல்கலைக்கழக முறைமையினுள் ரூபா. 10,201.92 மில்லியன் தொகையில் நடைமுறையிலுள்ளன. அதேவேளை ரூபா. 1,5515.5 மில்லியன் மதிப்புள்ள 13 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழக முறைமைக்கு கையளிக்கப்பட்டன.

QAA சபை ஆசிய, பசிபிக் நியம வலைப்பின்னல் (APQN) தைவானின் தைபாயில் 2013 வருடாந்த கூட்டத்தில் புதுமையாக்கமும் நியம உறுதிபாடும் என்னும் தலைப்பின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட 46 சமர்ப்பணம் இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட ‘‘புதுமையாக்கங்களும், தர உறுதிப்பாடும்’’ என்னும் அதன் சமர்ப்பணவுகளில் 1ம் அங்கீகரிக்கப்பட்ட நியம உறுதிப்பாடு என மதிக்கப்பட்டு சர்வதேச பரிசைப் பெற்றுக் கொண்டது.

**நிதி நிர்வாகமும், முகாமைத்துவமும்**

ப.மா.ஆணைக்குழுவின் மதிப்பீட்டின் படி 2013ம் வருடத்திற்கு மொத்தமாக ரூபா. 36,107 மில்லியன் வேண்டுமென மதிப்பிடப்பட்டிருந்தாலும், திறைசேரி மீள்செலவிற்கும், மூலதனச் செலவிற்கும் ரூபா. 26,841 மில்லியனை ஆரம்பத்தில் அனுமதித்தது. இவ்வருடத்தில், மேலதிக மீண்டெழும் செலவும், மூலதனத்திற்கும் ஒதுக்கீடாக முறையே ரூபா. 1,192 மில்லியனும், ரூபா. 1,159 மில்லியனும் மேலதிக சேர்ப்புச் செலவிற்கு நிதியளிப்பதற்காக அனுமதிக்கப்பட்டது.

சென்ற 2013ம் வருடத்துடன் ஒப்பிடும் போது, மீண்டெழும் செலவிற்கும், மூலதனத்திற்குமான ஒதுக்கீட முறையே 24%, 47% ஆல் அதிகரிக்கப்பட்டன. மேலதிக சேர்ப்பினால் பல்கலைக்கழக முறைமையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தேவைக்காக மூலதன மானியங்கள் அதிக சதவீதம் அதிகரிக்கப்பட்டன.

பமா ஆணைக்குழுவின் கணக்காய்வுக் குழு 2013ல் 4 சந்தர்ப்பங்களில் கூடியது. கணக்காய்வு நடவடிக்கை மற்றும் கண்காணிப்புக் குழு, திறைச்சேரியினால் அறிமுகம் செய்யப்பட்ட சிறந்த அரசாட்சி, முகாமைத்துவ நடவடிக்கைகள் ஊடாக நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதில் உதவ 15 பல்கலைக்கழங்கள், 18 உ.க.நிறுவனங்கள் தொடர்பான விடயங்களை பரிசீலித்தது.

ஆய்விலுள்ள இவ் வருடத்தின் போது. எதிர்வரும் வருடங்களில் பமாஆணைக்குழுவினதும், உயர் கல்வி நிறுவனங்களினதும் சுமூக செயற்பாடுகளை நிச்சயப்படுத்தும் பொருட்டு உயர் ஆலோசணை மற்றும் ஒழுங்குபடுத்தும் அங்கமாக 14 ஆணைக்குழு சுற்றறிக்கைகளையும், 20 ஸ்தாபன சுற்றறிக்கைகளையும் வழங்கியது.

## 1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் தலைவர், உப-தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பின்வருமாறு:

**தலைவர்**

**பேராசிரியர் எஸ்.வி.டி.ஜி. சமரநாயக்க** (31.01.2013 வரை)
பி.ஏ (பேராதனை) இலங்கை, எம்.ஏ (பேராதனை) இலங்கை, பி.எச்.டி (சென் அன்ரூஸ்-
ஸ்கொட்லான்ட்)
அரசியல் விஞ்ஞான சிரேஸ்ட பேராசிரியர், பேராதனை பல்கலைக்கழகம்

**பேராசிரியர் திருமதி கே. ஹிரிம்புருகம** (01.02.2013ல் இருந்து)
பி.எஸ்.சி (சிறப்பு) கொழும்பு, எம் பில், பி.எச.டி (லெவென்)
தாவர விஞ்ஞான சிரேஸ்ட பேராசிரியர், பேராதனை பல்கலைக்கழகம்

**உப-தலைவர்**

**பேராசிரியர் ரன்ஜித் சேனாரத்தன**
பி.எஸ்.சி, எம்.பில்., பீ.எச்.டி (வியன்னா), பீ.எச்.டி. எச்.சி (துர்ஹாம்)
பயிர் விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர், றுஹுனு பல்கலைக்கழகம்

**உறுப்பினர்கள்**

**பேராசிரியர் எச். அபேகுணவர்த்தன**
பி.எஸ்.சி (பேராதனை), எம்.எஸ்.சி ரூ பி.எச்.டி (இல்லினோய்ஸ், யு.எஸ்.ஏ.)
பண்ணை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சிரேஸ்ட பேராசிரியர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் எஸ். மோகனதாஸ்**
பி.எஸ்சி (சிறப்பு) கொழும்பு பி.எச்.டி (எடிலைடி), எப்.ஐ.கெம்., சீ.கெம்
ஓய்வு பெற்ற உப-வேந்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**பேராசிரியர் மல்காந்தி சந்திரசேகர**
பி.டி.எஸ். (இலங்கை), பி.எச்.டி(நியுகாசல், யூ.கே.)
உடற்கூற்றியல் சிரேஸ்ட பேராசிரியர், றுஹுனு பல்கலைக்கழகம்

**திரு. விஜய மலலசேகர**
எம்.ஏ. (கன்தாப்), சட்டத்துறை பரிஸ்டர் (இன்னர் டெம்பிள்), சட்டத்தரணி

**பேராசிரியர் சம்பத் அமரதுங்க**
பி.ஏ. பொருளியல் (சிறப்பு) (சிறி ஜயபுர), எம்.ஏ. பொருளியல், (கொழும்பு)
எம்.எஸ்.சி. கிராமிய அபிவிருத்திப் பொருளியல் (சக), பி.எச்.டி (ககோசிமா)
வணிகப் பொருளாதார சிரேஸ்ட பேராசிரியர்,சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

**திறைசேரியின் பிரதிநிதி**

**திரு. பி.ஏ. அபேசேகர, எஸ்.எல்.ஏ.எஸ் தரம் 1** (28.02.2013 வரை)
பி.ஏ. (இலங்கை) (பேராதனை), பொதுநிர்வாகம் - சான்றிதழ் (எஸ்.எல்.ஐ.டி.ஏ)
கிராமிய அபிவிருத்தியில் டிப்ளோமா – என்.ஐ.ஆர்.டி (இந்தியா)

**திருமதி. புஸ்பா வெல்லபில்லி (01.03.2013ல் இருந்து 04.05.2013 வரை)**
பி.எஸ்.சி (சிறப்பு), எல்.எல்.பி, எல்.எல்.எம்
திறைசேரி பிரதிச் செயலாளர்

**திரு. ஏஸ்.ஆர். ஆட்டிகல** (09.05.2013ல் இருந்து)
பி.எஸ்.சி (சிறப்பு)– கொழும்பு, எம்.எஸ்.சி. பொருளியல் (வார்விக் கொவென்ரி பல்கலைக்கழகம்) யு.கே
திறைசேரி பிரதிச் செயலாளர்

**செயலாளர்**

திரு. கே.ஜி.ரி.எல். நந்தசேன
பி.காம். (சிறப்பு) – வித்தியோதய, (எஸ்.ஜே.பி) எம்.பிஏ (சி.ஐ.பு)

## 2. பல்கலைக்கழக முகாமைத்துவம்

### 2.1 கொழும்பு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதிவணக்கத்துக்குரிய அருள்திரு ஓய்வு பெற்ற பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ்

**உப-வேந்தர்**
பேராசிரியர் ஷானிக்கா ஹிரிம்புரகம (31.01.2013 வரை)
பேராசிரியர் ரி.ஆர். ஆரியரத்ன (பதிலாற்றல்) (01.02.2013 ல் இருந்து 21.05.2013 வரை)
கலாநிதி டவ்ளியூ.கே. ஹிரிம்புரகம 22.05.2013ல் இருந்து)

**பிரதி உப-வேந்தர்**
பேராசிரியர் பிரேமகுமார டி சில்வா (31.01.2013ல் இருந்து)

**பதிவாளர்**
திரு. ரி.எல்.ஆர். சில்வா (பதிலாற்றல்) (01.01.2013ல் இருந்து 31.01.2013 வரை)
திரு. கே. ஏ. ஏஸ். எட்வேர்ட் (01.02.2013ல் இருந்து)

### 2.2 பேராதனைப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் பி.டவ்ளியூ. எபாசிங்க

**உப-வேந்தர்**
பேராசிரியர் ஏ.சேனாரத்ன

**பிரதி துணை-வேந்தர்**
பேராசிரியர் எச்.எம்.எஸ்.கே. ஹென்நாயக்க

**பதிவாளர்**
கலாநிதி எம்.என். ஜயவர்த்தன

### 2.3 களனிப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதி வணக்கத்துக்குரிய வெலமிட்டியாவே தர்மகீர்த்தி ஸ்ரீ குசலதம்மா தேரோ

**உப-வேந்தர்**
பேராசிரியர் சரத் அமுனுகம

**பதிவாளர்**
திரு. டவ்ளியூ.எம். கருணாரத்ன

## 2.4 ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வணக்கத்துக்குரிய பேராசிரியர் பெல்லன்வில விமலரத்தன தேரோ

**உப-வேந்தர்**
கலாநிதி என்.எல்.ஏ. கருணாரத்ன

**பதிவாளர்**
திரு. கே.ஜி. பிரிட்டோ

## 2.5 மொறட்டுவ பல்கலைக்கழகம்

**வேந்தர்**
தேசமானி கலாநிதி எஸ். ரொலாண்ட் சில்வா (07.04.2013 வரை)
பேராசிரியர் கே.கே.வை.டவ்ளியூ. பெரேரா (08.04.2013ல் இருந்து)

**உப-வேந்தர்**
பேராசிரியர் ஏ.கே.டவ்ளியூ. ஜயவர்த்தன

**பிரதி துணை-வேந்தர்**
பேராசிரியர் ஆர்.ஏ. அத்தலகே

**பதிவாளர்**
திரு. ஏ.எல். ஜ.ஃபர் சாதிக் (01.01.2013ல் இருந்து 02.06.2013 வரை)
திருமதி டவ்ளியூ. எல்.வி. ஜயசேன (பதிலாற்றல்) (03.06.2013ல் இருந்து 31.12.2013 வரை)

## 2.6 யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் எம். சிவசூரிய

**உப- வேந்தர்**
பேராசிரியர் (திருமதி) வசந்தி அரசரட்ணம்

**பதிவாளர்**
திரு. வி. காண்டீபன்

## 2.7 றுகுணு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதி வணக்கத்துக்குரிய ராஜகீய பண்டித பல்லத்தர சுமனஜோதி நாயக்க தேரோ

**உப-வேந்தர்**
பேராசிரியர் ஏ.எல்.எஸ். மென்டிஸ் (08.03.2013 வரை)
பேராசிரியர் காமினி சேனநாயக்க (09.03.2013ல் இருந்து)

**பிரதி துணை-வேந்தர்**
பேராசிரியர் காமினி சேனநாயக்க (08.03.2013 வரை)
கலாநிதி ஏ.எம்.என். அழகியவன்ன (11.04.2013ல் இருந்து)

**பதிவாளர்**
திருமதி. பி.எஸ். களுகம

## 2.8 இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**வேந்தர்**
திரு. சாம் எஸ். விஜேசிங்க

**உப-வேந்தர்**
கலாநிதி விஜித நானயக்கார

**பிரதி துணை-வேந்தர்**
கலாநிதி ஜே. லியனகம

**பதிவாளர்**
திருமதி. டவ்ளியூ. எல். விந்தியா ஜயசேன (02.06.2013 வரை)
திரு. ஏ.எல். ஜ.ஃபர் சாதிக் (பதிலாற்றல்) (03.06..2013ல் இருந்து 31.12.2013 வரை)

## 2.9 இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் யோகா ராசநாயகம்

**உப-வேந்தர்**
கலாநிதி கே. கோபிந்தராஜா

**பதிவாளர்**
திரு. கே. மகேசன்

## 2.10 இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் அச்சி எம் இசாக்

**உப-வேந்தர்**
கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில்

**பதிவாளர்**
திரு. எச்.ஏ. சத்தார்

## 2.11 இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் ஏ.வி. சுரவீர

**உப-வேந்தர்**
பேராசிரியர் கே. எச். ரன்ஜித் விஜயவர்த்தன

**பதிவாளர்**
திரு. ஏ.ஜி. கருணாரத்ன

## 2.12 இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வணக்கத்துக்குரிய பேராசிரியர் கம்புருகமுவ வஜிர தேரோ

**உப-வேந்தர்**
பேராசிரியர் எம்.எஸ். ரூபசிங்க

**பதிவாளர்**
திரு. எம்.எம். விமலசிறி (17.08.2013 வரை)
திரு. ரி. விஜேயகுமார் (பதிலாற்றல்) (18.08.2013ல் இருந்து 31.10.2013 வரை)
திரு. எம். எம். விமலசிறி (ஒப்பந்த அடிப்படை)(01.11.2013ல் இருந்து 31.12.2013 வரை)

### 2.13 இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் லக்ஸ்மன் ஜயதிலக (23.01.2013 வரை)
பேராசிரியர் கே.ரி.டி சில்வா (08.04.2013ல் இருந்து)

**உப-வேந்தர்**
பேராசிரியர் எஸ்.ஜே.பி.ஏ. ஜயசேகர

**பதிவாளர்**
திரு. இ.எம்.ஜி. எக்கநாயக்க (01.01.2013 ல் இருந்து 31.03.2013 வரை)
திரு. ஜி. பியரத்ன (01.04.2013 லிருந்து 31.12.2013 வரை)

### 2.14 இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வணக்கத்துக்குரிய கலாநிதி அளுத்துவேவ சோறத தேரோ (27.09.2013 வரை)
வணக்கத்துக்குரிய பென்கமுவே தம்மாதின்ன தேரோ (09.10.2013ல் இருந்து)

**உப-வேந்தர்**
பேராசிரியர் டவ்ளியூ.பி.ஆர்.பி. டி சில்வா

**பதிவாளர்**
திருமதி. நில்மினி தியபெதனகே

### 2.15 கட்புல, அரங்கேற்க்கலைகள் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பண்டிதர் கலாநிதி டவ்ளியூ.டி. அமரதேவ

**உப-வேந்தர்**
பேராசிரியர் ஜயசேன கொட்டேகொட

**பதிவாளர்**
திரு. வி. எம். தயாவஙன்ச

## 3. கல்வி நிறுவகங்கள்

### 3.1 விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவனம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் கொலின் என் பீரிஸ்

### 3.2 பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு நிறுவனம்

**பணிப்பாளர்**

பேராசிரியர் சுமனபால கல்மன்கொட (14.10.2013 வரை)
வணக்கத்துக்குரிய பேராசிரியர் கொடாபிட்டியே ராகுல (15.10.2013ல் இருந்து)

### 3.3 சுதேச மருத்துவ நிறுவனம்

**பணிப்பாளர்**
திரு. சுனிமல் சேனரத்ன (16.04.2012ல் இருந்து)
பேராசிரியா கே.கே.டி.எஸ். ரணவீர (பதிலாற்றல்)(10.08.2013ல் இருந்து 14.10.2013 வரை)
கலாநிதி திருமதி எம்.டவ்ளியூ.எஸ். ஜே. குமாரி (பதிலாற்றல்)(15.10.2013ல் இருந்து)

### 3.4 மனிதவள மேம்பாட்டு நிறுவனம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் ரொஹான் பி பெரேரா

### 3.5 மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் ஜயந்த ஜயவர்த்தன

### 3.6 தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் ஜகத் வீரசிங்க

### 3.7 முகாமை பட்டப்பின்படிப்பு நிறுவனம்

**பணிப்பாளர்**
கலாநிதி உடித பி லியனகே (31.08.2013 வரை)
பேராசிரியா கே.பீ.எம். பொன்சேகா (01.09.2013ல் இருந்து)

### 3.8 கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பள்ளி

**பணிப்பாளர்**
பேராசிரியர் ஜி.என். விக்ரமநாயக்க

### 3.9 கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவனம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் (திருமதி) ஜே.ஏ. லியனகே

### 3.10 விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் பீ.எஸ்.பீ. கருணாரட்ன (24.03.2013 வரை)
பேராசிரியா எச்.எம்.டி.என். பிரியந்த (25.03.2013ல் இருந்து)

### 3.11 நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் தேசிய நிறுவனம்

**பணிப்பாளர்**
திரு. எம்.எஸ்.யு. அமரசிறி

### 3.12 மொறட்டுவை பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவனம்

**பணிப்பாளர்**
கலாநிதி ரி.ஏ.ஜி. குணசேகர (05.09.2013 வரை)
திருமதி எம்.எம்.பி.டி. சமரசேகர (06.09.2013ல் இருந்து)

### 3.13 உயிர் இரசாயன, மூலக்கூற்று உயிரியலும், உயிர் தொழில்நுட்பமும் நிறுவனம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் (திருமதி) கே.எச். தென்னக்கோன் (பதிலாற்றல்)(01.01.2013ல் இருந்து 31.03.2013 வரை)
பேராசிரியர் நிஸ்வி சரீப் (பதிலாற்றல்) (01.04.201ல் இருந்து)

### 3.14 சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவனம்

**பணிப்பாளர்**
கலாநிதி கே. பிரேம்குமார்

### 3.15 ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவனம்

**பணிப்பாளர்**
கலாநிதி (திருமதி) எச்.வி.எம். ரத்வத்த

### 3.16 மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்

**பணிப்பாளர்**
கலாநிதி ஆர்.எம்.கே. ரத்நாயக்க (பதிலாற்றல்)

### 3.17 கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில் நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள நிறுவனம்

**பணிப்பாளர்**
கலாநிதி நிசாந்த பெரேரா (பதிலாற்றல்) (19.05.2013 வரை)
திரு. எம்.பி. பியதிலக (20.05.2013ல் இருந்து)

## 4. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

தேர்வு விதியை மாணவர்கள் சட்ட நீதிமன்றத்தில் ஆட்சேபித்ததால், 2011 ஆகஸ்டில் நடத்தப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சையில் இரண்டு பாடவிதானங்களில் பரீட்சைகளை எழுதிய மாணவர்களின் அனுமதி 2012 இறுதி வரை தடைப்பட்டது. அடிப்படை உரிமைகள் வழக்கு இல. 29/2012 மற்றும் இல. 418/2012 ஆகிய வழக்குகளில் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு ஏற்ப 2013 முற்பகுதியிலேயே அனுமதிகள் இடம் பெற்றன.

மேலும், 2012 ஆகஸ்ட்டில் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட 2012/2013 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான தெரிவும் 2013 ம் ஆண்டிலேயே இடம் பெற்றது.

ஆகவே 2013ம் வருடம் பல்கலைக்கழ அனுமதி தொடர்பாக மிகவும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. இவ் வருடத்தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2011/2012 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட 2011/2012 கல்வியாண்டிற்கும், 2012 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட 2011/2013 கல்வியாண்டிற்குமான மாணவர்களின் தெரிவை நிறைவேற்றி இரு கல்வியாண்டுகளுக்குமான பட்டமானி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய வெட்டுப் புள்ளிகளை வழங்க வேண்டியிருந்தது.

### 4.1 2011/2012, 2012/2013ம் கல்வியாண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

(1) 2011/2012 ம் கல்வியாண்டிற்கான அனுமதிக் கொள்கை பின்வருமாறு:

உ.நீ. அ.உ.வழக்கு இல. 412/2012 ன் கட்டளை பந்தி 1ன் படி, 2011/2012 கல்வியாண்டிற்கான மாணவர்கள் தெரிவு பரீட்சைகள் ஆணையாளரினால்

06.09.2012ல் வெளியிடப்பட்ட புதிய இஸட் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டது. இது பழைய பாடவிதானம், மற்றும் புதிய பாடவிதானம் ஆகிய இரு வெவ்வேறு குடிசனப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரச பல்கலைக்கழகங்களுக்கு 2011/2012ம் கல்வியாண்டிற்காகத் தெரிவுசெய்யப்படும் விசேட பிரிவுகளின் கீழ் அனுமதிகள் உள்ளடங்கலான சகல அனுமதிகளுக்கும் மாணவர்கள் தெரிவு செய்யப்படும் விகித அடிப்படை கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

(a) 2006 ம் வருடத்திலிருந்து 2010 வரையிலான ஐந்து வருட காலத்தின் போது முதலாவது முயற்சியில் ஒவ்வொரு பட்டமானி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் முழுத் தீவிற்குமான திறமை அடிப்படையில் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய மாவட்ட ரீதியிலான திறமை அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் அதிகபட்ச (உச்ச) விகிதம் 2011ம் வருடத்தில் இடம் பெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சை புதிய பாடவிதானத்திற்கு தோற்றிய மாணவர்களின் தெரிவுக்கான விகிதமாகும்.

(b) 2006 ம் வருடத்திலிருந்து 2010 வரையிலான ஐந்து வருட காலத்தின் போது இரண்டாம், மூன்றாம் முயற்சியில் ஒவ்வொரு பட்டமானி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் தீவளாவிய திறமை அடிப்படையில் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய மாவட்டரீதியிலான திறமை அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் அதிகபட்ச (உச்ச) விகிதம் 2011ம் வருடத்தில் இடம் பெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சை பழைய பாடவிதானத்திற்கு தோற்றிய மாணவர்களின் தெரிவுக்கான விகிதமாகும்.

(2) 2012/2013 கல்வியாண்டிற்கான அனுமதிக் கொள்கை பின்வருமாறு:

(a) 2012 ம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சையின் புதிய மற்றும் பழைய பாடவிதான பரீட்சார்த்திகளை பல்கலைக்கழக ஆணைக் குழு பல்கலைக்கழக அனுமதிக்காக இரு வேறுபட்ட குடிசனத் தொகுதிகளாக கருதுகின்றது.

(b) பல்கலைக்கழகங்களுக்குரிய மாணவர்களின் அனுமதி 2012ல் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ/த) பரீட்சையில் பரீட்சார்த்திகளினால் இரு பாடத்திட்டங்களிலும் பெறப்பட்ட பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட சராசரி இஸட் புள்ளியின் நிரை ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. இது 2006 ம் வருடத்திலிருந்து 2010 வரையிலான ஐந்து வருடகாலத்தில் முதல், இரண்டாம் முயற்சிகளை ஒன்றாகவும் அத்துடன் மூன்றாம் முயற்சியை தனியாகவும் கொண்ட பல்கலைக்கழகங்களுக் அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு பட்டமானி நிகழ்ச்சித்திட்டத்திற்குமுரிய தீவளாவிய திறமை அடிப்படையையும், ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய மாவட்ட திறமை அடிப்படையையும் கொண்ட மாணவர்கள் கலப்பு சராசரியை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(3) கலைப் பாடங்கள் பாடநெறிகள் விடயத்தில் (கல்வி வசதிகளில் உள்வாரி மாவட்ட வேற்றுமைகள் பொதுவாக குறைவெனக் கருதுகையில்) 2011/2012 2012/2013 ஆகிய இரு கல்வியாண்டுகளுக்கான அனுமதி தீவளாவிய திறமையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டது. அதாவது முழு நாட்டிற்குமாக தொகுக்கப்பட்ட புள்ளிகளைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், இது ஏதேனும் மாவட்டத்திலிருந்து அனுமதிக்கப்படும் மொத்த எண்ணிக்கை 1993/94 அல்லது 2002/2003 கல்வியாண்டுகளில் எது அதிகமாகவிருக்கின்றதோ அதைவிட குறைவாக இல்லாதிருப்பதை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(4) ஏனைய சகல பாட நெறிகளிலும் (அதாவது கலை பாடங்களைத் தவிர), ஒவ்வொரு பாட நெறியிலும் கிடைக்கும் இடங்களில் 40% வரை முழுத் தீவளாவிய திறமை அடிப்படையிலும், மீதி 60% மாவட்ட அடிப்படையிலும் கீழே குறிப்பிட்டது போல் நிரப்பப்பட்டுள்ளது.

(a) ஒவ்வொரு பாடநெறிக்குமுள்ள இடங்களில் 55%, 25 நிர்வாக மாவட்டங்களின் மத்தியில் ஒவ்வொரு மாவட்ட சனத்தொகைக்கும், நாட்டின் மொத்த சனத்தொகைக்குமுள்ள விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒதுக்கப்பட்டது.

(b) ஒவ்வொரு பாடத்திற்குமுள்ள இடங்களில் 5% கீழே குறிப்பிடப்பட்டபடி கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களின் மத்தியில் மாவட்ட சனத் தொகைக்கும், 16 மாவட்டங்களின் மொத்த சனத்தொகைக்குமுள்ள விகிதத்தில் ஒதுக்கப்பட்டது

| | |
|---|---|
| நுவரெலியா | மட்டக்களப்பு |
| ஹம்பாந்தோட்டை | அம்பாறை |
| யாழ்ப்பாணம் | புத்தளம் |
| கிளிநொச்சி | அனுராதபுரம் |
| மன்னார் | பொலன்னறுவை |
| முல்லைத்தீவு | பதுளை |
| வவுனியா | மொனறாகலை |
| திருகோணமலை | இரத்தினபுரி |

கலையை விட ஏனைய பாடநெறிகளுக்கு மாணவர்களை அனுமதிக்கையில் கூட ஏதாவது மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மாவட்ட ஒதுக்கீடு 1993/94 அல்லது 2002/2003 கல்வியாண்டுகளில அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மாவட்ட ஒதுக்கீட்டில் எது அதிகமாக இருக்கின்றதோ அதைவிட குறைவாக இல்லாதிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

2011/2012 மற்றும் 2012/2013ம் கல்வியாண்டுகளுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கான தெரிவுகளுக்காக மேற்குறிப்பிட்ட கொள்கை பின்பற்றப்பட்டது.

(5) (a) 2011/2012 கல்வியாண்டிற்கு மொத்தமாக 141,411 பரீட்சார்த்திகள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிற்கும் தகுதியை பெற்றிருந்ததுடன், இவ் ஆண்டில் உயர் கல்வி நிறுவனங்களுக்கு சாதாரண மற்றும் விசேட ஏற்பாடுகளில் மேலே விளக்கப்பட்ட வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு 28,908 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது. கடந்த கல்வியாண்டுடன் ஒப்பிடும் போது, சாதாரண மற்றும் விசேட ஏற்பாடுகளின் கீழ் இது 6,892 மாணவர்களினால் அதிகரித்துள்ளது. தொழில் சார்ந்த பாடநெறிகளான தகவல் தொழில் நுட்பம், பிரயோக விஞ்ஞானங்கள், மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் போன்ற துறைகளில் பாரிய அதிகரிப்புக்கள் காணப்படுகின்றன.

(b) 2012/2013 கல்வியாண்டிற்காக புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு மொத்தமாக 144,816 பரீட்சார்த்திகள் தகமை பெற்றிருந்தார்கள். அவ்வருடத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களில் 22,943 பேருக்கு உயர் கல்வி நிறுவனங்களுக்கு சாதாரண விதிமுறைகளின் கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

சென்ற வருடங்களுடன் ஒப்பிடும் போது 2011/2012 மற்றும் 2012/2013 கல்வியாண்டிற்கு சாதாரண விதிமுறைகளின் கீழ் ஒவ்வொரு பாடநெறிக்கும்

அனுமதி வழங்கப்பட்ட மொத்த மாணவர்கள் எண்ணிக்கையின் விபரம் பின்வருமாறு;

| இல | பாட நெறி | 2012 / 2013 | | | 2011 / 2012 | | | 2010 / 2011 தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2009 / 2010 தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | புதிய பாட விதானம் | பழைய பாடத்திட்டம் | தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | புதிய பாடத்திட்டம் | பழைய பாடத் திட்டம் | தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | | |
| 1 | மருத்துவம் | 945 | 262 | 1,207 | 470 | 845 | 1,315 | 1,147 | 1,147 |
| 2 | பல் விஞ்ஞானம் | 60 | 31 | 91 | 44 | 71 | 115 | 77 | 77 |
| 3 | விலங்கு விஞ்ஞானம் | 74 | 35 | 109 | 55 | 91 | 146 | 102 | 100 |
| 4 | விவசாயம் | 396 | 129 | 525 | 187 | 450 | 637 | 678 | 701 |
| 5 | உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | 89 | 33 | 122 | 62 | 96 | 158 | 100 | 100 |
| 6 | உயிரியல் விஞ்ஞானம் | 951 | 292 | 1,243 | 435 | 959 | 1,394 | 1,101 | 1,103 |
| 7 | பிரயோக விங்ஞானம் (உயிரியல்) | 147 | 40 | 187 | 88 | 140 | 228 | 176 | 128 |
| 8 | இயந்திரவியல் | 1,334 | 118 | 1,452 | 790 | 772 | 1,562 | 1,247 | 1,223 |
| 9 | இயந்திரவியல (EM) | 46 | 26 | 72 | 39 | 45 | 84 | 50 | 49 |
| 10 | இயந்திரவியல (TM) | 46 | 26 | 72 | 38 | 49 | 87 | 50 | 49 |
| 11 | கணியஅளவையியல் | 87 | 26 | 113 | 63 | 84 | 147 | 100 | 98 |
| 12 | கணனி விஞ்ஞானம் | 227 | 33 | 260 | 133 | 184 | 317 | 237 | 263 |
| 13 | பேளதிக விஞ்ஞானம் | 1,543 | 244 | 1,787 | 780 | 1,174 | 1,954 | 1,650 | 1,715 |
| 14 | அளவையியல் விஞ்ஞானம் | 49 | 24 | 73 | 48 | 54 | 102 | 62 | 67 |
| 15 | பிரயோக விஞ்ஞானம் (பௌதிகவியல்) | 320 | 61 | 381 | 157 | 269 | 426 | 320 | 344 |
| 16 | முகாமைத்துவ கற்கைகள | 3,331 | 161 | 3,492 | 2,713 | 1,287 | 4,000 | 3,287 | 3,270 |
| 17 | சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் | 57 | 24 | 81 | 49 | 45 | 94 | 61 | 60 |
| 18 | வணிகவியல் | 489 | 43 | 532 | 378 | 281 | 659 | 468 | 472 |
| 19 | குலை | 3,972 | 364 | 4,336 | 3,491 | 2,454 | 5,945 | 3,806 | 3,802 |
| 20 | கலை (SP) | 131 | 15 | 146 | 93 | 80 | 173 | 150 | 146 |
| 21 | கலை (SAB) | 183 | 15 | 198 | 123 | 110 | 233 | 198 | 198 |
| 22 | முகாமைத்துவ கற்கைகள் (TV) | 138 | 52 | 190 | 145 | 148 | 293 | 184 | 157 |
| 23 | கட்டடக்கலை | 42 | 12 | 54 | 46 | 46 | 92 | 54 | 55 |
| 24 | வடிவமைப்பு (கட்டடக்கலை) | 42 | 6 | 48 | 13 | 23 | 46 | 49 | 50 |
| 25 | சட்டம் | 328 | 33 | 361 | 319 | 126 | 445 | 348 | 346 |
| 26 | தகவல் தொழில் நுட்பம் | 148 | 53 | 201 | 64 | 137 | 201 | 149 | 98 |
| 27 | முகாமைத்துவமும் தகவல் தொழில் | 38 | 22 | 60 | 29 | 46 | 75 | 49 | 49 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நுட்பமும் | | | | | | | | |
| 28 | பொது முகாமைத்துவம் | 70 | 25 | 95 | 67 | 51 | 118 | 75 | 75 |
| 29 | தொடர்பாடல் கற்கைகள் | 43 | 5 | 48 | 34 | 27 | 61 | 50 | 48 |
| 30 | பட்டினமும், நாடும் திட்டமிடல் | 48 | 24 | 72 | 46 | 39 | 85 | 51 | 50 |
| 31 | சமாதானமும், முரண்பாடு தீர்த்தலும் | 30 | 3 | 33 | 25 | 16 | 41 | 34 | 36 |
| 32 | ஆயுர்வேத மருத்துவமும், அறுவைச் சிகிச்சையும் | 202 | 68 | 270 | 77 | 208 | 285 | 277 | 289 |
| 33 | யுனானி மருத்துவமும், அறுவைச் சிகிச்சையும் | 49 | 24 | 73 | 27 | 38 | 65 | 54 | 55 |
| 34 | நவநாகரீக வடிவமைப்பும், உற்பத்தி அபிவிருத்தியும் | 32 | 6 | 38 | 25 | 19 | 44 | 39 | 39 |
| 35 | உணவு விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் | 71 | 34 | 105 | 48 | 85 | 133 | 91 | 87 |
| 36 | சித்த மருத்துவம் | 58 | 14 | 72 | 34 | 46 | 80 | 71 | 70 |
| 37 | தாதியியல் | 135 | 68 | 203 | 70 | 188 | 258 | 206 | 203 |
| 38 | தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும் | 116 | 32 | 148 | 73 | 125 | 198 | 230 | 228 |
| 39 | விவசாய தொழில் நுட்பமும் முகாமைத்துவமும் | 142 | 60 | 202 | 75 | 178 | 253 | 203 | 00210 |
| 40 | சுகாதார விருத்தி | 38 | 27 | 65 | 30 | 49 | 79 | 51 | 49 |
| 41 | மருந்தகவியல் | 72 | 40 | 112 | 50 | 98 | 148 | 102 | 103 |
| 42 | மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | 63 | 44 | 107 | 44 | 98 | 142 | 100 | 99 |
| 43 | ஊடுகதிர்படமெடுப்பு | 31 | 24 | 55 | 32 | 40 | 72 | 36 | 34 |
| 44 | இயன் மருத்துவம் | 42 | 34 | 76 | 31 | 59 | 90 | 60 | 59 |
| 45 | சூழல் பேணலும், முகாமைத்துவமும் | 37 | 28 | 65 | 29 | 49 | 78 | 51 | 49 |
| 46 | வசதிகள் முகாமைத்துவம் | 47 | 22 | 69 | 42 | 42 | 84 | 51 | 49 |
| 47 | போக்குவரத்தும், தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும் | 45 | 24 | 69 | 32 | 47 | 79 | 51 | 49 |
| 48 | மூலக்கூற்று உயிரியலும், உயிரிரசாயனவியலும் | 49 | 29 | 78 | 40 | 53 | 93 | 60 | 59 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 49 | கைத்தொழில் புள்ளிவிபரவியலும்,கணிதவியல் நிதியும் | 77 | 24 | 101 | 37 | 54 | 91 | 60 | 58 |
| 50 | புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும் | 42 | 21 | 63 | 34 | 48 | 82 | 51 | 49 |
| 51 | கணக்கிடலும், முகாமைத்துவமும் | 47 | 25 | 72 | 46 | 37 | 83 | 51 | 50 |
| 52 | மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானமும். | 43 | 25 | 68 | 35 | 58 | 93 | 60 | 61 |
| 53 | இஸ்லாமியக் கற்கைகள் | 194 | 4 | 198 | 123 | 50 | 173 | 150 | 98 |
| 54 | விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் | 39 | 23 | 62 | 20 | 51 | 71 | 50 | 49 |
| 55 | கணனி விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் | 40 | 25 | 65 | 30 | 49 | 79 | 49 | 49 |
| 56 | தொழில் முயற்சியும், முகாமைத்துவக் கற்கைகளும் | 49 | 17 | 66 | 24 | 48 | 72 | 51 | 49 |
| 57 | விலங்கு விஞ்ஞானம் | 35 | 25 | 60 | 10 | 49 | 59 | 50 | 49 |
| 58 | சங்கீதம் | 338 | 26 | 364 | 234 | 128 | 362 | 307 | 319 |
| 59 | நடனம் | 295 | 32 | 327 | 221 | 109 | 330 | 293 | 288 |
| 60 | சித்திரமும், வடிவமைப்பும் | 25 | 3 | 28 | 14 | 4 | 18 | 29 | 29 |
| 61 | நாடகமும், அரங்கும் | 74 | 12 | 86 | 60 | 46 | 106 | 68 | 70 |
| 62 | கட்புலமும், தொழில் நுட்பவியல் கலையும் | 45 | 5 | 50 | 36 | 21 | 57 | 50 | 50 |
| 63 | ஏற்றுமதி விவசாயம் | 32 | 24 | 56 | 4 | 50 | 54 | 49 | 49 |
| 64 | தேயிலை தொழில்நுட்பமும், பெறுமதி சேர்ப்பும் | 33 | 23 | 56 | 6 | 40 | 46 | 50 | 49 |
| 65 | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | 47 | 16 | 63 | 18 | 44 | 62 | 51 | 49 |
| 66 | கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் | 33 | 20 | 53 | 13 | 39 | 52 | 50 | 49 |
| 67 | வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு) | 46 | 24 | 70 | 45 | 36 | 81 | 51 | 50 |
| 68 | முகாமைத்துவமும், தகவல் தொழில்நுட்பமும் (இதெகிப) | 84 | 27 | 111 | 71 | 56 | 127 | 81 | 81 |
| 69 | கணக்கிடலும், தகவல் முறைமைகளும் | 57 | 21 | 78 | 7 | 42 | 49 | 80 | 80 |
| 70 | உடற்றொழில் கல்வி | 41 | 16 | 57 | 7 | 11 | 18 | 35 | 37 |
| 71 | விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | 63 | 20 | 83 | 34 | 38 | 72 | 35 | 37 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 72 | பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும் | 38 | 31 | 69 | 38 | 48 | 86 | 51 | 49 |
| 73 | அரபு மொழி | 145 | 3 | 148 | 93 | 12 | 105 | 100 | 75 |
| 74 | கட்புலக் கலை (முன்னர் சித்திரமும், சிற்பமும்) | 86 | 12 | 98 | 55 | 39 | 94 | 67 | 58 |
| 75 | விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் | 37 | 29 | 66 | 29 | 49 | 78 | 51 | 49 |
| 76 | உணவு உற்பத்தியும், தொழில் நுட்ப முகாமைத்துவமும் | 45 | 29 | 74 | 36 | 56 | 92 | 60 | 59 |
| 77 | நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம் | 30 | 26 | 56 | 2 | 50 | 52 | 50 | 49 |
| 78 | பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | 31 | 22 | 53 | 10 | 28 | 38 | 49 | 49 |
| 79 | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | 46 | 11 | 57 | 22 | 44 | 66 | 50 | 49 |
| 80 | தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 88 | 27 | 115 | 36 | 43 | 79 | 51 | 207 |
| 81 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் *(2010/2011 வருடத்திற்கு புதியது)* | 90 | 31 | 121 | 56 | 64 | 120 | 101 | N/A |
| 82 | விவசாய வள முகாமைத்துவமும், தொழில்நுட்பமும் (முன்னர் விவசாயம், றுபக) | 111 | 41 | 152 | 54 | 125 | 179 | N/A | N/A |
| 83 | விவசாய வியாபார முகாமைத்துவம் *(2011/2012க்கு புதியது)* | 39 | 25 | 64 | 29 | 44 | 73 | N/A | N/A |
| 84 | பசுமை தொழில்நுட்பம் *(2011/2012க்கு புதியது)* | 40 | 25 | 65 | 29 | 45 | 74 | N/A | N/A |
| 85 | தகவல் முறைமைகள் (முன்னர் தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் (கொ.ப.க) | 60 | 18 | 78 | 45 | 68 | 113 | N/A | N/A |
| 86 | நிலதோற்றக் கட்டடக்கலை *(2011/2012க்கு புதியது)* | 34 | 8 | 42 | 24 | 30 | 54 | N/A | N/A |
| | **கல்வியாண்டிற்குத் தெரிவான மொத்த எண்ணிக்கை** | 19,332 | 3,611 | **22,943** | 13,470 | 13,474 | **26,944** | **20,274** | **20,111** |

### 4.2 புதிய கற்கை பாடநெறிகள்

2011/2012ம் கல்வியாண்டின் போது, மூன்று புதிய கற்கை பாடநெறிகள் - **விவசாய வியாபார முகாமைத்துவம், பசுமைத் தொழில்நுட்பம்** (றுகுணு பல்கலைக்கழகத்திலும்**), நிலத்தோற்றக் கட்டடக்கலை** (மொறட்டுவை பல்கலைக்கழகத்திலும்) - பல்கலைக்கழக முறைமையில் உள்ள கற்கை பாடநெறிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

### 4.3 விசேட ஏற்பாடுகளின் கீழ் அனுமதி

மேற்குறிப்பிடப்பட்ட சாதாரண ஏற்பாடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கையுடன், சென்ற வருடங்களைப் போன்று, விசேட ஏற்பாடுகளின் படி, கீழ் குறிப்பிடப்படும் பிரிவுகளின் கீழ் மாணவர் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு பிரிவுகள் தொடர்பாக 2011/2012ம் கல்வியாண்டில் விசேட ஏற்பாடுகளின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட மாணவர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. *ஆயினும் 2012/2013ம் கல்வியாண்டிற்கு விசேட ஏற்பாடுகளின் கீழ் அனுமதி வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2013 இறுதி வரை பூர்த்தி செய்யப்படவில்லை.*

#### (a) தேசிய/சர்வதேச மட்டத்தில் கல்வியை விடவும் ஏனைய துறைகளில் சிறப்படைந்த மாணவர்கள்

கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பாடநெறிகளைத் தவிர்ந்த, சகல கற்கை பாடநெறிகளின் இடங்களில் 0.5% அல்லது ஒரு இடம், இதில் எது அதிகமாகவிருக்கும் இடம் இவ் ஏற்பாட்டின் கீழ் வழங்கப்பட்து.

கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை, ஒவ்வொரு கற்கைநெறிக்கும் உள்வாங்கப்படும் இடங்களில் 4% இவ் வகையின் கீழ் அனுமதி பெறும் மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டது. தெரிவுகள் ப.மா.ஆ. குழுவினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் ப.மா.ஆ. குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடும் திட்டத்தின்படி செய்யப்பட்டன. சென்ற வருடங்களுடன் ஒப்பிடும் போது பின்வரும் எண்ணிக்கையானோர் இவ்வாறு 2011/2012ம் வருட கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்டனர்:

| பாட நெறி | | 2011/2012 | | | 2010/2011 தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2009/2010 தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பழைய பாட விதானம் | புதிய பாட விதானம் | தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | | |
| 1. | மருத்துவம் | 03 | 03 | 06 | 06 | 06 |
| 2. | பல் விஞ்ஞானம | 01 | 01 | 02 | 01 | 01 |
| 3. | விலங்கு விஞ்ஞானம | 01 | - | 01 | 01 | 01 |
| 4. | விவசாயம் | 02 | 01 | 03 | 03 | 04 |
| 5. | உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | - | - | - | 01 | 01 |
| 6. | உயிரியல் விஞ்ஞானம் | 04 | 02 | 06 | 05 | 05 |
| 7. | பிரயோக விங்ஞானங்கள் (உயிா விஞ்.) | - | - | - | 01 | 01 |
| 8. | இயந்திரவியல் | 03 | 05 | 08 | 06 | 06 |
| 9. | இயந்திரவியல் (EM) | 01 | 01 | 02 | 01 | 01 |
| 10. | இயந்திரவியல் (TM) | 01 | - | 01 | 01 | 01 |
| 11. | கணிய அளவையியல் | 01 | 01 | 02 | 01 | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12. | கணனி விஞ்ஞானம் | 01 | 01 | 02 | 01 | 01 |
| 13. | பௌதிக விஞ்ஞானம் | 03 | 04 | 07 | 08 | 09 |
| 14. | அளவையியல் விஞ்ஞானம் | - | - | - | 01 | 01 |
| 15. | பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்.) | 01 | 01 | 02 | 02 | 02 |
| 16. | முகாமைத்துவ கற்கைகள் | 02 | 11 | 13 | 17 | 17 |
| 17. | சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் | 01 | 01 | 02 | 01 | 01 |
| 18. | வணிகவியல் | 01 | 01 | 02 | 02 | 02 |
| 19. | கலை | 13 | 18 | 31 | 19 | 18 |
| 20. | கலை (SP) | - | 02 | 02 | 02 | 02 |
| 21. | கலை (SAB) | 01 | 02 | 03 | 02 | 02 |
| 22. | முகாமைத்துவம் (TV) | 01 | 01 | 02 | 02 | 02 |
| 23. | கட்டடக்கலை | - | - | - | - | 01 |
| 24. | சட்டம் | 02 | 01 | 03 | 02 | 02 |
| 25. | தகவல் தொழில் நுட்பம் | - | 01 | 01 | 01 | 01 |
| 26. | முகாமைத்துவமும், தகவல் தொழில்நுட்பமும் | 01 | - | 01 | 01 | 01 |
| 27. | பொது முகாமைத்துவம்(சிறப்பு) | - | 01 | 01 | 01 | 01 |
| 28. | தொடர்பாடல் கற்கைகள் | - | 01 | 01 | 01 | 01 |
| 29. | பட்டினமும் நாடும் திட்டமிடல் | 01 | 01 | 02 | 01 | 01 |
| 30. | சமாதானமும், முரண்பாடு தீர்த்தலும் | - | - | - | 01 | 01 |
| 31. | ஆயுர்வேத மருத்துவமும், அறுவைச் சிகிச்சையும் | - | - | - | - | 01 |
| 32. | யுனானி மருத்துவமும், அறுவைச் சிகிச்சையும் | - | - | - | - | 01 |
| 33. | நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | - | - | - | 01 | |
| 34. | உணவு விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் | 01 | - | 01 | 01 | 01 |
| 35. | சித்த மருத்துவம் | 01 | - | 01 | - | 01 |
| 36. | தாதியியல் | 01 | - | 01 | - | |
| 37. | தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும் | - | - | - | 01 | 01 |
| 38. | விவசாய தொழில் நுட்பமும் முகாமைத்துவமும் | - | - | - | 01 | 01 |
| 39. | நடனம் | - | 01 | 01 | | - |
| 40. | நடனம் (UVPA) | 03 | 05 | 08 | 07 | - |
| 41. | சங்கீதம் (UVPA) | 02 | 05 | 07 | 06 | - |
| 42. | நாடகமும், அரங்கமும் (UVPA) | - | 01 | 01 | 01 | - |
| 43. | சுகாதார விருத்தி | 01 | - | 01 | - | - |
| 44. | மருந்தகவியல் | 01 | - | 01 | 01 | 01 |
| 45. | மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | 01 | 01 | 02 | - | 01 |
| 46. | இயன் மருத்துவம் | 01 | - | 01 | - | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 47. | சூழல் பேணலும், முகாமைத்துவமும் | 01 | 01 | 02 | 01 | 01 |
| 48. | வசதிகள் முகாமைத்துவம | - | 01 | 01 | 01 | 01 |
| 49. | போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும் | 01 | 01 | 02 | 01 | 01 |
| 50. | மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் | 01 | 01 | 02 | 01 | 01 |
| 51. | கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும் | 01 | - | 01 | 01 | 01 |
| 52. | புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராயச்சியும் | - | - | - | 01 | 01 |
| 53. | கணக்கிடலும், முகாமைத்துவமும் | - | 01 | 01 | 01 | 01 |
| 54. | மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானங்களும் | - | 01 | 01 | - | 01 |
| 55. | இஸ்லாமியக் கற்கைகள் | - | - | - | - | 01 |
| 56. | விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | | - | - | 01 | 01 |
| 57. | கணனி விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் | - | - | - | - | 01 |
| 58. | தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | - | - | - | 01 | 01 |
| 59. | விலங்கு விஞ்ஞானம் | - | - | - | 01 | - |
| 60. | சங்கீதம் (UJA) | - | - | - | - | 01 |
| 61. | சங்கீதம் (UVPA) | - | - | - | - | 07 |
| 62. | சங்கீதம (UVPA) | - | - | - | - | 06 |
| 63. | நாடகமும், அரங்ககும் (SVIAS) | 01 | 01 | 02 | 01 | 01 |
| 64. | ஏற்றுமதி விவசாயம் | - | - | - | 01 | 01 |
| 65. | தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | - | - | - | 01 | 01 |
| 66. | கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | - | - | - | 01 | 01 |
| 67. | கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் | - | - | - | 01 | 01 |
| 68. | வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு) | - | - | - | 01 | 01 |
| 69. | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (இதெகிப) | - | 01 | 01 | 01 | 01 |
| 70. | கணக்கிடலும், தகவல் முறைமைகளும் | - | - | - | 01 | 01 |
| 71. | உடற்றொழில் கல்வி | - | - | - | 01 | 01 |
| 72. | விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைமத்துவமும | - | - | - | 01 | 01 |
| 73. | பேச்சும் செவிமடுத்தலும் விஞ்ஞானம் | 01 | 01 | 02 | 01 | 01 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 74. | கட்புல கலை(முன்னர் சித்திரமும் சிற்பமும் (UVPA) | - | - | - | - | 02 |
| 75. | விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் | - | 01 | 01 | 01 | - |
| 76. | உணவு உற்பத்தியும் தொழில் நுட்ப முகாமைத்துவமும் | - | - | - | 01 | - |
| 77. | விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | - | - | - | 01 | 01 |
| 78. | தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 01 | - | 01 | 01 | 01 |
| 79. | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் *(2010/2011 வருடத்திற்கு)* | - | 01 | 01 | 01 | N/A |
| 80. | விவசாய வள முகாமைத்துவமும் தொழில்நுட்பமும் (முன்னர் விவசாயம், றுபக) | 01 | 01 | 02 | N/A | N/A |
| 81. | விவசாய வியாபார முகாமைத்துவம் *(2011/2012க்குரிய புதியது)* | 01 | 01 | 02 | N/A | N/A |
| 82. | பசுமை தொழில்நுட்பம் *(2011/2012க் குரியது)* | 01 | - | 01 | N/A | N/A |
| 83. | தகவல் முறைமைகள் (முன்னர் தகவல் தொடர்பாடலும், தொழில்நுட்பமும்(கொபக) | 01 | - | 01 | N/A | N/A |
| | **கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை** | **69** | **87** | **156** | **138** | **144** |

### (b) இலங்கை பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டுத் தகமைகள் கொண்ட மாணவர்களை அனுமதித்தல்

ஏற்கனவே உள்ள் சட்ட, ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப, மீள்பார்வையிலுள்ள ஆண்டின் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிக்கு வெளிநாட்டு தகைமைகளையுடைய மாணவர்களுக்கான அனுமதி கைநூலில வெளிநாட்டுத் தகமைகள் கொண்ட விண்ணப்பதாரிகளுக்காக விபரிக்கப்பட்ட விதிகளுக்கு அமைவாக, ஒவ்வொரு பாடநெறிக்குமுள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கையின் 0.5% க்கு வெளிநாட்டு தகமைகளையுடைய மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன்படி, இலங்கைக்கு வெளியே நடாத்தப்பட்ட க.பொ.த உ/ப க்குச் சமமாகக் கருதப்படும் வெளிநாட்டுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பரிச்சார்த்திகள், இப் பிரிவில் கருதப்பட்டு, பின்வரும் எண்ணிக்கைகள் அவ்வாறு தெரிவு செய்யப்பட்டன்

| பாட நெறி | | 2011/2012க்கு தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2010/2011க்கு தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2009/2010 க்கு தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | மருத்துவம் | 06 | 06 | 07 |
| 2. | பல் அறுவை விஞ்ஞானம் | 01 | - | 01 |
| 3. | விலங்கு விஞ்ஞானம் | 01 | - | - |
| 4. | இயந்திரவியல் | 04 | 01 | 02 |
| 5. | பௌதீக விஞ்ஞானம் | 02 | - | - |
| 6. | முகாமைத்துவ கற்கைகள் | - | - | 01 |
| 7. | கணனி விஞ்ஞானம் | - | 01 | - |
| 8. | உயிரியல் விஞ்ஞானம் | - | 01 | - |
| | **மொத்தம்** | **14** | **09** | **11** |

அத்துடன், 2011லிருந்து வெளிநாடுகளில் தகைமைகளைப் பெற்ற வெளிநாட்டு மாணவர்களுக்கும், உள்நாட்டு மாணவர்களுக்கும் ஒவ்வொரு பாடநெறிக்குமாக ஒதுக்கப்பட்ட **முன்மொழியப்பட்ட உள்வாங்கலுக்கு மேலாக** 4.5% இடங்கள் **கட்டணம் அறவிடப்படும் அடிப்படையில்** பின்வருமாறு ஒதுக்கப்பட்டுள்ளன்

| பாட நெறி | | 2011/2012க்கு தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2010/2011க்கு தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மருத்துவம் | 36 | 12 |
| 2. | பல் அறுவைச் சிகிச்சை | 03 | 4 |
| 3. | இயந்திரவியல் | 02 | - |
| | **மொத்தம்** | **41** | **16** |

## (c) பாதுகாப்புச் சேவை ஆளணியினர்

இவ் ஏற்பாட்டின் கீழ் யுத்தப் பகுதிகளில் சேவையாற்றும் முப்படை, பொலீஸ் சேவை, விசேட சேவைப் படை ஆகியவற்றின் ஆளணியினருக்கு மருத்துவம், பல் அறுவைச் சிகிச்சை, இயந்திரவியல் ஆகிய பாடநெறிகளுக்குரிய இடங்களில் 0.5% அல்லது ஓர் இடம் - இதில் கூடவுள்ள இடத்தை ஒதுக்கப்பட்டுள்ளது. இப் பிரிவில் தெரிவான மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு

| பாடநெறி | 2011/2012 | | | தெரிவானோர் எண்ணிக்கை 2010/2011 | தெரிவானோர் எண்ணிக்கை 2009/2010 |
|---|---|---|---|---|---|
| | பழைய பாடத்திட்டம் | புதிய பாடத்திட்டம் | தெரிவானோர் எண்ணிக்கை | | |
| மருத்துவம் | 02 | 06 | 08 | 06 | 06 |
| பல் அறுவை விஞ்ஞானம் | 01 | - | 01 | 01 | 01 |
| இயந்திரவியல் | 04 | 04 | 08 | 06 | 06 |
| **மொத்தம்** | **07** | **10** | **17** | **13** | **13** |

**(d) விசேட பபாடங்களுக்கான மேலதிக உள்வாங்களின் கீழ் அனுமதி**

பின்வரும் பாடங்களைக் கற்பதை ஊக்கப்படுத்தும் பொருட்டு, ப.மா.ஆ. குழு மொத்தமாக 1563 மாணவர்களை 2011/ 2012 ம் கல்வியாண்டில் அனுமதிப்பதற்கு விசேட ஏற்பாடுகளை செய்தது

அரபு
தொல்பொருளியல்
பௌத்தம்
பௌத்த நாகரீகம்
வணிக புள்ளிவிபரம்
சீன மொழி
கிறிஸ்தவம்
கிறிஸ்தவ நாகரீகம்
ஒப்பீட்டு சமயங்கள்
நடனம்
பொருளியல்
புவியியல்
கல்வியும், சிறார் பாதுகாப்பும்
ஆங்கிலம்
நுண்கலை (கலை)
பிரஞ்சு
நுண்கலை (சங்கீதம், நடனம், கலை)
தமிழ்
சமூகவியல்
ஜெர்மனி
மேற்கத்திய பாம்பரிய கலாச்சாரம்
ஹிந்தி
இந்து சமயம்
வரலாறு
வீட்டுப் பொருளாதாரம்
இந்து நாகரீகம்
இஸ்லாம்
இஸ்லாமிய நாகரீகம்
ஜப்பானியம்
மொழியியல்
இலக்கிய திறனாய்வு
பாலி
ருஷியம்
சமஸ்கிருதம்
சங்கீதம்
தர்க்கவியல்
அரசியல் விஞ்ஞானம்
சிங்களம்
கட்புல கலை

**(e) விழிப்புணர்வற்ற மற்றும் மாற்று திறனாளிகளுக்கான அனுமதி**

2011/2012ம் கல்வியாண்டில் பின்வரும் பிரிவுகளின் கீழ் மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு செய்தது;

| பாட நெறி | 2011/2012 | | | தெரிவானோர் எண்ணிக்கை 2010/2011 | தெரிவானோர் எண்ணிக்கை 2009/2010 |
|---|---|---|---|---|---|
| | பழைய பாடத்திட்டம் | புதிய பாடத்திட்டம் | தெரிவானோர் எண்ணிக்கை | | |
| விழிப்புணர்வற்ற மாணவர்கள் | 06 | 17 | 23 | 20 | 10 |
| மாற்று திறனாற்றலுள்ள மாணவர்கள் | 22 | 32 | 54 | 44 | 52 |
| **மொத்தம்** | **28** | **49** | **77** | **64** | **62** |

**(f) ஆங்கிலத்தில் சித்தியுடன் அதை ஒரு பாடமாகக் கொண்ட 2007 அல்லது அதற்குப் பின்னர் பொ.க.த (வெளிவாரி) பரீட்சையில் அல்லது பொ.வி.த (வெளிவாரி) பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கள்**

2011/2012 ம் கல்வியாண்டில் இப் பிரிவின் கீழ் ஆங்கிலப் பாடத்தைக் கொண்ட கலைப் பட்டமானி கற்க மொத்தமாக **15** மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

| தெரிவானோர் எண்ணிக்கை 2011/2012 | தெரிவானோர் எண்ணிக்கை 2010/2011 | தெரிவானோர் எண்ணிக்கை 2009/2010 |
|---|---|---|
| 15 | 22 | 12 |

### 4.4 பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான மேன்முறையீடுகள்

ஒவ்வொரு வருடமும் ப.மா.ஆ.குழு பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக மேன்முறையீடுகளைக் கவனிக்கவும், கிடைக்கப்பெற்ற குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யவும் ஒரு குழுவினை நியமிக்கும். இவ்வாறு குழுவின் உறுப்பினர்களாக பேராசிரியர் ஷனிக்கா கிறிம்புறேகம (தலைவர்/பமாஆ), பேராசிரியர் ரன்ஜித் சேனாரத்ன (உப-தலைவர்/பா.மா.ஆ), பேராசிரியர் எஸ். மோகனதாஸ் (உறுப்பினர்/பமாஆ), பேராசிரியர் மல்காந்தி சந்திரசேகர (உறுப்பினர்/பமாஆ), பேராசிரியர் சரத் அமுனுகம, (உப-வேந்தர்/களனி பல்கலைக்கழகம்), கலாநிதி பிரியந்த பிரேமகுமார (மேலதிக செயலாளர் /கல்விசார் விவகாரமும் பல்கலைக்கழக அனுமதிகளும்) ஆகியோர் நியமிக்கப்பட்டனர். மொத்தமாக 2478 மேன்முறையீடுகள் குழுவிற்கு கிடைக்கப்பெற்றன. அவைகளில் 900 விண்ணப்பதாரிகள் தமது கற்கைநெறி அனுமதிக்கான தகைமைகளை பூர்த்தி செய்கின்ற மற்றைய கற்கைநெறிகளுக்கு மாற்றுவதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். குழு அவ்வாறான கற்கைநெறிகளை மாற்றுவதற்காக 341 மேன்முறையீடுகளையும், சூழ்நிலைகளை கவனத்திற்கு கொண்டு ஏனைய 155 மேன்முறையீடுகளுக்கும் சிபாரிசு வழங்கியது.

### 4.5 பல்கலைக்கழக அனுமதி பற்றி பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பமாஆணைக்குழுவின் கூட்டவைத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள நோக்கங்கள், நடவடிக்கைகளுக்கு இணங்க, பல்கலைக்கழக அனுமதி பற்றி பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வு வருடத்தில் பிராந்தியங்களில் நடாத்தப்பட்டன. க.பொ.த உயர்தர ஆசிரியர்கள், எதிர்பார்ப்புள்ள மாணவர்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள பகுதியார்களிடையே பல்கலைக்கழக வாய்ப்புக்கள், அனுமதிக்கான செயல்முறைகள் ஆகியன பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

இச் செயலமர்வுகள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை போன்ற நிர்வாக மாவட்டங்களில் வருடம் முழுவதும் பிரபல்ய பாடசாலைகளில் நடாத்தப்பட்டன. அத்துடன் பல்கலைக்கழக கல்வியில் அண்மைக்கால அபிவிருத்திகள் பற்றி பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அச்சு ஊடகங்கள் ஊடாகவும் நடாத்தப்பட்டன.

பல்கலைக்கழ அனுமதிகள் பற்றி பின்வரும் புள்ளிவிபர அட்டவணைகள் இந்த அறிக்கைக்கு இணைப்பாக தரப்பட்டுள்ளன்;

1. 2011/2012 ஆம் கல்வியாண்டிற்கான அனுமதிகள் மாவட்ட மற்றும் கற்கை நெறி வாரியான வகைப்படுத்துதல் ***(இணைப்பு I)***
2. வழமையான மற்றும் விசேட உள்ளெடுக்கையின் கீழ் 2011/2012 ஆம் கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதி ***(இணைப்பு II)***

## 5. கல்வித்துறை அபிவிருத்தியும், கல்வித்துறை தராதரங்களைப் பேணுதலும்

### 5.1 நிலையான குழுக்கள்

1978ம் ஆண்டின் 16ம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழக சட்டம் 4(2) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி, ப.மா. ஆணைக்குழு நிலையான குழுக்களை நிறுவியுள்ளது. ப.மா. ஆணைக்குழுவிற்கு உயர் கல்வியின் குறிப்பிட்ட பகுதிகள் தொடர்பான விடயங்களையிட்டு அறிக்கைகளையும், சிபாரிசுகளைச் செய்வது ஒவ்வொரு நிலையான குழுக்களினதும் பொறுப்பாகும். இதற்கமைய, 2013ம் வருடத்தில், ப.மா. ஆணைக்குழுவில் பல்வேறு துறைகளுக்காக பதினாறு (16) நிலையான குழுக்களும்,

ஏனைய ஒரு (01) நிலையான குழுவும் செயற்பட்டன. ஒவ்வொரு நிலையான குழுக்களின் கீழ் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கைகள் பின்வருமாறு;

| | நிலையான குழுவின் பெயர் | 2013ல் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | 2012ல் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | விவசாயம், விலங்கு வைத்தியம் மற்றும் விலங்கு விஞ்ஞானங்கள் | 04 | 05 |
| 2. | நூலகங்களும், தகவல் விஞ்ஞானங்களும் | 04 | 04 |
| 3. | ஆங்கிலம் கற்பித்தல் | 06 | 06 |
| 4. | பல்கலைக்கழகங்களில் தொழில் வழிகாட்டலும், மாணவர் நலனோம்பலும் | 09 | 06 |
| 5. | விஞ்ஞானங்கள் | 06 | 06 |
| 6. | பட்டப்பின்படிப்பும், ஆய்வும் | 05 | 04 |
| 7. | மானிடவியல், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் கல்வி | 05 | 02 |
| 8. | முகாமைத்துவக் கற்கைகள் | 06 | 06 |
| 9. | பொறியியலும், கட்டடக்கலையும் | 05 | 06 |
| 10. | மருத்துவமும், பல் விஞ்ஞானங்களும் | 06 | 05 |
| 11. | கணனி ( முன்பு தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி என்று குறிப்பிடப்பட்டது) | 07 | 06 |
| 12. | நியம உறுதிப்படுத்தலும், அங்கீகரித்தலும் | 04 | 05 |
| 13. | சுதேச மருத்துவம் | 06 | 06 |
| 14. | வெளிவாரி பட்டங்கள் | 03 | 02 |
| 15. | தொழில் நுட்ப பிரிவு ***(2013ல் அங்கீகரிக்கப்பட்ட நிலையான குழு)*** | 04 | N/A |
| 16. | பல்கலைக்கழகங்களின் ஆளணியினர் அபிவிருத்தி | 02 | 03 |

**ஏனைய குழுக்கள்**

| | | |
|---|---|---|
| தகைமைகள்/பட்டங்கள் வழங்கும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பங்களை ஆராயும் குழு | 02 | 04 |

## 5.2 இளமானிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்

பல்வேறு பீடங்கள்/பல்கலைக்கழகங்களினால் வைக்கப்பட்ட முன்மொழிவுகளைக் கருத்திலெடுத்து, ஆய்விலுள்ள வருடத்தில் பின்வரும் 12 இளமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆணைக்குழு அனுமதி வழங்கியது

1. விளையாட்டு விஞ்ஞானமும், முகாமைத்துவத்திலும் இளங்கலை விஞ்ஞான பட்டமானி, பிரயோக விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகம்

2. நீர்வாழ் மூலவளங்கள் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளங்கலைப் பட்டமானி, உவா வெல்லச பல்கலைக்கழகம், பதுளை

3. பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளங்கலைப் பட்டமானி, உவா வெல்லச பல்கலைக்கழகம், பதுளை

4. விவசாய தொழில்நுட்ப இளங்கலைப் பட்டமானி, கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள் நிறுவனம் (UCIARS), ஹம்பாந்தோட்டை

5. முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் விஞ்ஞான இளங்கலைமானி பட்டமானி, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

6. கைத்தொழில் தகவல் தொழில நுட்ப இளங்கலை பட்டமானி, உவா வெல்லச பல்கலைக்கழகம், பதுளை.

7. இரசாயனவியலில் (விசேட) விஞ்ஞான இளங்கலை பட்டமானி, பிரயோக விஞ்ஞான பீடம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

8. பிரயோக உயிரியல் (விசேட) விஞ்ஞான இளமாணி பட்டமானி, பிரயோக விஞ்ஞான பீடம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

9. கணனி தகவல் முறைமைகள் இளமாணி பட்டமானி, பிரயோக விஞ்ஞான பீடம், இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம

10. கலை இளமாணி பட்டமானி (மொழிபெயர்த்தல் கற்கைகள்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

11. பள்ளிவிபரவியலுடன கணித விசேட இளமாணி பட்டமானி நிகழ்ச்சித் திட்டம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம

12. கலை இளமாணி பட்டமானி (விசேடம்) மொழிபெயர்ப்பு - மூன்று பல்கலைக்கழகங்களில் முறையே: களனி பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழம் மற்றும் இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம்

## 5.3 பட்டப்பின்படிப்பு பட்டமானி நிகழ்ச்சித் திட்டங்கள்

சென்ற வருடத்தின் 6 பட்ப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை ஒப்பிடும் போது, 2013ம் வருடத்தில் ப.மா. ஆணைக்குழு பட்டப்பின்படிப்பு பட்டமானி நிகழ்ச்சித் திட்டங்களை அனுமதிக்க முறையான மதிப்பீடு மற்றும் மீள்பார்வை பொறிமுறையைக் கொண்டு, பின்வரும் 28 பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுமதியளித்தது.

1. தேக அமைப்பியல் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் (PGIM), கொழும்பு பல்கலைக்கழகம்

2. மருத்துவ உடற்கூற்றுவியலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்

3. தொழில் பாதுகாப்பும், சுகாதார முகாமைத்துவமும் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, மொறட்டுவை பல்கலைக்கழகம்

4. வெகுசன ஊடகக் கற்கைகள் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவும், முதுமாணி பட்டமானியும், ஸ்ரீபாளி வளாகம், கொழும்பு பல்கலைக்கழகம்

5. சமூகவியல் முதுமாணி, மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம், றுகுணு பல்கலைக்கழகம்.

6. மருத்துவ பூச்சியியல் மற்றும் பிரயோக ஒட்டுண்ணியியல் விஞ்ஞான முதுமானி- மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

7. நுண்கலை முதுமானி, மானிடவியல் பீடம், களனி பல்கலைக்கழகம்.

8. விஞ்ஞான முதுமானி, பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, ஊடக தொழில் நுட்பங்கள், மொறட்டுவை பல்கலைக்கழகம்

9. நிலைநிறுத்தல் செயல்முறை அபிவிருத்தியில் விஞ்ஞான முதுமானி, பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, பொறியில் பீடம், மொறட்டுவை பல்கலைக்கழகம்

10. கலை முதுமானி (கட்புல கலை), கட்புல பீடம், கட்புல, அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்

11. விவசாயப் பொருளாதாரமும், அபிவிருத்தியும் முதுமானி, விவசாய பீடம், றுஹுணு பல்கலைக்கழகம்

12. மானிட ஊட்டச்சத்து விஞ்ஞான முதுமானி, மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

13. சந்தைப்படுத்தல பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, வணிகமும், முகாமைத்துவமும் பீடம், களனி பல்கலைக்கழகம்

14. நசுற்றாடல் உயிரியல்தொழில் நுட்பம் பட்டப்பின்படிப்பு, விவசாயமும், பெருந்தோட்டமும் பீடம், இலங்கை வயம்பா பல்கலைக்கழகம்.

15. தமிழ் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, தமிழ் கலை முதுமானி, தமிழ் தர்க்வியலில் முதுமாணி, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில்

16. கயாசிகிற்சா பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, கம்பஹா விக்ராமாச்சி ஆயுர்வேத நிறுவகம்

17. பஞ்சகர்ம பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, கம்பஹா விக்ராமாச்சி ஆயுர்வேத நிறுவகம்

18. கயாசிகிற்சா விஞ்ஞான முதுமானி, கம்பஹா விக்ராமாச்சி ஆயுர்வேத நிறுவகம்

19. பஞ்சகர்ம விஞ்ஞான முதுமானி, கம்பஹா விக்ராமாச்சி ஆயுர்வேத நிறுவகம்

20. தொழிலுரிமைத்துவமும், புதிய முயற்சி புதுமையாக்கம் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (பனுனி னை நுவெசநிசநநெரசளாநி), இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

21. வணிக நிர்வான முதுமானி (MBA): இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

22. மருத்துவக் கல்வி பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (PgCME), மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம், கொழும்பு பல்கலைக்கழகம்

23. பௌத்த கற்கைகள் கலை முதுமானிஇ கொழும்பு பல்கலைக்கழகம்

24. கல்வி முதுமானி நிகழ்ச்சி திட்டம்: இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்

25. சுற்றாடல் விஞ்ஞான முதுமானி [Msc (Env Sc)], இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம

26. பௌத்த கற்கைகள் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாஇ கொழும்பு பல்கலைக்கழகம

27. வணிக நிர்வாக முதுமானிக்கு இட்டுச் செல்லும் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழம்

28. இரண்டாம் மொழியில் இலக்கியம் கற்றலில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவும், இரண்டாம் மொழியில் இலக்கியம் கற்றலில் கலை முதுமானி, இலங்கை திறந்த பல்கலைக்கழம்.

## 5.4 பல்கலைக்கழகங்களில் வெளிவாரி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வலுவாக்குதல்

ப.மா.ஆணைக்குழு வெளிவாரிப் பட்டங்களையும், விரிவாக்கல் கற்கை நெறிகளையும் அவைகளின் பட்டமானி நிகழ்ச்சித்திட்டங்கள், விரிவாக்க பாடநெறிகளின் தரங்களை மேம்படுத்தும் நோக்காக ஒழுங்குபடுத்தியுள்ளது. அதன்படி பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிலையங்களினால் வழங்கப்படும் அவ்வாறான கற்கைநெறிகளின் தராதரங்களின் சட்டவரம்பு, தர நிர்ணயம், நடைமுறை விதிகளைக் கொண்ட கைநூல் சகல பல்கலைக்கழங்களுக்கும் வழங்கப்பட்டதுடன் அவைகள் ஐந்து வருடகாலத்திற்கு பமா ஆணைக்குழுவின் அவதானத்தின் கீழிருக்கும். இக்காலத்தில் சகல பல்கலைக்கழகங்களும் நடைமுறையிலுள்ள வெளிவாரி பரீட்சை அலகுகளை முழுமையான திறந்த தொலைக்கல்வி அலகுகளாக பமாஆணைக்குழு வகுத்தவாறு மாற்றம் செய்தல் வேண்டும்.

முகாமைத்துவம், நியமம், பொருத்தம் ஆகியவற்றை மேம்படுத்தவும், கற்றல் மூலவளங்களையும், கற்போர் ஆதரவு சேவைகளின் ஆட்சியையும் செழுமையாக்கவும் அரச, அரச சார்பற்ற பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து உலக வங்கியின் HETC நிகழ்ச்சித்திட்டத்தினால் நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

2012/2013 ல் பின்வரும் 10 வெளிவாரி பட்டமானி நிகழ்ச்சித்திட்டங்களும், 3 வெளிவாரி பாடநெறிகளும் அங்கீகரிக்கப்பட்டன்

1. விவசாய வியாபார முகாமைத்துவ பட்டமானி (பொது, வெளிவாரி), இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

2. வியாபார நிர்வாக பட்டமானி (பொது, வெளிவாரி), இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்

3. கலை பட்டமானி (வெளிவாரி) றுஹுணு பல்கலைக்கழகம்

4. மானிடவியலும், சமூக விஞ்ஞானமும் பட்டமானி (மூன்று வருடங்கள்) வெளிவாரி பட்டமானி, ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

5. வியாபர பட்டமானி (பொது) வெளிவாரி பட்டமானி நிகழ்ச்சித்திட்டம்: ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

6. வியாபர நிர்வாக விஞ்ஞான பட்டமானி (பொது) வெளிவாரி பட்டமானி நிகழ்ச்சித்திட்டம்: ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

7. முகாமைத்துவ விஞ்ஞான பட்டமானி (பொது) வெளிவாரி பட்டமானி நிகழ்ச்சித்திட்டம்: ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

8. ஆங்கிலம் கலை பட்டமானி (பொது) வெளிவாரி பட்டமானி (மூன்று வருடங்கள்) நிகழ்ச்சித்திட்டம்: ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

9. சமூக விஞ்ஞான பட்டமானி (மூன்று வருடங்கள்) சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி கற்கைகள் வெளிவாரி பட்டமானி (மூன்று வருடங்கள்) நிகழ்ச்சித்திட்டம்: ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

10. வணிக நிர்வாக பட்டமானி (பொது, வெளிவாரி), இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்

11. - கூட்டிணைந்த வணிக உயர் டிப்ளோமா
- ஆங்கிலம் சான்றிதழ்
- தகொ சான்றிதழ்

இலங்கை சப்பிரகமுவ பல்கலைக்கழகம்

**விஞ்ஞான இளமானி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் கைநூல்**

பல்கலைக்கழகங்களின் பட்டமானி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்ய வழிகாட்டியாக விஞ்ஞான பட்டமானி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கைநூல் பமா ஆணைக்குழுவின் விஞ்ஞான நிலையான குழுவின் முயற்சியினால் தயாரிக்கப்பட்டது.

## 5.5 நிறுவப்பட்ட புதிய துறைகள்

கருத்திலுள்ள வருடத்தில், தேசிய ஆர்வங்களை பூர்த்தி செய்யும் பொருட்டு புதிய துறைகளை நிறுவதற்கான முக்கிய தேவையை இனம் கண்டு குறிப்பிட்ட கற்கை பரப்பில் கல்விசார் நடவடிக்கைகளை விரிவாக்கவும் பின்வரும் ஐந்து (05) புதிய துறைகள் ஆணைக்குழுவினால் நிறுவப்பட்டன:

- யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
  வணிகத் துறை, முகாமைத்துவக் கற்கைகளும், வணிகமும் பீடம்

- இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம்
  விலங்கு மற்றும் உணவு விஞ்ஞானத் துறை, விவசாய பீடம்

- ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
  இணைந்த சுகாதார விஞ்ஞான துறை

- களனி பல்கலைக்கழகம்
  விளையாட்டு விஞ்ஞானமும், உடல்கல்வி துறை

- இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம்
  இந்து நாகரிகத் துறை

## 5.6 தொழில் நுட்ப பாடங்களை அறிமுகம் செய்தல்

கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவனத்துடன் (NIE) இணைந்து 2015ல் நடாத்தப்படவுள்ள க.பொ.த (உ/த) பரீட்சைக்காக 2013ல் தொழில் நுட்ப பாடத்தை அறிமுகம் செய்தது. பமா ஆணைக்குழு அதன்படி அறிமுகம் செய்யப்படவுள்ள தொழில் நுட்ப விஞ்ஞான கற்கைநெறிகளுக்குரிய அனுமதிக்கான தொழில் நுட்ப பாடங்களை அங்கீகரித்தது. அத்துடன் தொழில் நுட்ப துறைகளை பொருத்தமான பீடங்களின் நிறுவ உட்கட்டமைப்புக்களையும் வழங்கி ஏனைய அவசியமான ஏற்பாடுகளையும் செய்யும். 2016ல் பல்கலைக்கழகங்களில் தொழில் நுட்ப பிரிவில் குறைந்த பட்சம் 1,500 மாணவர்களைக் கொண்ட முதலாவது மாணவர் தொகுதியை அனுமதிக்க முன்யோசனை வைக்கப்பட்டுள்ளது.

## 5.7 உள்வாரி – பல்கலைக்கழக ஒற்றுமை கருத்திட்டம்

சகல சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த, பமா ஆணைக்குழுவினால் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் பல உப கருத்திட்டங்கள் இனம் காணப்பட்டு நிறைவேற்றப்படடன.

- இக் கருத்திட்டத்தின் பகுதியாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர் கல்வி அமைச்சு மற்றும் HETC கருத்திட்டத்துடன் இணைந்து சகல பல்கலைக்கழக கலாச்சார விழாவை ஒழுங்கு செய்தது. பல்கலைக்கழக மாணவர்களிடையே இன ஒற்றுமையையும், சமூக இணக்கத்தையும்

வலுவடையச் செய்யவும், கிராமத்திற்கும், பல்கலைக்கழகத்திற்குமிடையே உடன்பாடான தொடர்பாடலை மேம்படுத்தும் பொருட்டும் 2013 யூன் 20ம் திகதி ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் விழா நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தில் சுற்றுப் புறத்திலுள்ள கிராமவாசிகளை உள்ளடக்கி சுமார் 400 பேர் பங்குபற்றினார்கள்.

- பல்கலைக்கழகத்தில்/உ.க.நிலையங்களில் சகல பட்டமானி நிகழ்ச்சித்திட்டங்களிலும் "சமாதான கற்கைகள்" பாடநெறியை கட்டாயமாக்குவது என ஆணைக்குழு தீர்மானித்ததுடன், தகுந்த ஏற்பாடுகளை செய்வதற்கு அவ்வாறு அறிவிக்கப்பட்டது.

- இலங்கை மனப்பான்மையை வலுவூட்டி, தேசத்தின் ஸ்திரத்தன்மைக்கு பங்களிக்க இலங்கையின் சகல பல்கலைக்கழங்கள்/உயர் கல்வி நிறுவனங்களிலும் "ஒற்றுமை சங்கங்களை" நிறுவ கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

- சமய பெரியார்கள், சிவில் சமூக பிரபல்யமானோர்களையும் உறுப்பனர்களாக்க கொண்ட குழுக்களைக் கொண்ட ஆலோனைக்குழுவும், வழிப்படுத்தும் குழுவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அமைக்கப்பட்டன

## 5.8 அரச சார்பற்ற பட்டங்கள் வழங்கும் நிறுவனங்களை மீள்பார்வை செய்தல்

உயர் கல்வியை விருத்தி செய்யும் நோக்கத்திற்காக ஏதேனும் நிறுவனத்தை பட்டங்கள் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிப்பதற்கு 1978ம் வருட 16ம் இல பல்கலைக்கழக சட்டம் பிரிவு இல: 25 A அமைச்சருக்கு ஏற்பாட்டை வழங்குகின்றது.

பின்வரும் இரு நிறுவனங்களும் அவைகளின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள பட்டமானி, பட்டப்பின்படிப்பு டிப்ளோமா ஆகியவற்றை வழங்க 2013ம் வருடத்தின் போது, இவ் ஒவ்வொரு பட்டமானி நிகழ்ச்சித்திட்டங்களுக்குமுரிய நிறுவன மீள்பார்வைகள், நிகழ்ச்சித்திட்ட மீள்பார்வை ஆகியவைகளை நடாத்திய பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கௌரவ அமைச்சருக்கு சிபார்சு செய்யப்பட்டன;

1. 05.03.2013ல் இருந்து வரையறுக்கப்பட்ட தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலை (NSBM):

   வியாபார முகாமைத்துவ விஞ்ஞான பட்டமானி (மனித வள முகாமைத்துவம் (விசேடம்)
   வியாபார முகாமைத்துவ விஞ்ஞான பட்டமானி (இடம்பெயர்வு மேலாண்மை) (விசேடம்)
   வியாபார முகாமைத்துவ விஞ்ஞான பட்டமானி (கைத்தொழில் முகாமைத்துவம்) (விசேடம்)
   வியாபார முகாமைத்துவ விஞ்ஞான பட்டமானி (திட்ட முகாமைத்துவம் (விசேடம்)
   வியாபார முகாமைத்துவ தகவல் முறைமைகள் விஞ்ஞான பட்டமானி (விசேடம்)
   வியாபார முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா
   மனிதவள முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா
   கைத்தொழில் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா
   திட்ட முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா
   கணனி வலைப்பின்னல் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா

மென்பொருள் இயந்திரயியல் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு டிப்ளோமா

2. 09.07.2013ல் இருந்து கொழும்பு சர்வதேச கடல்சார் இயந்திரயியல் கல்லூரி (CINEC)
கடல்துறை இயந்திரயியல் (சிறப்பு) விஞ்ஞான பட்இடம் பெயர்வு மற்றும் போக்குவரத்து விஞ்ஞான பட்டமானி

## 5.9 நூலகங்கள், தகவல் விஞ்ஞானங்களின் அபிவிருத்தி

a) நாட்டிலுள்ள பல்கலைக்கழக நூலகங்களின் கல்விசார், கல்விசாரா விற்பனர்கள், ஏனைய வகை பணியாளர்கள் ஆகியோரின் திறனாற்றலை கட்டியெழுப்பவும், தேர்ச்சிகளை விருத்தி செய்யவும் வெற்றியுள்ள இலக்கை நோக்ககாக் கொண்ட நூலக, தகவல் விஞ்ஞானங்களிலுள்ள பணியாளர்களின் ''திறனாற்றலை கட்டியெழுப்பல், ஆற்றலளவு மேம்படுத்தலில்'' மும்மொழிவொன்று ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. கல்விசார் சமூகத்திற்கு சக்திவாய்ந்ததும், துடிப்பான நூலக சேவையை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

b) உயர் கல்வி நிறுவனங்களின் நடத்தைளுக்காக சுமூகமான கணனி உதவியைக் கொண்ட சூழலை விருத்தி செய்ய 2013 ஜனவரி 29ம் திகதி தகவல் தொழில்நுட்ப ஆட்சியும், முகாமைத்துவமும் எனும் கொள்கை வழங்கப்பட்டது. மூலவளங்களையும், தரவுகளையும் நிறுவனத்தின் கட்டாயமான தகுந்த நோக்கங்களுக்காக பயன்படுவதையும், நிறுவனக் கொள்கைளுடன் இணக்கப்பாட்டுடன் பயன்படுத்தப்படுவதையும் நிச்சயப்படுத்துவதே இக் கொள்கையின் பிரதான நோக்காகவிருந்தது.

### c) உயர் கல்வி நிறுவனங்களுக்கு டிஜிட்டல் நூலகத்தை நிறுவுதல்

உயர் கல்வி நிறுவனங்களிலுள்ள கல்விசார் விற்பனர்கள் நாட்டின் ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆளணியினரில் 60% திற்கும் மேலாகவுள்ளார்கள். ஆகவே பல்கலைக்கழக நூலகங்களில் தேவையான ஆய்விதழ்களின் கிடைப்பனவை உறுதி செய்வது பிரதான முக்கியத்துவம் வாய்ந்தது. ஆயினும் ஆய்விதழ்களின் உயரும் விலைகளும், இலங்கை நாணயத்தின் பெறுமதி இறக்கமும், நிதியிடலுக்கான போட்டியான கருத்தெடுப்பும் - அதாவது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான தேவைகள் - தனிப்பட்ட பல்கலைக்கழகங்களினால் தேவையான ஆய்விதழ்களுக்கு தொடர்ந்து சந்தா செலுத்த அனுமதிப்பதில்லை.

ப.மா. ஆணைக்குழுவின் கல்விசார் விற்பனர்களையும், ஏனைய நூலகர்களையும் உள்ளடக்கின நூலக, தகவல் விஞ்ஞான நிலையான குழு (ளுஊழுடுஐளு)இ ஆய்வு வெளியீடுகள் (தரம் மற்றும் அளவு ஆகிய இரண்டும்) மீதான கல்வி தொடர்பான சஞ்சிகைகளின் இடைநிறுத்தத்தின் கடுமையான விளைவுகளையும், கல்விசார் தரங்களின் மீதும், இலங்கை பல்கலைக்கழகங்களின் தரவரிசை தொடர்பாகவும் அதன் தாக்கங்களையும் பற்றி கலந்தாலோசித்தார்கள்.

தற்பொழுது பல்கலைக்கழகங்களினால் 675 அச்சிடப்பட்ட சஞ்சிகைகளுக்காக வருடாந்த சந்தாவாக மொத்தமாக சுமார் ரூபா. 90 மில்லியன் செலவிடப்படுகிறது. ஆயினும் அவைகளை பல்கலைக்கழகங்களுக்கிடையே பகிரமுடியாது. இச் சந்தர்ப்பங்களினால் ளுஊழுடுஐளு செலவு குறைந்த முறையில் மின்மூலகங்களை உள்வாரி பல்கலைகழக ரீதியாக சென்றடைவதற்கும், பயிற்சியளித்தல், ஆவணங்களை வழங்கல் போன்ற பல ஏனைய பாவனையாளர்களை மையமாகக்கொண்ட சேவைகளை வழங்க பல்கலைக்கழக நூலகங்களின் கூட்டுமைப்பு ஒன்றை நிறுவும் பொருட்டு கலந்தாலோசனைகளை ஆரம்பித்தது. இம் முயற்சிகளின் பிரதான நோக்கங்களாவன:

- சிக்கன செலவு முறையில் தரவுத்தளத்தில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான சஞ்சிகைகளை சென்றடைவதை வழங்கல்
- சகல பல்கலைக்கழகங்களுக்கும், அவைகளின் பலவகையான ஆய்வு மற்றும் கல்விசார் ஆர்வங்களுக்கான தரவுத்தளங்கள் மின் சஞ்சிகைகளுக்கு உட்செல்ல ஒரு தனி புள்ளியை வழங்குதல்
- சந்தா வழங்கப்பட்ட மின்னியல் மூலங்களை பயன்படுத்தவும், ஆவணகாப்பகத்தை சென்றடைதல், பத்திரப்படுத்தல் போன்றவற்றிக்கு சிறந்த உடன்படிக்கை நிபந்தனைகளைப் பெறல்
- அச்சிட்ட பொருட்களுடன் தொடர்பான பிரச்சினைகளான கிழிதல், பௌதீக இடங்களை வழங்கல், பரணிடல், கட்டுதல், கடுமையான பணம் செலுத்தும் திட்டங்கள், தபாலில் தொலைதல் போன்றவற்றை அரிதாக்குதல்

குறிப்பிட்ட கூட்டமைப்பை நிறுவுதல் இலங்கை பல்கலைக்கழகங்களை சர்வதேசமயமாக்குதலுக்கு அடித்தளமிடுவதுடன், அவைகளின் உலக தரவரிசையை கல்வித்துறை அந்தஸ்து, ஆய்வு வெளியீடுகள் ஆகியவற்றின் ஊடாக உயர்த்தவும் செய்யும்.

இது வெளிநாட்டு மாணவர்களையும் ஆளணியினரையும் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு கவர்வதற்கு மேலும் உதவியாகவிருக்கும்.

## 5.10 நடாத்தப்பட்ட செயலமர்வுகள்/தேசிய மாநாடுகள்

- **உயர்கல்வி அமைச்சர் கௌரவ எஸ்.பி. திசாநாயக்கா அவர்களின் தலைமையின் கீழ் ஜனவரி 7 – 8 ல் நீர்கொழும்பில் ஜெற்விங்ஸ் புளூவில் "இலங்கையில் வளர்ந்துவரும் எரிபொருள், எரிவாயு கைத்தொழிலின் ஆற்றலை கட்டியமைத்தலும், உள்பரிமாணத்தை மேம்படுத்தலும்" எனும் செயலமர்வு**



Prof. Stuart Burley, Head of Geosciences, Cairn India Limited, India, delivering the keynote address on "Petroleum Industry: Global Perspectives and National Prospects"





பமாஆவின் பொறியியல், கட்டடக்கலை நிலையான குழு, பெற்றோலியம் மூலப்பொருள் அபிவிருத்தி செயலகத்துடன் (பெ.மூ.அ.செ) இணைந்து மேற்குறிப்பிட்ட செயலமர்வு பின்வரும் முக்கிய நோக்கங்களை அடையும் பொருட்டு ஒழுங்கு செய்தது:

- எரிவாயு, எரிபொருளின் E & P ல் மேல், மத்திய, கீழ் ஓட்டங்களில் தொழில், தொழில்நுட்ப, முகாமைத்துவ, விஞ்ஞான மட்டங்களில் மனித தேவைகளை (குறுகிய, மத்திய, நீண்ட காலங்களில்) இனம் காண்பதற்கு

- மேலேயுள்ள (i) லுள்ள தேவைகளுக்கு ஏற்ப தொடர்பான இளமானி, பட்டப்பின்படிப்பு பாடநெறிகளை இனம் காணலும், வடிவமைத்தலும்.

- மேலேயுள்ள (i) (ii) லுள்ள மனித, பௌதீக ஆகிய இரு மூலவள வழிகளால் ஆற்றல்களை (குறுகிய, மத்திய, நீண்ட காலங்களில்) கட்டியமைக்கும் தேவைகளை இனம் காணலும், அவ்வாறான தேவைகளைப் பூர்த்தி செய்ய நிதித் தேவைகளை மதிப்பிடலும்.

- தொடர்பான தொழில், கல்வித்துறை நிகழ்ச்சித் திட்டங்களையும், எரிவாய்வு, எரிபொருள் உற்பத்தியையும் அகழ்வு ஆராய்ச்சியையும் அபிவிருத்தி செய்யவும், வழங்குவதற்குமான ஆற்றலைக் கட்டியமைப்பது தொடர்பான ஊக்கப்படுத்தலை வலுப்படுத்துவதற்கான மூலோபாய கூட்டாண்மைகளை இனம் காண்பதும்.

- திறமையை கட்டியமைத்தல், ஆற்றலை மேம்படுத்தும் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய "இலங்கையில் பெற்றோலிய மூலவளங்களை உச்சமய பொருளாதார பயன்களுக்காக முகாமைசெய்தல்".

பல்கலைக்கழகங்களில் பெற்றோலிய விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆற்றலை கட்டியமைப்பதற்கான பின்தொடர் கூட்டம் 2013 ஒக்டோபர் 22ம் திகதியன்று கொழும்பு பெற்றோலியம் மூலப்பொருள் அபிவிருத்தி செயலகத்தில் (பெ.மூ.அ.செ) நடைபெற்றது. இச் செயலமர்வில் மாதிரி கற்கைகள் தொடர்பான பெறுமதிமிக்க உயர் பேறுகளைக் கொண்ட கணனிகளும், மென்பொருள் பொதிகளும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு கைரின் இந்தியா லிமிட்டட், இந்தியாவினால் வெகுமதியாக அளிக்கப்பட்டுள்ளது.



திரு. மைக்கல் குயின், கைரின் இந்தியா உயர் பேறுகளுடைய கணனிகளையும், மெம்பொருட்களையும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பு செய்கின்றது.

- **கல்வித் துறையில் சமாதானத்தை கட்டியமைத்து, நல்லிணக்கத்தை உருவாக்கும் பண்பாட்டை ஏற்படுத்த 2013 யூன் 13 – 14ல் யாழ்ப்பாணம் கிறீன் கிராஸ் ஹொட்டலில் "மீள்சீரமைத்தலில் உயர் கல்வியின் பங்கு" எனும் தேசிய மாநாடு**



நீதிபதி சி.ஜி. வீரமந்திரி "சமாதான கல்விக்கான சர்வதேச தேவை" எனும் ஆரம்ப உரையை நிகழ்த்துதல்



கலாநிதி. றோஹான் குணரத்ன " போருக்குப் பிந்திய மூலோபாயம்: மிதவாதம், சகிப்புத் தன்மை மற்றும் சகவாழ்வு ஆகியவற்றை ஊக்குவித்தல்' இது பேராசிரியர் எஸ் ராஜரத்தினம் (சர்வதேச கற்கைகள் பாடசாலை, சிங்கப்பூர் உடன் ஆன கூட்டுப் பேச்சு)





பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து "நல்லிணக்கத்தை உருவாக்கும் உயர் கல்வியின் பங்கு" எனும் தேசிய மாநாட்டை பின்வரும் நோக்கங்களுக்கான நடாத்தியது:

- நல்லிணக்கத்தை உருவாக்க பல்கலைக்கழகங்களின் பங்கும், பொறுப்பும் பற்றி உத்தியோகஸ்தர் குழுவினரிடையேயும், மாணவர்களிடையேயும் விளிப்புணர்வையும், ஞானத்தையும் உருவாக்குதல்
- நவீன, புதுமையாக்க கல்வித்துறை, ஆய்வு, விளையாட்டு, கலாச்சார, வெளிவாரியாக சென்றடையும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பல்கலைக்கழகங்களில் நல்லிணக்கத்தை உருவாக்குவதை உள்வாரியாக்குதலும், நிறுவனமயமாக்குதலும்.
- நல்லிணக்கத்தையும், சமூக ஒற்றுமையையும் மேம்படுத்த புதிய தலைமுறையான ஆசிரியர் குழுவினரிடமும், மாணவரிடமும் விருத்தி செய்தல்
- பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்படுத்த நல்லிணக்கத்தை உருவாக்கும் நடவடிக்கைத் திட்டத்தை அபிவிருத்தி செய்தல் நல்லிணக்கத்தை உருவாக்குதல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பில் உந்து சக்தியாகவும், மூலோபாய பங்காளராகவும் பல்கலைக்கழகங்களை திகழச் செய்தல்

இம் மாநாட்டில் நாட்டின் முக்கிய இன, மத சமூகங்களைச் சேர்ந்த நல்லிணக்கம் மற்றும் சமரசத்துறையில் சிறப்பு மிகு கல்விமான்கள் பங்கு

பற்றினர். பல்கலைக்கழகங்களில் இருந்து ஒரு குறுக்குப்பிரிவான ஆசிரியர்களும் மாணவர்களும் கூட இம் மாநாட்டில் கலந்து பொண்டனர்.

- **தொழில் வழிகாட்டி ஆலோசகர்கள்.'.கல்விசார் தொழில் வழிகாட்டி ஆலோசகர்களின் பயிற்சிக்கான இரு நாள் செயலமர்வு**

  தொழில் வழிகாட்டி அலகுகளின் பயிற்சியளித்தல் பகுதியை வலுவூட்டவும், சீரமைக்கும் பொருட்டு பமாஆணைக்குழுவின் தொழில் வழிகாட்டி நிலையான குழு 25, 26 செப்டம்பர் 2013ல் இரு நாள் தொழில் வழிகாட்டி ஆலோசகர்களின் இரு நாள் செயலமர்வை கொழும்பு ஹொட்டல் ஜானகியில் ஆரம்பித்தது.

  இது 21வது நூற்றாண்டிற்கான உயர் கல்வி நிகழ்ச்சித்திட்டம் (HETC), EDEX தொழில் சேவைகள் ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தப்பட்டது. இச் செயலமர்வு முழுப் பங்களிப்புடன் வெற்றிகரமாக முடிவடைந்தது.

- **மாணவர்களுக்கான மென் திறன்களை விருத்தி செய்யும் மூன்று நாள் செயலமர்வு**

  தொழில் வழிகாட்டி நிலையான குழு மாணவர் குளுக்களிடையே மென் திறன்களை மேம்படுத்தலின் தேவையை இனம் கண்டு ஜோன் கீல்ஸ் சமூக பொறுப்பு திட்டத்துடன் இணைந்து மாணவர்களிடையே "மென்திறன்களை விருத்தி செய்தல்" எனும் தலைப்பில் மூன்று நாள் செயலமர்வு ஒன்றை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும், கிழக்கு பல்கலைக்கழகத்திலும் நடத்தியது. இதில் பிரசித்தி பெற்ற மூலவள நபர்களும், எல்லா பீடங்களிலிருந்தும் சுமார் ஐய்யாயிரம் மாணவர்களும் கலந்து கொண்டார்கள். ஏனைய பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழகங்களின் தொழில் வழிகாட்டி அலகுகளால் மாணவர் நலனோம்பல் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்வதற்காக இவ்வாறான செயலமர்வுகளை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **தூவர வளர்ப்பு மையம், கண்காட்சியும், செயலமர்வும் (Floriculture Clinic, Exhibition & Workshop)**

  தாவர வளர்ப்பு மையம், செயலமர்வும் கொழும்பு 07 இலங்கை மன்ற கல்லூரியில் 25 ஒக்டோபர் 2013ல் மேன்மைதங்கிய முதல் பெண்மணி சிராந்தி விக்ரமசிங்க ராஜபக்ஷ அம்மையாரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

  இதை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் விவசாய, விலங்கியல் மருத்துவம், விலங்கியல் விஞ்ஞான நிலையான குழுவும் (AVMAS) மைக் புலோறா (தனியார்) லிமிடட்டும் இணைந்து ஒழுங்கு செய்தனர். மேற்குறிப்பிடப்பட்ட செயலமர்வின் நோக்கங்கள்

  - தாவர வளர்ப்பு கைத்தொழிலை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வலுவூட்டி விரிவுபடுத்தல் தொடர்பான கொள்கைப் பிரச்சினைகள், நிறுவன, தொழில் நுட்ப, உள்கட்டமைப்பு தடைகளை இனம் காணல்

  - தாவர வளர்ப்பை ஏற்றுமதி கைத்தொழிலாக்குவது சம்பந்தமான அதிக முன்னுரிமையான ஆய்வை இனம் காணல்

- வலுவானதும், போட்டித்தன்மையானதுமான தாவர வளர்ப்பு கைத்தொழிலை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விருத்தி செய்ய கல்வித்துறையினருக்கும், தொடர்பான அரச, தனியார் நிறுவனங்களுக்குமிடையே கருத்தொருமித்த கூட்டாண்மையை விருத்தி செய்தல்

- சாகுபடியாளர்கள், வியாபாரிகள், தொழிலுரிமையாளர்கள் மற்றும் தங்களது நவீன, புதுமையாக்க இரகங்கள், உற்பத்திகள், சேவைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்த விரும்புவோருக்கு தளம் அமைத்துக் கொடுத்தல்

- மேற்குறிப்பிட்டவைகளிலுள்ள பிரச்சினைகள், தடைகள் ஆகியவற்றை வெற்றிகொள்ள உத்திகளையும், நடைமுறைக்கேற்ற சிபார்சுகளையும் உருவாக்கி சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், நிறுவனங்களிடையே நடைமுறைப்படுத்துவதற்காக சமர்ப்பித்தல்



ப.மா.ஆ தலைவர், பிரதம அதிதி சிராந்தி ராஜபக்ஷ அம்மையாரை வரவேற்றல்



நடைபெறும் செயலமர்வு அமர்வு





சிறு பொருட்காட்சியை திறந்துவைத்தல்

- **"பொதுநலவாய நாடுகளின் எதிர்காலம்" பற்றிய மாநாடு: இலங்கையிலிருந்து ஒரு தொலை நோக்கமும் தைரியமுமான தலைமைத்துவம்"**

  பமாஆ உயர்கல்வி அமைச்சுடன் இணைந்து பொதுநலவாய நாடுகளின் தற்போதைய தலைவரான அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் கவனத்திற்காக அதன் அடுத்த இரண்டு வருடங்களுக்கான நிகழ்ச்சிநிரலையும், செயற்பாட்டு திட்டத்தையும் உருவாக்க சிபாரிசுகளை வரையும் பொருட்டு 2013 நவம்பர் 26ல் தாஜ்சமுத்திரா ஹொட்டலில் மாநாடு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. வேந்தர்கள், உபவேந்தர்கள் மற்றும் உயர்நிலையிலுள்ள அறிஞர்கள் குழாம் உள்ளடங்கிய 250க்கும் மேலான பங்கேற்பாளர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

  இம் மாநாடு முழுநிறைவான, துடிப்பான அமர்வுகளை கொண்டிருந்தது: இதன் உச்சகட்டமாக இடைக்கால சிபாரிசுகளை அதிமேதகு ஜனாதிபதிக்கு பமாஆ குழுவின் தலைவர் பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டதுடன், கௌரவ எஸ்.பீ.

திஸ்சாநாயக்க அதிமேதகு ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி கௌரவித்தார்.




- **ASAIHL 2013 சர்வதேச மாநாடு**

  "சகலருக்கும் கல்வி: "வாய்ப்புக்களும், சவால்களும்" என்னும் கருப்பொருளில் உயர் கல்விக்கான தென் கிழக்கு ஆசியன் நிறுவனங்களின் சங்கமும் (ASAIHL) ப.மா. ஆணைக்குழுவும் களனி பல்கலைக்கழகத்துடனும், கொழும்பு பல்கலைக்கழகத்துடனும் இணைந்து ஒழுங்கு செய்து 2013 டிசம்பர் 5ம், 6ம் திகதிகளில் சர்வதேச மாநாடு BMICH ல் நடைபெற்றது. இம் மாநாட்டில் ஆய்வாளர்களும் வெளிநாடுகளிலிருந்து உயர் கல்விமான்களும் உட்பட 150க்கும் மேலானோர் கலந்து கொண்டார்கள்.

  இம் மாநாட்டில் உயர் கல்வி அமைச்சர் கௌரவ எஸ்.பி. திசாநாயக்கா அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் அவர்களும் சிறப்பு பேச்சாளராக இருந்தார்.

  அத்துடன், பேராசிரியர் டி. விஜயசேகராவும் முக்கிய உரையை நிகழ்த்தியதுடன், அழைக்கப்பட்ட கல்விமான்களின் உரைகளும் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்பட்டன.










- **சுகாதார பிரிவுகளைச் சேர்ந்த பாடத்திட்டங்களை நவீனமயப்படுத்தலுக்கான செயலமர்வு**

  சுகாதார பிரிவுகளைச் சேர்ந்த பாடத்திட்டங்களை நவீனமயப்படுத்தலுக்கான செயலமர்வு கூட்டு சுகாதார விஞ்ஞானத்தின் ஒவ்வொரு பாட ஒழுங்கின் இறுதிப்பரீட்சைக்கு பொது பல்தேர்வு வினாப் பத்திரத்தித்தை நடாத்த முக்கிய பாடத்திட்டத்தை இனம் காண பாடத்திட்டத்தை மீள்பார்வையிட நடாத்தப்பட்டது. சுமூகங்களின் சுகாதாரத்தை மேம்படுத்த சாதகமான பங்களிப்பை வழங்க இது மாணவர்களுக்கு வசதிகளை அளிக்கும். இதன் முதலாவது செயலமர்வு தாதியர் பாட ஒழுங்கிற்கு 2013 யூன் 10ல் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

### 5.11 இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவக் கல்வியைத் தரப்படுத்தல்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதார பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் மருத்துவக் கல்வியை தரப்படுத்துவதை நோக்காகக் கொண்டு தற்போதைய நிலைமையை ஆராய 2013 மே 15ம் திகதியன்று மீள்பார்வை செய்யப்பட்டது. இம் மீள்பார்வை ப.மா.ஆ. குழுவின் மருத்துவ, பல் விஞ்ஞானங்கள் நிலையான குழுவின் தலைவியான பேராசிரியர் மல்காந்தி சந்திரசேகர, சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானங்கள் பீடாதிபதி பேராசிரியர் மோஹான் டி சில்வா, பமாஆ கல்விசார் விவகாரங்கள் சிரேஷ்ட உதவி செயலாளர் திருமதி. ஜனாதரி விஜேசிங்க ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

மீள்பார்வையின் பின்னர், மீள்பார்வை அறிக்கையில் செய்யப்பட்ட சிபாரிசுகளின் படி கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதார விஞ்ஞானங்கள் பீடம் தொடர்பான விடயங்களை துரிதப்படுத்துவதற்காக மீளடைவு நடவடிக்கைகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

### 5.12 சுதேச மருத்துவ மாணவர்களுக்கான பொது பல்தேர்வு வினாப்பத்திரத்தை அறிமுகம் செய்தல்

சுதேச மருத்துவ பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களுக்காக சுதேச மருத்துவ பாட ஒழுங்கை நெறிப்படுத்தவும், சகல சுதேச மருத்துவ நிறுவனங்களிலுமுள்ள சகல சிரேஷ்ட கல்வியியலாளர்களையும் பொது ''பல்தேர்வு வினாப்பத்திரத்தைத்'' தயார் செய்ய கல்வியூட்டும் பொருட்டும் இப் பொது பல்தேர்வு வினாப்பத்திரத்தை அறிமுகம் செய்வதற்கான செயலமர்வுகள் 2013 ஏப்பிரல் 23 மற்றும் யூன் 27ல் நடாத்தப்பட்டன.

### 5.13 யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள், வணிக பீட மாணவர்களின் (3ம் வருடம்) கைத்தொழில் சுற்றுலா – 2013 யூன் 17 தொடக்கம் 22வரை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளுக்காக ஜோன் கீல்ஸ் மன்றம் அதன் முகாமைத்துவ கற்கைகள் பீட 3ம் வருட மாணவர்களுக்காக கைத்தொழில் சுற்றுலாவை ஒழுங்கு செய்தது.

### 5.14 தெற்காசிய பல்கலைக்கழகம்

தெற்காசிய பல்கலைக்கழகம்/இந்தியா தொடர்பான 2013 யூலையில் தொடங்கிய அதன் 4வது கல்வி அமர்வுக்கான தெரிவு பரீட்சையை 2013 மார்ச் 24ல் நடாத்த ப.மா.ஆ அனுசர பங்கு வகித்தது.

அதைத்தவிர, தெற்காசிய பல்கலைக்கழகத்தின் ஆளும் சபையின் உறுப்பினரான பமாஆ தலைவி 2013 ல் இந்தியா, புதுடெல்லியில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் பங்குபற்றினார்.

## 5.15 MIS அலகுகளை பல்கலைக்கழக முறைமைக்கு அறிமுகம் செய்தல்

பமாஆணைக்குழுவிலும், பல்கலைக்கழகங்களிலும் முகாமைத்துவ தகவலின் ஆற்றலையும், செயற்றிறனையும் மேம்படுத்த பமாஆணைக்குழுவிலுள்ள MIS பிரிவை வலுவூட்டி MIS அலகுகளைப் பல்கலைக்கழகங்களில் இணைக்கும் வலைப்பின்னலை விருத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. ஆணைக்குழு முகாமைத்துவ தகவல் முறைமையில் (MIS) நிலையான குழு ஒன்றை அமைக்கவும் தீர்மானித்தது.

## 5.16 4வது ஆசியாவின் சிறந்த வணிக பாடசாலை விருதிலிருந்து கல்வி தலைமைத்துவத்திற்கான விருது

பமாஆணைக்குழுவின் தலைவரான பேராசிரியர் ஷினிக்கா ஹிரிம்புரேகமவிற்கு 4வது ஆசியாவின் சிறந்த வணிக பாடசாலை விருதுகள் 2013லிருந்து கல்வி தலைமைத்துவத்திற்கான விருதுகள் சிங்கப்பூரின் பான் பசிபிக்கில் யூலை 31ல் வழங்கப்பட்டது. இக் கௌரவ விருது பேராசிரியர் ஹிரிம்புரேகமவின் கல்வித் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் தூரநோக்கை அங்கீகரித்து சிஎம்ஓ ஆசியா மற்றும் சிஎம்ஓ சபையினால் வழங்கப்பட்டது.

## 5.17 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக்களின் தலைவர்களின் குழு/சார்க் பிராந்திய அங்கத்துவ நாடுகளின் சமமான அமைப்புக்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக்களின் தலைவர்களின் குழு/சார்க் சமமான அமைப்புக்களின் எட்டாவது கூட்டம் நேபாலின் காட்மான்டுவில் 2013 ஏப்பிரல் 17, 18 களில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பமாஆ தலைவரின் சார்பாக உதவித் தலைவரும், திறந்த பல்கலைக்கழகத்தின் உப வேந்தரும் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.



சார்க் நாடுகளின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக்களின் தலைவர்களின் கூட்டத்தின் தொடர் நடவடிக்கையாக **"வலை அடிப்படையிலான பாடநூல்களைப் பரிமாறுவதற்கு"** எனும் செயலமர்வு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பணியாளர் அபிவிருத்தி நிலையத்தில் சார்க் அங்கத்துவ நாடுகளிலில் இருந்து 20 பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 2013 ஆகஸ்ட் 25 – 27 ல் நடைபெற்றது.





### 5.18 வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து கல்விசார் கூட்டுறவையும், ஆய்வையும் மேம்படுத்தலும், ஏற்பாடுசெய்தலும்

பமாஆணைக்குழுவின் சர்வதேச கூட்டுறவு பிரிவு ஆய்வு, சர்வதேச கூட்டுறவு ஆகிய இரண்டையும் உள்ளடக்கி இவ்வாறு மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டது: ஆய்வு மற்றும் சர்வதேச கூட்டுறவுப் பிரிவு. இப் பிரிவு உயர் கல்வி நிறுவனங்களில் துடிப்பான ஆய்வுக் கலாச்சாரத்தை உருவாக்குவதுடன், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சர்வதேச கூட்டுறவையும் மேம்படுத்தும்.

- **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC), ஜெயின் பல்கலைக்கழகம் (JU), இந்தியா, ஜோர்ஜியா அரச பல்கலைக்கழகம் (GSU), USA ஆகியவற்றிற்கிடையே 2013 யூலை 23ல் நடைபெற்ற வீடியோ மாநாடு மூலமான முத்தரப்பு ஒத்துளைப்பு**

  இலங்கை பல்கலைக்கழகங்கள், ஜெயின் பல்கலைக்கழகம், ஜோர்ஜியா பல்கலைக்கழகம் ஆகியவற்றிக்கிடையே கல்விசார் கூட்டுறவு, ஆய்வு ஒத்துளைப்பு ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC), ஜெயின் பல்கலைக்கழகம் (JU), இந்தியா, ஜோர்ஜியா அரச பல்கலைக்கழகம் (GSU), USA ஆகியவற்றிற்கிடையே முத்தரப்பு வீடியோ மாநாடு 2013 யூலை மாதம் 23ம் திகதி நடைபெற்றது.





  மேற்குறிப்பிட்டதின் தொடர் நிகழ்வாக, ஜெயின் பல்கலைக்கழகத்திலிருந்து பிரதிநிதிகள் குழுவொன்று 2013 ஆகஸ்ட 7, 9 திகதிகளில் இலங்கைக்கு வருகை தந்தது. இப் பிரதிநிதிகள் குழு ஜெயின் பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்களையும், நிர்வாக அதிகாரிகளையும், ஜெயின் நிறுவனங்களின் குழுவையும் உள்ளடக்கியிருந்தது. **இவ் வருகையின் விளைவாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று (MOU) பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்கும் ஜெயின் பல்கலைக்கழகத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது.**






இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று ஜெயின் பல்கலைக்கழகத்திற்கு 2103 செப்டம்பர் 16 – 18ல் விஜயம் செய்தது. இலங்கை பிரதிநிதிகள் குழுவில் பமாஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் ரன்ஜித் சேனரத்ன அவர்களின் தலைமையின் கீழ் நிர்வாக பணிஅணியினரும், உப வேந்தர்களும், சிரேஷ்ட கல்விசார் ஊழியர்கள் உறுப்பினர்களும் அடங்கியிருந்தனர். அவர்கள் சில பல்கலைக்கழங்களுக்கும், ஜெயின் நிறுவனங்கள் குழுவின் கீழுள்ள நிறுவனங்களுக்கும் விஜயம் செய்து ஜெயின் பல்கலைக்கழக கல்விசார், நிர்வாக பணியணி உறுப்பினர்களுடன் ஆராய்ச்சி ஒத்துளைப்பை மேம்படுத்தல், கல்விசார் மற்றும் மாணவர்கள் பரிமாற்றம், கூட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகள், கூட்டு ஆராய்ச்சி வெளியீடுகள் போன்றவை தொடர்பாக கலந்துரையாடினார்கள்.









5.19 **ப.மா. ஆணைக்குழு செயலகத்தறிக்கு சர்வதேச வருகையாளர்கள்**

இலங்கை பல்கலைக்கழகங்களுடன் பரஸ்பர ஆர்வமான பகுதிகளில் கூட்டுப்பாண்மையை நிறுவுவதற்கான சாத்தியங்களை ஆராய சீனா, ரஸ்சியா, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி, தாய்லாந்து போன்ற பலநாடுகளிலிருந்து உயர்மட்ட பிரதிநிதிகள் குழு ப.மா ஆணைக்குழுவிற்கு வருகை தந்தது. அவைகளின் விபரங்கள் பின்வருமாறு:

- 2013 ஆகஸ்ட 01ல் ரியான்ஜின் செங்ஜியான் பல்கலைக்கழகத்திலிருந்து கலாநிதி. ஜி லிய்யு, ரியான்ஜின் கடல்சார் கல்லூரியிலிருந்து திரு. சாங் கி, நன்கை பல்கலைக்கழகத்திலிருந்து திருமதி. ஜுலி சன், ரியான்ஜின் பல்தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திலிருந்து திரு. லு சியாடோங் - **சீனா**

- 2013 செப்டம்பர் 9ம் திகதி, பேராசிரியர். கலாநிதி. மத்தியாஸ் ஹுன், முகாமைத்துவம் மற்றும் தொடர்பு பல்கலைக்கழகளின் இணைப் பேராசிரியர், ஹுன் லாஜிஸ்டிக்ஸ் பல்கலைக்கழகத்தின் நிகழ்ச்சித்திட்டங்களின் பீடாதிபதி – **ஜேர்மனி**

- 2013 செப்டம்பர் 24, பேராசிரியர் ஜோன் ரொசென்பேர்க், சிரேஸ்ட பிரதி உப-வேந்தரும், உப-தலைவரும், பேராசிரியர் லை டார்க், நிறைவேற்று பீடாதிபதியும் நிதியியல் பொருளாதார பேராசிரியர், பேராசிரியர் போல் மதர், பேராசிரியரும், லா ரோப் வணிக பாடசாலை தலைவரும், திரு. ஆமித் மல்ஹோர்ரா, முகாமையாளர், தெற்காசியா, திரு. டேவிட் சாமுவேல், வர்த்தக அபிவிருத்தி முகாமையாளர், லா ரோப் பல்கலைக்கழகம்,

அவுஸ்திரேலியா மற்றும் சர்வதேச செயற்பாடுகள், அவுஸ்திரேலிய வர்த்தக ஆணைக்குழு - **அவுஸ்திரேலியா**

- 2013 ஒக்டோபர் 1ம் திகதி, பேராசிரியர் யுனில் பெரேரா, ரெஜென்ட பௌதீக பேராசிரியர், ஜோர்ஜியா அரச பல்கலைக்கழகம் - **அத்லந்தா**

- 2013 நவம்பர் 11ம் திகதி, பேராசிரியர் ரொபேர்ட் டி அன்டேர்ஸன், பிரதி உப-வேந்தர், திரு. மைக்கல் ஓ' செளனெஸ்லி, பணிப்பாளர், சர்வதேச உறவுகள், மசி பல்கலைக்கழகம், **நியூசிலாந்து**

- 2013 டிசம்பர் 9ம் திகதி, கலாநிதி இ.ஐ. றுமியன்றசேவா, புஸ்ஸினோவின் உயிரியல்தொழில்நுட்ப தொகுப்புக் குழு, **ரஸ்சியா**

- 2013 டிசெம்பர் 17, கலாநிதி கிறாசே சனாவொங்ஸ, பணிப்பாளர், ஆசிய அனர்த்த முன்னாய்த்த நிலையம் (ADPC) - **தாய்லாந்து**

## 6. நிதி நிர்வாகம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், ஆய்வு ஆற்றலை வலுப்படுத்தல், இலங்கையின் உயர் கல்வியின் தரத்தை அதிகரித்தல் ஆகியவற்றால் பல்கலைக்கழக முறைமையை மேம்படுத்த முயலுகின்றது. அதன்படி, எட்டு அபிவிருத்தி முன்னுரிமைகள் முன்மொழியப்பட்டு 2013 வரவுசெலவுத் திட்டத்தினால் நிதி வழங்க தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. 2012 டிசெம்பர் 09ல் இலங்கை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படி, தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பல்கலைக்கள வாரியான 2013ம் ஆண்டிற்குரிய செலவுகளின் உச்சவரம்பு பின்வருமாறு;

**2013ம் வருட மதிப்பிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினதும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினதும் சுருக்கம் (ரூ. மில்லியன்)**

| வகை /விடயத் தலைப்பு வவகை /விடயத் தலைப்பு ப்பு வகை /விடயத் தலைப்பு | மதிப்பிடப்பட்ட வரவுசெலவுத் திட்டம் 2013 | அனுமதியளிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டம் 2013 | மதிப்பீட்டு பட்ஜெட்டில் அனுமதிக்கப்பட்ட படஜெட்டின் சதவீதம் % |
|---|---|---|---|
| **மீண்டெழும் மானியங்கள்** | 20,540 | 17,125 | 83% |
| மூலதன/ அபிவிருத்தி மானியங்கள் | 15,567 | 7,365 | 47% |
| **மொத்தம்** | **36,107** | **24,490** | **68%** |
| மேலதிக உள்சேர்ப்பிற்காக மீண்டெழும் குறைநிரப்பு ஒதுக்கீடு | - | 1,192 | - |
| மேலதிக உள்சேர்ப்பிற்காக மூலதன குறைநிரப்பு ஒதுக்கீடு | - | 1,159 | - |
| **மொத்த மானியங்கள்** | **36,107** | **26,841** | - |
| உள்வாரி வருமானங்கள் | 1,800 | 2,500 | இல்லை |

## 6.1 மீண்டெழும், மூலதன மானியங்கள் ஒதுக்கீடு

திறைச்சேரியினால் மேலுள்ளபடி அங்கீகரிக்கப்பட்ட மீண்டெழும், மூலதன மானியங்கள் பல்கலைக்கழகங்கள் உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே மீண்டெழும் தொகுதி மானியமாகவும் (RBG) ஒதுக்கப்பட்டது. மூலதன தொகுதி மானியமாகவும் (CBG) ப.மா.ஆ நிதியிடல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு அங்கீகரிக்கப்பட்டது;

### a) நிலையான சொத்துக்களின் புனருத்தாபனமும், மேம்படுத்தலும்

ப.மா.ஆணைக்குழு தற்பொழுதுள்ள உள்கட்டமைப்பு வசதிகளின் தடுப்பு பராமரிப்பு, புதிய உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பது போன்று முக்கியமானது என கருதுகின்றது. ஆகவே மொத்த மூலதன பட்ஜெட்டில் 11.56% நிலையான சொத்துக்களின் புனர்நிர்மானத்திற்கும், மேம்படுத்தலுக்கும் நிதியளிக்க ஒதுக்கப்பட்டது;

### b) நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல்

பல்கலைக்கழகங்களின் வேண்டுகோள் படி, மொத்த மூலதன பட்ஜெட்டில் 11.41% பல்கலைக்கழகங்களினால் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியளிக்க ஒதுக்கப்பட்டது.

### c) உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்

நடந்து கொண்டிருக்கும் 113 நிர்மாண திட்டங்களுடன் மூலதன/அபிவிருத்தி பட்ஜெட்டின் 2013 இன் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக 2011/2020 நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 41 புதிய நிர்மாண திட்டங்களுக்கு நிதியளிக்க முன்மொழியப்பட்டது.

### d) அறிவு விரிவாக்கமும் நிறுவன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் (KEID)

உயர் கல்வியின் முழு நோக்கங்களையும் அடையும் பொருட்டு பல்கலைக்கழக சமூகத்தின் மென் தேர்ச்சிகள், ஆற்றல்கள் ஆகியவற்றினை விரிபுபடுத்தவும், நிறுவன திறனை மேம்படுத்தவும் முன்மொழியப்பட்டது.

அதன் பிரகாரம் 2013ம் வருடத்திற்காக, *அறிவு விரிவுபடுத்தல் மற்றும் நிறுவன அபிவிருத்தியின்* கீழ் நடைமுறைப்படுத்த பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டன.

*<u>திட்டம் - 1 அதிக தொழில் வாய்ப்புள்ள பட்டதாரிகளை உருவாக்க தற்போதுள்ள பட்டமானி நிகழ்ச்சித் திட்டங்களை மாற்றுதல்</u>*

பல்கலைக்கழகங்களினால் உருவாக்கப்படும் கலை பட்டதாரிகளின் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். அதன்படி பின்வருவன முன்மொழியப்பட்டன;

a) சுமார் 2000 பாரம்பரிய இடங்களை (பொது பட்டம்) விசேட இடங்களால் (விசேட பட்டம்) மாற்றுதல்

b) தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சுற்றாடலில் தொழிலின் போது பயிற்சியையும், அவர்களின் தேர்ச்சிகளை மேம்படுத்த வாய்ப்பையும் அளித்தல்

c) தகவல் தொழில்நுட்பம் பட்டமானிகள் வழங்கும் ஏனைய பல்கலைக்கழங்கள், நிறுவகங்களுடன் ஒத்துளைப்பு உடன்படிக்கைகளை ஏற்படுத்தல்

இத் திட்டங்களுக்கான நிதி பல்கலைக்கழகங்களுக்கு நேரடியாக ஒதுக்கப்பட்டன.

*<u>திட்டம் -2 இளநிலைப் பட்டதாரி மாணவர்களின் முன்மொழித் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்தல்</u>*

தேசிய ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கான முக்கிய படியாக நாட்டின் சகல பிரிவுகளாலும் மும்மொழித் தேர்ச்சிகளையும், ஆற்றல்களையும் பெறுவதை ஊக்குவிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். அதற்காக பின்வருவன முன்மொழியப்பட்டன;

a) பல்கலைக்கழக பாடவிதானத்திற்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றை உள்ளடக்கி, புள்ளிகளை ஒதுக்குவது.

b) பல்கலைக்கழகத்தினுள் மொழி அபிவித்தி நிலையத்தை நிறுவுதல்

இத் திட்டங்களுக்கான நிதி பல்கலைக்கழகங்களுக்கு நேரடியாக ஒதுக்கப்பட்டன.

*<u>திட்டம் - 3 விளையாட்டு திறன்களை அபிவிருத்திசெய்தல்</u>*

இளநிலை பட்டதாரி மாணவர்களின் விளையாட்டு திறன்களை இனம் கண்டு, மேம்படுத்தி, விருத்தி செய்யும் பொருட்டு பல்கலைக்கழகங்கள் /உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் விளையாட்டின் திறன்கள் அபிவிருத்தி திட்டம் உயர் கல்வி அமைச்சினால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

2013ம் வருடத்தில், இத் திட்டத்தின் கீழ் ரூபாய். 21.4 மில்லியன் செலவிடப்பட்டது. இத்தொகையில், ரூபாய் 18.0 மில்லியன் (அண்ணளவாக) ரஸ்யாவில் நடாத்தப்பட்ட 27வது உலக பல்கலைகழக விளையாட்டுக்களுக்கானது.

*<u>திட்டம் - 4 பட்டப்பின்படிப்பு/ கலாநிதி திட்டங்கள்</u>*

பல்கலைக்கழக முறைமையின் கல்விசார் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் குழுவினர் பட்டப்பின்படிப்பு, கலாநிதி தராதரங்களைப் பெற்றுக்கொள்ள நிதி உதவி வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டத்திற்கான நிதிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு∴ பல்கலைக்கழகங்கள் மற்றும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தின் உயர்தர கற்கைகளுக்கான தேசிய நிலையம் (NCAS) ஆகியவற்றிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. 2013ம் வருடத்தில் ரூபாய் 57.3 மில்லியன் இத் திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்டது.

*<u>திட்டம் - 5 ஆற்றலை கட்டியமைத்தலும், கொள்திறன் மேம்படுத்தலும்</u>*

பமாஆணைக்குழுவினால் நிதியளிக்கப்படும் இத் திட்டத்தின் நோக்கம் தரமான உயர் கல்வியை வடிவமைத்து வழங்குவதற்குரிய முக்கிய கூறுகளான தேர்ச்சியுள்ள ஆசிரியர்கள், தூரநோக்குள்ள தலைவர்கள், தேர்ச்சியும், அர்ப்பணிப்புமுள்ள தொழில்நுட்ப மற்றும் ஆதரவு ஊழியர்கள் ஆகிய சகல பங்காளர்களையும்
உருவாக்குகின்றது.

2013ம் வருடத்தில், இத்திட்டத்தின் கீழ் ரூபா. 79.6 மில்லியன் செலவிடப்பட்டது. இத் தொகையில ரூபாய் 33.0 மில்லியன் (அண்ணளவாக)

உ.க. அமைச்சின் தலைமைத்துவம் மற்றும் முன் நோக்கு நிலை நிகழ்ச்சித்திட்டத்திற்கு செலவிடப்பட்டது. ரூபா. 17.9 மில்லியன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சத்திரசிகிச்சை துறையின் சத்திரசிகிச்சை உபகரணங்களுக்காகவும், சகல பல்கலைக்கழக கலாச்சார விழாவிற்கு ரூபா. 2.6 மில்லியனும், உயர்கல்வி மீள்சீரமைத்தலில் உயர்கல்வியின் பங்கு தேசிய மாநாட்டிற்காக ரூபா. 2.5 மில்லியனும், திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்பு பிராந்திய நிலையத்தின் புனருத்தாபனத்திற்காக ரூபா. 5.0 மில்லியனும் செலவளிக்கப்பட்டது.

*திட்டம் - 6 தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திகள்*

ப.மா ஆணைக்குழுவினால் நிதியளிக்கப்படும் தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தி திட்டத்திற்கு (ITDC) 2013ல் ரூபா. 11.3 மில்லியன் செலவிடப்பட்டது. பல்கலைக்கழக முறைமையில் ஆற்றலுள்ள தொடர்பாடலை முறைமையை மேம்படுத்துவும், சிறந்தவர்களை வளர்த்தலும் ஆதரித்தலும், புதுமையாக்கம், சிறந்த நடைமுறைகள் மற்றும் நிர்வாகத்தில் பயன்படுத்தப்படும் IT யின் பணத்திற்கான பெறுமதி, பல்கலைக்கழக முறைமையில் கற்பித்தல் மற்றும ஆய்வு ஆகியவற்றைப் பேணும் பொருட்டு பமாஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி குழுவினால் இத் திட்டம் இணைப்பாக்கப்படுகின்றது.

**e) மாணவர் திறன்களை அபிவிருத்தி செய்தல் (தொழில் வழிகாட்டியும், மாணவர் சேமநலனும்)**

இளநிலை பட்டமானி மாணவர்களின் தொழில் முனைவோர் திறன்களை இனம்கண்டு, மேம்படுத்த அல்லது அபிவிருத்தி செய்யும் பொருட்டு பல்கலைக்கழகங்களின் உதவியுடன் பமாஆணைக்குழு இத் திட்டத்தை ஒருங்கிணைத்துள்ளது.

பமாஆணைக்குழுவின் தொழில் வழிகாட்டி, மாணவர் நலன்புரி நிலையியல் குழுவின் சிபார்சின்படி மேலதிக நிதியாக ரூபா. 1.67 மில்லியன் பல்கலைக்கழகங்களுக்கு/உயர்கல்வி நிறுவனங்களுக்கு பமாஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது.

**f) ஆய்வுகளுக்கு வலுவூட்டல்**

*திட்டம் - 1: சர்வதேச கருத்தரங்கு, ஆய்வும், பிரசுரமும்*

இக் திட்டத்தின் நோக்கம் பிரசுரங்களை வெளியிடவும், சர்வதேச தரங்களை அடைவதற்கு சர்வதேச கருத்தரங்குகளை ஒழுங்கு செய்யவும் பல்கலைக்கழகங்களில் கல்விதுறைசார்ந்தோரையும், நிர்வாக ஆளணியினரையும் ஊக்கப்படுத்துவதாகும்.

*திட்டம்-2: தேசிய அபிவிருத்திக்கான ஆய்வுகளும், தீவிர சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்தலும்*

தற்போது காணப்படும் சமூகப்-பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்க, தேசிய பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆய்வுத் திட்டங்களுக்கான திட்ட முன்மொழிவைத் தயாரித்து அவைகளை தேவையான அங்கீகாரத்திற்காக பமாஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழகங்கள் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளன.
2013ம் வருடத்தில் நிதிகளின் கிடைப்புத் தன்மையைப் பொறுத்து, ப.மாஆணைக்குழு ரூபா. 5.0 மில்லியனுக்கு குறைவான ஆய்வுத் திட்டங்களுக்கு நிதியளிக்கக் கருத்திலெடுத்தது. இத் திட்டத்தின் கீழ் முகாமைத்துவமும், நிதியும், மானிடவியலும், சமூக விஞ்ஞானமும், விவசாய விஞ்ஞானம், வணிக தகவல், யூனானி, சித்த, பாரம்பரிய மருத்துவம்,

மருந்தாக்கல் விஞ்ஞானமும், இரசாயன தொழில்நுட்பமும் ஆகிய பாட ஒழுங்குகளுக்கு கிட்டத்தட்ட 7 சர்வதேச மட்ட மாநாடுகளுக்கு ரூபா. 2.0 மில்லியன் செலவிடப்பட்டது.

**g) ஆறு பல்கலைக்கழகங்களை சர்வதேச மட்டத்திற்கு மேம்படுத்தல்**

இத்திட்டம் அதிமேதகு ஜனாதிபதியால், கௌரவ நிதி, திட்டமிடல் அயமைச்சராக 2011ம் வருட வரவுசெலவுத்திட்ட முன்மொழிவாக அறிமுகம் செய்யப்பட்டது. இது பல்கலைக்கழகங்களின் தரத்தையும், சம பங்கையும் மேம்படுத்துவதால் அவைகளின் கல்விசார், நிர்வாக நடவடிக்கைகளை உயர்த்த ஊக்கிவிப்பதாகும்.

2011ல் அங்கீகரிக்கப்பட்டவாறு தமது நடவடிக்கைகளை தொடருமாறு பேராதனை பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைகழகம், களனி பல்கலைகழகம், மொறட்டுவை பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம் ஆகியன வேண்டப்பட்டுள்ளன. 2013ம் வருடத்திற்கான இத்திட்டத்திற்கான நிதி வருடாந்த உச்சவரம்புச் செலவுடன் ஒதுக்கப்பட்டுள்ளன.

| **பல்கலைக்கழகம்** | **நாட்டின் தரவரிசை** | | **உலக தரவரிசை** | |
|---|---|---|---|---|
| | **2012 யூலை** | **2013 யூலை** | **2012 யூலை** | **2013 யூலை** |
| கொழும்பு பல்கலைக்கழகம் | 1 | 2 | 1682 | 2255 |
| மொறட்டுவை பல்கலைக்கழகம் | 2 | 1 | 2011 | 2150 |
| பேராதனை பல்கலைக்கழகம் | 3 | 4 | 2467 | 2973 |
| றுகுணு பல்கலைக்கழகம் | 6 | 3 | 3294 | 2353 |
| ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக்கழகம் | 4 | 6 | 2759 | 5969 |
| களனி பல்கலைக்கழகம் | 5 | 5 | 3048 | 4508 |

மூலம்: www.webometrics.info/en

**h) பல்கலைக்கழக நகரமைப்பு திட்டம் (UTP)**

அரசாங்கம் பல்கலைக்கழகங்களில் புதுமையாக்கம், ஆய்வு ஆகியவற்றை மேம்படுத்த நகரமைப்பு அபிவிருத்தி என்னும் நவீன கோட்பாடை ஆரம்பித்துள்ளது. இந்த நகரமைப்பு திட்டத்தின் நோக்கம் பல்கலைக்கழங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்குவதுடன், நகர சமூகத்தையும், பல்கலைகழகத்தையும் ஒருங்கிணைப்பதுமாகும்.

பல்கலைக்கழக நகரமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தலை உயர் கல்வி அமைச்சும் (உ.க.அ) பமாஆவும் இணைப்பாக்குகின்றன. பல்கலைக்கழக நகரமைப்பு திட்டத்தின் 1ம் கட்டத்தில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம், மொறட்டுவை பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியன இனம் காணப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறும் செயல்முறையில் உள்ளது.

## 6.2 நிதி கொள்கை

### (1) மீண்டெழும் மானியங்கள் ஒதுக்கீடு (RG)

பல்கலைக்கழகங்களுக்கும், இளநிலை பட்டப்படிப்பு உயர் கல்வி

***மீண்டெழும் மானியங்கள் = மாணவர்களுக்குரிய திருத்தப்பட்ட X மாணவர் சேர்க்கை (SE) செலவீனம் (MCPS)***

(A) பின்வரும் கொள்கைக் காரணிகளைக் கருத்திலெடுத்து மாணவரொருவருக்குரிய திருத்தப்பட்ட செலவீனம் (MCPS) கணக்கிடப்பட்டது;

- மாணவரொருவருக்கான ஊழியர்களின் வருடாந்த சம்பள உயர்வுகள்.
- ஏனைய மீண்டெழும் செலவிற்கான பணவீக்கம் 10%
- ஏனைய மீண்டெழும் செலவிற்கான திறன்விரிவாக்கம் 10%
- CPS அதிகரிப்பு (மாணவரொருவருக்கான செலவு)

(B) பட்டப்பின்படிப்பு நிறுவனங்கள் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் (OUSL) மீண்டெழும் மானியங்கள் பின்வரும் நிதி கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு ஒதுக்கப்பட்டது;

- இதிபக- மொத்த மீண்டெழும் மானியத்தின் 2/3 பமாஆணைக்குழுவினால் நிதியிடப்பட்டது.

- பட்டப்பின்படிப்பு நிறுவகங்கள் (PGIs) - பட்டப்பின்படிப்பு நிறுவகங்களை அவைகளின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திற்கு நிதியிட உள்வாரியாக நிதிகளைப் பெற ஊக்குவிக்கப்பட்டன. ஆகவே அரசாங்கத்தின் மானியங்கள் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு மட்டுமேயாகும்.

**(2) மூலதன மானியங்கள் ஒதுக்கீடு (CG)**

**(a)** முன்னுரிமை அடிப்படையிலான நிதியிடல்

திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் குழுவின் (PEMC), சிபாரிசின்படி மூலதன மானியங்களை ஒதுக்கீடு செய்வதற்காக, முன்னுரிமை அடிப்படையில் நிதியிடல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஐந்து விதிமுறைகள் கருத்திலெடுக்கப்பட்டன;

**i.** நடந்து கொண்டிருக்கும் கட்டுமான வேலைத்திட்டங்கள்

**ii.** பத்துவருட நடுத்தர கால நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள்

**iii.** பீடங்களின் சுமை/நிறை– புனருத்தாபனம் மற்றும் நிலையான சொத்துக்களை பெறுதல் போன்றவற்றிக்கு ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் வழங்க முன்மொழியப்பட்ட மானியங்களை கணக்கிடுவதற்கு, பாட ஒழுங்கின் செலவுக் காரணி தொடர்பை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகங்களின் சுமை கணக்கிடப்பட்டன.

***முன்மொழியப்பட்ட தொடர் செலவீனக் காரணிகள்*** – மருத்துவம் – 5, விஞ்ஞானம் – 2, முகாமைத்துவம்- 1 சட்டம் – 1, கலை-1, கல்வி – 1, பொறியியல் – 3, விலங்கு விஞ்ஞானம் – 4, விவசாயம் – 3, இணை மருத்துவம் – 2

**iv.** கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு மூன்று அடுக்குகளின் கீழ் அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச மூலதன மானியங்களின் உச்சவரம்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன;

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் குவைத்தின் விசேட மானியங்களால் நிதியிடப்படுவதால், அது வடக்கு – கிழக்கு அடுக்கின் கீழ் நிதியிடக் கருதப்படவில்லை.

**அட்டவணை – குறைந்தபட்ச, மற்றும் அதிகபட்ச மூலதன மானிய (CG) உச்சவரம்பு**

| அடுக்கு | | பல்கலைக்கழகங்கள் | அதிகபட்ச உச்சவரம்பு -*மாணவரொருவருக்கான மூ.மா.* ரூபாய். 000 | குறைந்தபட்ச உச்சவரம்பு-மொத்த மூ.மா. பல்கலைக்கழகம் ஒன்றுக்கு |
|---|---|---|---|---|
| அ-1 | நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்கள் | PDN, CMB, SJP, KLN, MRT, RUH | ரூபாய்.45,000/- - ரூபாய். 60,000/- | சிறிய பல்கலைக்கழகங்களுக்கு குறைந்தபட்ச ஒதுக்கீடாக ரூபாய். 225,000/= ஐ நிச்சயப்படுத்த பல்கலைக்கழகம் ஒன்றுக்கு ரூபாய். 225,000/= |
| அ-2 | வடக்கு – கிழக்கு பல்கலைக்கழகங்கள் | UJA, EUSL | ரூபாய்.125,000/- - 200,000/- | |
| அ-3 | புதிய பல்கலைக்கழகங்கள் | RUSL, WUSL, SUSL, SEUSL, UVPA, UWU | ரூபாய்.120,000/- - ரூபாய்.175,000/- | |

**(b)** பட்டப்பின்படிப்பு நிறுவனங்கள் மற்றும் சகல உ.க. நிறுவனங்கள் ஆகியன PEMC ஆல் அனுமதியளிக்கப்பட்டவாறு, உ.க. நிறுவனங்களின் தேவைகளையும், முன்னுரிமைக் காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டு நிதியிடப்பட்டன.

## 6.3 பல்கலைக்கழக முறைமைக்குள் நிதிகளை ஒதுக்கிடல் /பயன்படுத்தல்

மொத்த மானியத்தின் முறிவு விபரமும் (மேலதிக ஒதுக்குடன்) வருடத்தில் விடுவிக்கப்பட்ட/பயன்படுத்தப்பட்ட தொகைகளும் சென்ற வருட ஒப்பீட்டுடன் பின்வருமாறுள்ளது.

| மானியம் | வருடம் 2012 | | | | வருடம் 2013 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | மொத்த நிதி ஒதுக்கீடு மி.ரூபாய் | மொத்த நிதி விடுவிக்கப் பட்டது மி. ரூபா. | விடுவிக்கப்பட்ட /பயன்படுத்தப்பட் விகிதம் மொத்த ஒதுக்கீட்டின் % | | மொத்த நிதி ஒதுக்கீடு மி. ரூபா. | மொத்த நிதி விடுவிக்கப் பட்டது மி. ரூபா. | விடுவிக்கப்பட்ட /பயன்படுத்தப்பட் விகிதம் மொத்த ஒதுக்கீட்டின் % |
| மீண்டெழும் மானியங்கள் | 14,719.0 | 14,611.0 | 99% | | 18,316.5 | 16,932.4 | 92% |
| மூலதன மானியங்கள் | 5,778.5 | 4,340.8 | 75% | | 8,524.2 | 5,820.1 | 68% |
| மொத்தம்l | **20,497.5** | **18,951.8** | **92%** | | **26,840.7** | **22,752.5** | **85%** |

சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது, 2013ல் ஒதுக்கீட செய்யப்பட்ட மீண்டெழும் மானியமும், மூலதன மானியமும் முறையே 24%, 48% ஆல் அதிகரித்துள்ளன.

மேற்குறிப்பிட்ட அட்டவணையிற் காட்டப்பட்டவாறு, 2013ன் பயன்படுத்தப்பட்ட/ விடுவிக்கப்பட்ட மூலதன மானியங்கள் மூலதன ஒதுக்கீடான ரூபா. 5,820.1 மில்லியனின் 68% மட்டுமே. இது 2012ம் வருடத்துடன் ஒப்பிடும்போது 7% குறைவு.
ஆயினும், செலவின் அடிப்படையில் சென்ற வருடத்தைவிட 34% அதிகரிப்பு. (2012 - ரூபா. 4,340.8 மில்லியன், 2013 - ரூபா. 5,820.1 மில்லியன்).

2013ம் வருடத்திற்கான மூலதன மானிய பயன்படுத்தலின் குறைந்த வீதத்திற்கான காரணம் பிரதானமாக வேண்டப்பட்ட நிதியை பொதுத் திறைச்சேரி வருடத்தின் 3வது, 4வது கால் வருடங்களக்கு விடுவிக்கபடாமையேயாகும்.


## 2009 லிருந்து 2013 வரைக்கான நிதி செயல்திறன்

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள்

ரூபா. மி.Rs. மில

| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| **1. அரசாங்க ஒதுக்கீடு** | | | | | |
| மீண்டெழல் | 11,107 | 11,415 | 13,161 | 14,719 | 18,317 |
| மூலதனம் | 4,520 | 3,500 | 7,100 | 5,779 | 8.524 |
| **2. செலவீனம்** | | | | | |
| மீண்டெழல் | 10,227 | 10,962 | 12,961 | 14,591 | 16,932 |
| மூலதனம் | 2,726 | 2,832 | 4,279 | 4,361 | 5,820 |
| **3. மாணவர் நிதி உதவி** | | | | | |
| மஹாப்பொல | 92 | 93 | 127 | 125 | 94 |
| கல்வி கொடுப்பனவு | 297 | 328 | 357 | 375 | 386 |
| சுனாமி & நன்கொடை கல்வி உபகாரம் | 1 | 2 | 1 | 1 | 0.04 |

முலதன பகிர்ந்தளிப்பின் நிரயிடு - 2013



நிதி நிர்வாகம் - தலைப்பு 214

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் & உயர் கல்வி நிறுவனங்களனங்கள்

மீண்டெழும்/மூலதன மானியங்கள்ங்கள் ஒதுக்கீடு - 2011 வருடத்திலிருந்து 2013 வரை (மில்லியன் ரூபா.)

| பல்கலைக்கழகங்கள்/ நிறுவனங்கள | மூலதன மானியங்கள் | | | மீண்டெழும் மானியங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2011 | 2012 | 2013 |
| PDN | 464 | 393 | 742 | 2,235 | 2,267 | 2,627 |
| CMB | 400 | 357 | 664 | 1,243 | 1,270 | 1,586 |
| SJP | 383 | 354 | 729 | 1,126 | 1,302 | 1,691 |
| KLN | 386 | 350 | 427 | 1,100 | 1,256 | 1,614 |
| MRT | 375 | 289 | 546 | 882 | 942 | 1,165 |
| RUH | 455 | 337 | 568 | 1,153 | 1,223 | 1,475 |
| UJA | 545 | 543 | 794 | 786 | 869 | 959 |
| OUSL | 70 | 67 | 73 | 635 | 663 | 861 |
| EUSL | 230 | 422 | 588 | 372 | 427 | 514 |
| RUSL | 1,033 | 575 | 512 | 503 | 624 | 820 |
| SUSL | 387 | 321 | 435 | 431 | 531 | 624 |
| SEUSL | 181 | 244 | 308 | 318 | 338 | 460 |
| WUSL | 312 | 292 | 556 | 379 | 431 | 622 |
| UVPA | 342 | 194 | 262 | 328 | 379 | 469 |
| UWU | 287 | 207 | 300 | 180 | 234 | 319 |
| PGIA | 2 | 5 | 9 | 23 | 15 | 19 |
| PGIM | 1 | 8 | 28 | 80 | 64 | 55 |
| PGIAR | 22 | 5 | 9 | 43 | 45 | 49 |
| PIM | 15 | - | - | - | - | - |
| PGIS | 6 | 5 | 9 | 19 | 11 | 10 |
| PGIPBS | 1 | 4 | 3 | 11 | 10 | 11 |
| PGIE | 1 | 1 | 4 | 4 | 7 | 10 |
| IIM | 25 | 36 | 74 | 137 | 157 | 195 |
| IHRA | 4 | 7 | 11 | 22 | 25 | 33 |
| UCSC | 38 | 25 | 27 | 85 | 93 | 90 |
| GWAI | 149 | 91 | 146 | 111 | 128 | 144 |
| ITUM | 5 | 5 | 10 | 77 | 74 | 115 |
| NILIS | 2 | 2 | 4 | 8 | 9 | 12 |
| IBMBB | 31 | 29 | 18 | 35 | 35 | 48 |
| SVIAS | 18 | 18 | 58 | 42 | 58 | 72 |
| NCAS | 82 | 68 | 90 | 10 | 11 | 14 |
| Trinco | 129 | 73 | 203 | 69 | 89 | 132 |
| Vavuniya | - | - | - | - | - | 133 |
| IATRS | 21 | 24 | 17 | 7 | 8 | 11 |
| UGC | 701 | 427 | 300 | 153 | 151 | 1,292 |
| South Asian Universtity | - | - | - | - | - | - |
| **மொத்தம்** | **7,100** | **5,779** | **8,524** | **12,610** | **13,744** | **18,248** |
| செயற்றிறன் மானியங்கள் | - | - | - | 551 | 975 | 68 |
| **ஆக மொத்தம்** | **7,100** | **5,779** | **8,524** | **13,161** | **14,719** | **18,317** |

# 7. ப.மா.ஆ. குழு செயலகத்தின் ஊழியர் கோப்பு

2013ம் ஆண்டில் ப.மா.ஆ.குழு செயலகத்தின் ஊழியர் கோப்பு **293** ஆளணியினரை ஏற்பாடாகக் கொண்டிருந்தது. அவைகளில் **63** நிறைவேற்றுத் தரங்களும், **177** எழுதுவினைஞர் மற்றும் அதன் தொடர்பான தரங்களும், மற்றைய சார்பு நிலையும் தரத்தில் **53** ம் அடங்குகின்றன. 2013 டிசெம்பர் 31ல் மேற்குறிப்பிட்ட முதலாம் பிரிவில் **40** ம், இரண்டாம் பிரிவில் **119**ம், மூன்றாவது பிரிவில் **47** நபர்கள் மட்டுமே சேவையில் உள்ளார்கள்.

| | **2013** | | **2012** | | **2011** | |
|---|---|---|---|---|---|---|
| | **ஊழியர் கோப்பு** | **31.12.2013 ல் சேவையில்** | **ஊழியர் கோப்பு** | **31.12.2012 ல் சேவையில்** | **ஊழியர் கோப்பு** | **31.12.2011 ல் சேவையில்** |
| நிறைவேற்று தரங்கள் | 63 | 40 | 60 | 41 | 52 | 38 |
| எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் | 177 | 119 | 179 | 120 | 159 | 118 |
| மற்றைய சார்பு நிலை தரங்கள் | 53 | 47 | 53 | 47 | 57 | 46 |
| **மொத்தம்** | **293** | **206** | **292** | **208** | **268** | **202** |

## 7.1 ப.மா.ஆ. குழு ஊழியர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், உறுதிப்படுத்தல், ஓய்வுபெறல், பதவி விலகல்

ஆய்வு வருடத்தில், ப.மா.ஆ. குழுச் செயலகத்தில் 27 நிரந்தர, 9 ஒப்பந்த / ஒப்படை அடிப்படை நியமனங்கள்/தினசரி ஊதிய நியமனங்கள் இடம்பெற்றன. நிரந்தர நியமனங்களில் 12 நிறைவேற்று தரவகையினைச் சேர்ந்ததாகும்.
இவ் வருடத்தில் ப.மா.ஆ. குழுச் செயலகத்தின் ஊழியர்களில் நிறைவேற்றுத் தரங்களையும், எழுதுவிஞைஞர் மற்றும் அதனோடு இணைந்த தரங்களையும் கொண்ட 09 பதவியுயர்வுகளும், 14 நிரந்தரமாக்கலும் வழங்கப்பட்டன.

2013ல் பமாஆணைக்குழு செயலகத்தில் தொழிலாற்றிய 12 பணியாளர்கள் உயர் கல்வி நிறுவனங்களுக்கும், உயர் கல்வி நிறுவனங்களிலிருந்து 3 பணியாளர்கள் ப.மா. ஆணைக்குழுவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

2013ம் வருடத்தில், 4 பணியாளர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதுடன், 5 பணியாளர்கள் தங்களின் பதவிகளிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்கள்.

## 7.2 நீண்டகால சேவைக்கான விருதுகள்

ஆணைக்குழுவின் 678ம், 696ம், 893ம் இலக்கங்களையுடைய சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின்படி செயலகத்தின் ஆளணியினரில் நீண்டகால சேவைகள் விருதுகளைப் பெறுவதற்கு 3 பணியாளர்கள் தகுதி பெற்றார்கள். அவர்களால் பல்கலைக்கழக முறைமைக்கு அளிக்கப்பட்ட நீண்டகால, பாராட்டத் தக்க சேவைக்காக பண வெகுமதிகள் வழங்கப்பட்டன.

இந்த 3 பணியாளர்களில், 1 பணியாளர் 30 வருட சேவையினைப் பூர்த்தி செய்துள்ளதுடன், ஏனையோர் 25 வருடகால சேவையைப் பூர்த்தி செய்துள்ளார்கள்.

## 7.3 ஊழியர்களைப் பயிற்றுவித்தலும், விருத்தி செய்தலும்.

ஓவ்வொரு வருடமும் செயலகத்தின் ஆளணி உறுப்பினர்களுக்கு அவர்களின் கடமைகளுடன் தொடர்பான செயலமர்வுகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு பற்றி அவர்களின் தேர்ச்சிகளையும், வேலை அறிவினையும் அதிகரிக்கும் வாய்ப்பினை ப.மா.ஆ. குழு வழங்குகின்றது. இவ்வாறான செயலமர்வுகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் IPFDA, ICTAD, IMAC, ICASL, NIBM, HETC, NCAS, SDFL, SLF, பிரிட்டிஸ் கவுன்சில் போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுனங்களால் நடாத்தப்பட்டன.

இவ் வசதிகளோடு பல்கலைக்கழக முறைமையிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்படும் தொழில் விருத்திக்கு உதவும் கற்கை நெறிகளைத் தொடர விரும்பும் உத்தியோக அங்கத்தவர்களுக்கு நிதியுதவி வழங்கும் ஏற்பாடுகளுமுள்ளன.

(1) இவ் ஆய்வு வருடத்தில், ப.மா. ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட **16** நிறைவேற்று ஆளணி உறுப்பினர்களும், நிறைவேற்று ஆளணியினரல்லாத 20 உறுப்பினர்களும், அவர்களின் தொழில் பகுதிகளுக்கு நேரடி தொடர்புடைய பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றினார்கள்.

(2) ப.மா.ஆ. குழுவின் ஆளணியினரின் தமிழ் அறிவை மேம்படுத்தும் பொருட்டு மொழிக் கல்வி தேசிய நிறுவகத்தின் உதவியுடன் ப.மா.ஆ. குழு செயலகத்தில் 45 பணியாளர்களுக்காக தமிழ் மொழி கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது.

(3) எழுதுவினைஞர் மற்றும் தொடர்பான தரங்கள், சிற்றூழியர் தரங்கள் ஆகிய பிரிவுகளின் கீழுள்ள ஊழியர்களுக்கு மூன்று குழுக்களாக தொழில் ஆளுமை விருத்தி, சிற்றூழியர்களுக்கு தேர்ச்சிகள் விருத்தி மற்றும் அல்லது தனிப்பட்ட சீர்படுத்தல் ஆகியவற்றில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

(4) 6 நிறைவேற்று அதிகாரிகளுக்கு குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்ற கடமை லீவு வழங்கப்பட்டது.

## 7.4 இலங்கை அரச சேவை விளையாட்டு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை விளையாட்டு விழாவில் விசேட பங்களிப்பு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயலகத்தின் பணியாளர்கள் முதற் தடவையாக 2012/2013 அகில இலங்கை விளையாட்டு விழாவில் பங்குபற்றினார்கள். அவர்கள் பங்குபற்றிய பெரும்பாலான விளையாட்டு நிகழ்ச்சிகளில் வெற்றிகரமாக இருந்ததால் ப.மா. ஆணைக்குழுவிற்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்தார்கள்.

## 7.5 சுகாதார காப்புறுதி திட்டம்

வருடத்தின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சகல நிரந்தர ஊழியர்களுக்கும் அதிக நன்மைகளைக் கொண்ட சுகாதார காப்புறுதி திட்டத்தினை வழங்கும் பொருட்டு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் தற்போதுள்ள சுகாதார காப்புறுதி திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.

## 7.6 பாராட்டலும், வரவேற்பும்

ஆணைக்குழு இவ் ஆய்வு வருடத்தில், அதன் பணியாளர்களாகவிருந்து பதவியிலிருந்து நீங்கியோரினால் அளிக்கப்பட்ட சேவைகளை பாராட்டுவதையும், இவ் ஆய்வுக் காலத்தில் சேவையில் இணைந்துள்ளோரை வரவேற்பதையும் இவ் அறிக்கையில் பதிவு செய்து வைக்க விரும்புகின்றது.

# 8. மனித வளங்களின் முன்னேற்றம்

## 8.1 ஊழியர் கோப்பு மீள்பார்வை

ப.மா.ஆ. குழுவின் சிபாரிசிகளைக் கருத்திலெடுத்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2013ம் வருடத்திற்கு உயர்கல்வி நிறுவனங்களுக்காக 613 புதிய ஊழியர் கோப்பு பதவிகளை அனுமதித்தது. பல்கலைக்கழக ஊழியர் கோப்பின் கடந்த 4 லிருந்து 5 வருடங்களுக்கான அதிகரிப்பின் விபரம் பின்வருமாறு:

| | *2009* | *2010* | *2011* | *2012* | *2013* |
|---|---|---|---|---|---|
| கல்விசார் | 7,533 | 7,551 | 8,021 | 8,290 | 8,510 |
| கல்விசார் ஆதரவு ஊழியர்கள் | 880 | 882 | 882 | 906 | 939 |
| நிர்வாக மற்றும் ஏனைய ஆளணியினர் * | 877 | 879 | 898 | 1,023 | 1,075 |
| கல்வித்துறை சாராதவை நிர்வாக பணியணியினர் அல்லாதவர் | 10,463 | 10,471 | 10,491 | 10,824 | 11,132 |
| | 19,753 | 19,783 | 20,292 | 21,043 | 21,656 |

* மருத்துவ அதிகாரிகள் அடங்கலாக

## 8.2 நிர்வாக தரங்களுக்கான நியமனங்கள் / பதவியுயர்வுகள்

1978ம் ஆண்டின் பல்கலைக்கழக சட்டம் இல: 16ன் 71 (2)ம் பிரிவின் (ii), (iii) பந்தி மற்றும் பிரிவு 8 (1) ஆகியவற்றிக்கு அமைவாக ப.மா.ஆ. குழு நிர்வாகத் தரங்களுக்கு நியமனங்கள், பதவியுயர்வுகள் ஆகியவற்றினை செய்தல் வேண்டும். அதன்படி 2013ம் வருடத்தில் பின்வரும் நியமனங்களும் / பதவியுயர்வுகளும் செய்யப்பட்டன.

**நியமனங்கள்**

| | |
|---|---|
| சிரேஸ்ட உதவிச் செயலாளர் /சிரேஸ்ட உதவி பதிவாளர் பதவி | - 12 |
| சிரேஸ்ட உதவி கணக்காளர் / சிரேஸ்ட உதவி நிதியாளர்/ சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவி | - 14 |
| உதவி பதிவாளர்/பதிவாளர்(சட்டமும், ஆவணப்படுத்தலும்) பதவி | - 03 |
| உதவி பதிவாளர் (நூலக சேவைகள்) பதவி | - 06 |

**பதவியுயர்வுகள்**

(a) சிரேஷ்ட உதவி பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதியாளர்களை சம்பள U-EX 2(1) அலகில் இடம்பெறவைத்தல்

| | |
|---|---|
| சிரேஸ்ட உதவி பதிவாளர்கள் | - 05 |
| சிரேஸ்ட உதவி நிதியாளர்கள் | - 01 |

(b) வருடாந்த செயற்றிறன் ஆய்வு அறிக்கை (APER) திட்டத்தினை (ஆனணக்குழு சு.நி. இல: 668 ஐ அடிப்படையாகக் கொண்டு) சிரேஸ்ட உதவி பதிவாளர் சிரேஸ்ட உதவி நிதியாளர் பதவிக்கு பதவியுயர்வுகள்

| | |
|---|---|
| சிரேஸ்ட உதவி பதிவாளர்கள் | - 01 |
| சிரேஸ்ட உதவி நிதியாளர்கள் | - 06 |

(c) பிரதி செயலாளர்/பிரதி பதிவாளர் பதவி - 13

(d) பிரதி கணக்காளர்/ பிரதி நிதியாளர்/பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவி - 06

(e) சிரேஸ்ட உதவி பதிவாளர் (நூலக சேவைகள்) பதவி - 04

**8.3** 2013ம் வருடத்தில் 1978ம் பல்கலைக்கழக சட்டம் இல. 16ன் 71(2)(iii) ம் பிரிவின்படி நிர்வாகம் அல்லாத கல்விசார் அல்லாத தரங்களுக்கு ஊழியர்கள் நியமனங்களும் பதவியுயர்வுகளும் பின்வருமாறு செய்யப்பட்டன.

**(1)** **நியமனங்கள்**

| **பதவி** | **நியமனங்களின் எண்ணிக்கைகள்** |
|---|---|
| வேலைகள் பொறியியலாளர் (சிவில்) தரம் III | 03 |
| இலத்திரனியல் பொறியியலாளர் தரம் III | 01 |
| தகவல் முறைமைகள் முகாமையாளர் | 01 |
| பிரதான மருத்துவ அதிகாரி | 02 |
| பல் மருத்துவர் | 01 |
| காப்பாளர் (நிலத்தோற்றம்) தரம் III | 01 |
| உதவி பணிப்பாளர், பிராந்திய கல்விச் சேவைகள் | 18 |
| இடவசதியளித்தல் பணிப்பாளர் | 01 |
| மருத்துவ அதிகாரி | 07 |
| பட்டறை பொறியியளார் தரம் III | 01 |
| பிரதான பாதுகாப்பு அதிகாரி | 02 |
| பண்ணை முகாமையாளர் | 01 |

**(2)** **பதவியுயர்வுகள்**

| **பதவி** | **பதவிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| பிரதான பாதுகாப்பு அதிகாரி தரம் I | 03 |
| பிரதான தொழில்நுட்ப அதிகாரி | 02 |
| ஒலியுடன் கூடிய காட்சி தொழில்நுட்ப ஆதிகாரி (உயர் தரம்) | 01 |
| சிரேஷ்ட பிரத்தியேக செயலாளர் | 01 |
| சிரேஷ்ட ஆளணி தொழில்நுட்ப அதிகாரி | 06 |
| வேலைகள் பொறியியலாளர் தரம் II | 01 |

**(3)** U-EX 2(III) சம்பள திட்டத்தைச் சேர்ந்த 11 பணியாளர்கள் செயற்றிறன் தடை தாண்டி U-EX 2(II) சம்பளத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளார்கள

## 8.4 2013 *உள்வாரி-பல்கலைக்கழக மாற்றங்கள் - 2013*

2013ம் வருடத்தில் பல்கலைக்கழக சட்டம் இல. 78ம் பிரவின்படி, பின்வரும் உள்வாரி பல்கலைக்கழக இடமாற்றங்கள் ப.க.மா. ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| நிர்வாகத் தரங்கள் | - 26 |
| கல்விசார் அல்லாத, நிர்வாகம் அல்லாத ஊழியர்கள் | - 143 |

## 8.5 அறிமுக பயிற்சி வழங்கல்

19/07/2000 திகதியுடைய 12/2000 ம் இலக்க பொது நிர்வாக சுற்று நிருபத்தை உள்ளடக்கிய 10/2002 ம் இலக்க தாபன சுற்று நிருபக் கடிதத்தின் திருத்தப்பட்ட 29/03/2007 திகதியுடைய 03/2007 ம் இலக்க நிர்வாக சுற்று நிருப கடிதத்தின் பிரகாரம் உயர் கல்வி நிறுவனங்கள்/கல்வி நிலையங்கள் 643 பயிலுனர்களுக்கு 2013ல் நடைமுறைப் பயிற்சி அளிப்பதற்கான அனுமதியை ப.மா.ஆ. குழு வழங்கியது.

| | 2013 | 2012 |
|---|---|---|
| பயிலுனர்களின் எண்ணிக்கை | 643 | 930 |

## 8.6 ஆளணியினரின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

- ‘‘பல்கலைக்கழக சேவையிலுள்ள நிர்வாக மற்றும் நிதி அதிகாரிகளுக்கான விரிவான ‘‘தூண்டல் பயிற்சி செயல்முறைத்திட்டம்’’ வைகாசி 2013ல் ஆரம்பிக்கப்பட்டது. இது நிர்வாக மற்றும் நிதி அதிகாரிகள் தரத்திலுள்ள சகல புதிய அதிகாரிகளுக்காக வடிவமைக்கப்பட்டது. இது 3 பயிற்சியளித்தல் பருவங்களில் தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு (மாதமொன்றிற்கு ஒரு கிழமை) நடாத்தப்பட்டது. இதற்கான பயிற்சி கைநூல் தொடர்பான துறைகளைச் சேர்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்டது.

- ‘‘கல்விசார்பற்ற பணியணியினருக்காக அத்தியாவசிய மென்பொருள் தேர்ச்சி’’ என்னும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகம், தென் கிழக்கு பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் நிர்வாக தரங்கள் அடங்கலான கல்விசாராத சகல பிரிவுகளுக்கும் பணியணியினர் அபிவிருத்தி நிலையங்களால் HETC, HRDU ஆகியவறறுடன் இணைந்து நடாத்தப்பட்டன.

- 2013 யூலையில் ‘‘முகாமைத்துவ பீடங்களுக்கான பாடவிதான அபிவிருத்தி செயலமர்வு’’ ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், றுஹுனு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முகாமைத்துவ பீடங்களின் பீடாதிபதிகளால் பரிந்துரைக்கப்பட்ட கல்விசார் பணியணியினருக்காக நடாத்தப்பட்டது.

- இலங்கை பல்கலைக்கழங்களின் பல்கலைக்கழக பணியணியினர் வாழ்நாள் கற்கை தேர்ச்சிகளையும், ஆற்றல்களையும் பெறாவிட்டால், இத் தேர்ச்சிகளை இளநிலை பட்டதாரி மாணவர்களுக்கு வழங்க எடுக்கும் முயற்சிகள் முற்றாக வெற்றியடையாது. ஏனெனில் ஆசிரியர்கள் தாமே இத் தேர்ச்சிகளை பெற்றிருக்காதபடியால் இவ் விடயத்தை நூலகங்கள் மற்றும் தொடர்பாடல் விஞ்ஞான நிலையியல் குழுவினால் சிபார்சின் படி முன்னெடுக்கப்பட்டு, அதன் சிபார்சின் மீது ஆணைக்குழு தகவல் இலக்கிய தொகுதி ஒன்றை தற்பொழுது இடம் பெறும் பணியணியினர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்ப்பதற்கு அனுமதியளித்துள்ளது.

- எல்லா பதினைந்து பணியணியினர் அபிவிருத்தி நிலையங்களும் (SDCs) கிரமமாக அறிமுக நிலைநிறுத்தலுக்கான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்களை கல்விசார் பணியணியினருக்கும், மற்றும் கல்விசார் பணியணியினர், நிர்வாக, நிதி, நிறைவேற்று, தொழில் நுட்ப, கல்விசாரா, எழுதுவினைஞர், சிற்றூழியர் தரங்களிலுள்ளோருக்கு ஏனைய குறுங்கால

பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள், செயலமர்வுகள், வெளிவாரி பயிற்சியளித்தல் போன்றனவற்றையும் நடாத்துகின்றது.

- பணியாளர்கள் அபிவிருத்தி நிலையங்கள் 2011ம், 2012ம் வருடங்களில் ப.மா.ஆ. குழுவினால் வழங்கப்பட்ட நிதிகளை ஊழியர்கள் வளர்ச்சி நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் கொள்வனவிற்கும் திறனாற்றலுடன் பயன்படுத்தியதுடன், பல்கலைக்கழகங்கள் உகநிறுவனங்களின் சகல தரத்திலுமுள்ள பணியணியினர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தியது. ஆகவே, பமாஆணைக்குழு 2013ம் வருடத்திலும் கூட பணியணியினர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சுமார் ரூபா. 50 மில்லியனை ஒதுக்கியது. ப.அ. நிலையங்களுக்கும் ரூபா. 30 மில்லயனை – அதாவது ஏற்கனவே முதல் இரண்டு சுற்று நிதிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகள்/நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை தொடரவும், புதிய பணியணியினர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து ஆரம்பிக்கவும் ஒவ்வொரு ப.அ நிலையங்களுக்கம் 2 மில்லியனை முதல் இரண்டு சுற்று நிதிகளை வழங்கியுள்ளது.

## 8.7 பல்கலைக்கழக கல்விசார் அணியினருக்கு உதவித் தொகை விருது, உதவித் தொகை, ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் ஏனைய நிதி உதவிகளை வழங்குதல்

கல்விசார் அணியினர் விசேடமாக இளம் கல்விசார் அணியினர் உயர்கல்வியை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொடர வசதியளித்து ஊக்குவிக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கொள்கைக்கு அமைவாகவும், பல்கலைகழக முறைமையில் ஆராய்ச்சி கலாச்சாரத்தைப் பேணி, வலுப்படுத்தவும் ப.மா.ஆ.குழு கடந்த சில ஆண்டுகளில் அதிக நிதிகளை ஒதுக்கி ஒருங்கிணைதந்த முயற்சியை எடுத்துள்ளது. மேற்குறிப்பிட்ட நோக்கினை அடையும் பொருட்டு, ஆய்விலுள்ள வருடத்திலும் பின்வரும் மானியங்கள் வழங்கப்பட்டன;

### a) பி.எச்.டி ஆராய்ச்சி பட்டங்களுக்காக உளளுர் ஆராய்ச்சி மானியங்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2013ம் வருடத்தில் உயர் கல்வி நிறுவனங்கள் / நிறுவகங்களின் 34 கல்விசார் பணியாளர்களுக்கு பட்டப் பின்படிப்பு தராதரங்களைப் பெறும் வாய்ப்புக்களை விரிவாக்க உள்ளுர் ஆராய்ச்சி மானியத்தின் கீழ் ரூபா. 8,803,427/05 பெறுமதியான மானியங்களை அனுமதித்து.

| | பெறுவோரின் மொத்த எண்ணிக்கை 2013 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொகை ரூபா. | தொகை ரூபா. | தொகை ரூபா. | தொகை ரூபா. | தொகை ரூபா. | தொகை ரூபா. |
| குழு 2008 | 03 | 5,950,000 | 1,075,000 | 500,000 | 2,750,182 | 550,000.00 | 592,347.00 |
| குழு 2009 | 08 | - | 5,350,125 | 7,273,900 | 1,381,700 | 2,540,187.05 | 2,212,825.05 |
| குழு 2011 | 18 | - | - | - | 2,530,000 | 2,530,819.00 | 4,138,255.00 |
| குழு 2012 | 05 | - | - | - | - | - | 1,860,000.00 |
| **மொத்தம்** | **34** | 5,950,000 | 6,425,125 | 7,773,900 | 6,661,882 | 5,621,006.05 | 8,803,427.05 |

### b) பிராந்திய/தேசிய அபிவிருத்தி தொடர்பான புத்தாக்க ஆராய்ச்சி மானியங்கள் திட்டத்தை அறிமுகம் செய்தல்

ப.மா.ஆ குழு இலங்கையின் உகநிறுவனங்களில் துடிப்பான ஆராய்ச்சி கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கு உறுதி கொண்டுள்ளது. இதற்காக

ஏனையவற்றுடன், இது, பிராந்திய/தேசிய அபிவிருத்தி தொடர்பான அதிக தாக்கமுடைய புத்தாக்க ஆராய்ச்சியை மேம்படுத்தும் நோக்காகக் திட்டம் ஒன்றை உயர் கல்வி அமைச்சுடன் கூட்டாக புதிய மானிய திட்டத்தை நிர்வகிக்கின்றது. பணி மதிப்பீட்டு அளவை அமைக்கவும், ஆராய்ச்சில் உயர் தரங்களைப் பேணவும், ப.மா.ஆ குழு ஆராய்ச்சி 08 உறுப்பினர்களைக் கொண்ட ஆராய்ச்சி ஆலோசனை குழுவை (RAC) நிறுவியுள்ளது. இக் குழு உயர் கல்வித் துறையில் பிரதான பிரிவுகளை பிரதிபலிக்கின்றது. குழுவின் முதலாவது கூட்டம் 06.08.2013ல் நடாத்தப்பட்டது.

2013ம் வருடத்திற்காக இம் மானிய திட்டத்தின் கீழ் பன்னிரண்டு ஆராய்ச்சி திட்டங்கள் மதிப்பிடப்பட்டன. அவைகளில் ரூபா. 53.0 மில்லியன் (சுமார்) பெறுமதியான நான்கு திட்டங்கள் பின்வருமாறு வழங்கப்பட்டன. (எவ்வாறாயினும், 2013ல் முதல் தவணைப்பணம் மட்டும் வழங்கப்பட்டது):

| துறை | வெகுமதிகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா.) |
|---|---|---|
| மருத்துவம | 2 | 39,771,588.50 |
| விஞ்ஞானம | 2 | 13,140,000.00 |
| **மொத்தம்** | **4** | **52,911,588.50** |

### c) பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி வெகுமதித் திட்டம்

2013ல், ப.மா.ஆ குழு பல்கலைக முறைமைகளின் அதன் அதிகார எல்லைக்குள் வரும் நிரந்தர ஆசிரியர்களுக்கு முதுகலை மற்றும் முனைவர் பட்டம், கலைமாணி நிகழ்ச்சித்திட்டங்களை பயிலும் நோக்கத்திற்காக தற்போதுள்ள திட்டத்தின் பயன்களைப் விஸ்தரிப்பதற்காக நிதி உதவியை வழங்கும் புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது. உயர் கல்வி நிலையங்களிலுள்ள எவையேனும் துறையைச் சேர்ந்த தகுதிகாண் விரிவுரையாளர்களும், சிரேஸ்ட விரிவுரையாளர்களும் இத் திட்டத்தின் கீழ் இலங்கையில் அல்லது SAARC/ASEAN பிராந்தியத்தில் அதிக ஆய்வுகளை மேற்கொள்ள நிதி உதவியை பெறுவதற்கு தகுதியுடையவர்களாவார்கள். பின்னர் இவ் வசதி மற்றைய நாடுகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இம் மானிய திட்டம் உகநிறுவனங்களிலுள்ள கல்விசார் பணியணியினருக்கு பிராந்திய தேவைகள், பிரச்சினைகள் ஆகியவற்றை பற்றி முதுகலை ஆராய்ச்சியை மேற்கொண்டு அதன் மூலம் தேசிய கொள்கைக்கு ஏற்ப பிராந்திய அபிவிருத்தியை மேம்படுத்த உதவுகின்றது. இது மேலும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏற்கனவே முதுகலை பட்டமானி நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதிவு செய்து அதனை பூர்த்தி செய்ய போதுமான நிதியின்றி பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் விண்ணப்பதாரிகளுக்கும் பகுதி ஆதரவு வழங்குகின்றது.

இம் மானியத்தின் மொத்த பெறுமதி பட்டத்துறை, கற்கையின் தன்மை, பயிலும் பட்டமானி, அது நடாத்தப்படும் நாடு ஆகியவற்றைக் கொண்டு வேறுபடும். ஆயினும் இது ஆய்வில் நிறைஞர் (அல்லது மாஸ்டர்) பட்டமானிக்கு ரூபா. 2,500,000/= க்கும், கலாநிதி பட்டமானிக்கு ரூபா. 3,500,000/- க்கும் மேற்படாதிருக்கும். இம் மானியங்கள் முன்மொழிவின் தரம் முன்மொழியப்பட்ட கற்கையின் விஞ்ஞான சிறப்பும் அதன் தொடர்பும் ஆகியவற்றை கொண்ட போட்டி அடிப்படையில் வழங்கப்படுகின்றது. இத் திட்டத்தின் கீழ் மொத்தப் பெறுமதியாக ரூபா. 65 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 58 முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன்,

அவற்றில் 42 முன்மொழிவுகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டு 2013ம் வருடத்தில் ரூபா. 35 மில்லியன் செலுத்தப்பட்டன.

**d) பொதுநலவாய கல்வி புலமைப்பரிசில், உதவித்தொகை விருதுகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பொதுநலவாய கல்விசார் பணியணியினர் உதவித்தொகைக்காக இலங்கை பல்கலைக்கழகங்களிலிருந்து 16 கல்விதுறை சார்ந்தோரை பரிந்துரைத்தது. அவர்களில் 12 விண்ணப்பதாரிகள் பொதுநலவாய சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த 2 வருடங்களில் பல்கலைக்கழக ரீதியில் இவ் விருதுகளைப் பெற்றவர்கள் விபரங்கள் பின்வருமாறு;

| பல்கலைக்கழகம் | 2012 | 2013 |
|---|---|---|
| CMB | 3 | 3 |
| PDN | 4 | - |
| KLN | - | 1 |
| SJP | 1 | 2 |
| MRT | - | - |
| UJA | 1 | - |
| RUH | 2 | 3 |
| OUSL | 1 | - |
| SUSL | 2 | - |
| WUSL | - | 2 |
| RUSL | - | 1 |
| **மொத்தம்** | **14** | **12** |
| **பொதுநலவாய தெரிவு** | **01** | **01** |

2013ல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2014/2015 வருடத்திற்கான பொதுநலவாய கல்விசார் புலமைப்பரிசில்களுக்கும், உதவித்தொகைக்கும் 20 கல்வித்துறை சார்ந்தோரை பரிந்துரை செய்துள்ளது.

**e) பல்கலைக்கழகங்களின் கல்விசார் பணியாளருக்கான விமானப் பயணத்திற்கான நிதி உதவி**

சமீபத்திய ஆண்டுகளில், வெளிநாடு சென்று பட்டப்பின்படிப்பு தராதரங்களைப் பெறுவதற்காக பல்கலைக்கழகங்களின்/உயர் கல்வி நிலையங்களின் கல்விதுறை சார்ந்த ஊழியர்களுக்கு விமானப் போக்குவரத்திற்கான நிதி உதவி ப.மா.ஆ. குழுவினால் பின்வருமாறு வழங்கப்பட்டது;

| | | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| ப.மா.ஆ குழுவினால் அனுமதிக்கப்பட்ட/ வழங்கப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை | உள்வாரியாக | 30 | 22 | 33 | 34 |
| | வெளிவாரி | 62 | 77 | 65 | 55 |
| தொகை ரூபாவில் | | 4,804,417.28 | 8,248,180.38 | 7,046,661.32 | 6,754,729.63 |

ஆய்விலுள்ள வருடத்தின் போது பல்கலைக்கழகங்களுக்கு கல்விதுறை சார்ந்தோருக்:

| பல்கலைக்கழகம் | 2013ல் பமாஆ குழுவினால் அனுமதிக்கப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை | | 2013ல் பமாஆணைக்குழுவினால் பல்கலைக்கழகங்களுக்கு உண்மையாக செலுத்தப்பட்ட தொகை (ரூபா.) |
|---|---|---|---|
| | உள்வாரி | வெளிவாரி | |
| கொழும்பு பல்கலைக்கழகம் | 3 | 3 | 451,085.25 |
| பேராதெனியா பல்கலைக்கழகம | 5 | 9 | 1,079,749.38 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 1 | 5 | 317,584.00 |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | 5 | 5 | 673,910.00 |
| றுஹுணு பல்கலைக்கழகம் | 4 | 4 | - |
| மொரட்டுவை பல்கலைக்கழகம் | 2 | 8 | 1,307,351.00 |
| இலங்கை சப்ரகமுகவ பல்கலைக்கழகம் | 4 | 8 | 494,550.00 |
| களனி பல்கலைக்கழகம் | 7 | 3 | 811,410.00 |
| இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் | 1 | 2 | 75,450.00 |
| கட்புல மற்றும் அரங் கேற்ற கலைகள் பல்கலைக்கழகம் | 2 | 2 | 177,520.00 |
| இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | - | 5 | 1,226,020.00 |
| இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | - | 1 | - |
| இலங்கை திறந்த பல்கலைக்கழகம | - | - | 140,100.00 |
| **மொத்தம்** | **34** | **55** | **6,754,729.63** |

## 9. உட்கட்டமைப்பு அபிவிருத்தி

2013ல் புதிய கட்டுமானம் மற்றும் தொடர் வேலைத்திட்டங்கள், புனர்நிர்மாண வேலைத்திட்டங்கள், கொள்வனவுகள், புதிதாக நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு திட்டங்கள் போன்றவற்றிக்கும், மாணவர்களின் அறிவாற்றலளவு ஆக்கத்திற்கை கட்டியமைப்பதற்காக மொத்தமாக ரூபா. 8,459 மில்லியன் ஒதுக்கப்பட்டது. திறைசேரி ரூபா. 7,292 மில்லியனை மட்டுமே சிபாரிசு செய்தது. ஆயினும், இவ்வருடத்தில் நிதியினை விடுவிப்பதையிட்டு திறைசேரி பல்வேறு வரையறைகளை விதித்ததால், 2013ம் வருட இறுதியில் பல்கலைக்கழகங்களுக்கும் உயர்கல்வி நிறுவனங்களுக்கும் ரூபா. 5,590 மில்லியனையே பெறக்கூடியதாகவிருந்தது.


இவ் வருடத்தில் ஆணைக்குழுவினால் 59 புதிய வேலைத்திட்ட பிரேரணைகள் பல்கலைகழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டன. அவைகளைக் கவனமாக ஆராய்ந்து மதிப்பிட்டதன் பின்னர், அவற்றில் 39* மட்டுமே ஆணைக்குழுவினால் வருட இறுதியில் அனுமதிக்கப்பட்டது. 2013ல் தேசிய திட்டமிடல் திணைக்களம், புதிய வேலைத்திட்டங்களில் 35*க்கு அனுமதி வழங்கியது. சென்ற வருடங்களில் பெறப்பட்ட வேலைத்திட்ட பிரேரணைகள்கள் அடங்கலாக மொத்தமாக 49* வேலைத்திட்டங்களுக்கு இவ்வருடத்தில் மந்திரி சபையால் அனுமதியளிக்கப்பட்டது. இவ் 49* வேலைத்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 10,885.66 மில்லியனாகும். 2013ல் 26#* வேலைத்திட்டங்கள் பௌதீக ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. வருட இறுதியில் பல்கலைக்கழக முறைமையில் வெவ்வேறு கட்டங்களில் ரூபா. 10,201.92 மில்லியன் பெறுமதியான 48#* கட்டுமான வேலைத்திட்டங்களின் வடிவமைப்பு, கட்டட அமைப்பு செயல்முறைகள் நடைமுறையிலுள்ளன. ஆய்வு வருடத்தின் போது, மதிப்பிடப்பட்ட மொத்த செலவீனமாக ரூபா. 1,551.50 மில்லியன் பெறுமதியுடைய 13#* வேலைத்திட்டங்கள் பூர்த்தி


செய்யப்பட்டு பல்கலைக்கழக முறைமைக்கு கையளிக்கப்பட்டன. அவைகளின் விபரங்கள் பின்வருமாறு;


| | 2010 | | 2011 | | 2012 | | 31 டிசம்பர் 2013 வரை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **கருத்திட்டங்களின் எண்ணிக்கை** | **மொத்த பெறுமதி (ரூபா மி)** | **கருத்திட்-டங்களின் எண்ணிக்கை** | **மொத்த பெறுமதி (ரூபா மி)** | **கருத்திட்டங்களின் எண்ணிக்கை** | **மொத்த பெறுமதி (ரூபா மி)** | **கருத்திட்டங்களின் எண்ணிக்கை** | **மொத்த பெறுமதி (ரூபா மி)** |
| ப.மா.ஆ.குழுவினால் பெறப்பட்ட வேலைத்திட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | **39** | **12,671.06** | **31** | **5,535.40** | **20** | **3,755.83** | **59** | **12,466.54** |
| ப.மா.ஆ.குழுவினால் அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | ***11** | **3,744.61** | ***24** | **8,069.00** | ***22** | **2,512.35** | ***39** | **8,577.34** |
| தேசிய திட்டமிடலுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | ***12** | **5,913.36** | ***24** | **7,762.02** | ***23** | **3,306.93** | ***39** | **8,577.34** |
| தேசிய திட்டமிடலால் அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | ***10** | **1,499.64** | ***15** | **4,351.8** | ***07** | **3259.13** | ***35** | **6,361.21** |
| அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | ***12** | **1,583.8** | ***12** | **1,317.47** | ***11** | **4,854.87** | ***49** | **10,885.66** |
| வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | ***14** | **2,799.4** | **#*17** | **2,496.9** | **#*11** | **1,514.70** | **#*26** | **3,546.22** |
| நடைமுறையிலுள்ள வேலைத்திட்டடங்களின் எண்ணிக்கை (தொடர்ச்சி) | ***60** | **13,637.95** | **#*41** | **14,662.55** | **#*44** | **13,672.40** | **#*48** | **10,201.92** |
| பூர்தியடைந்த வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | ***22** | **2,780.6** | **#*12** | **2,223.45** | **#*13** | **2,778.30** | **#*13** | **1,551.5** |

* முந்திய வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் பிரேரனைகள் அடங்கலாக.

# கருத்திட்டத்தின் பௌதீக நிலைமைகளை மட்டும் கருத்திலெடுக்கப்பட்டது




**9.1 பல்கலைக்கழக முறைமையின் கீழ் 30 மாணவர் விடுதிகளை கட்டமைப்பதற்கான அமைச்சரவை அனுமதி மேற்குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் 2013ல் வழங்கப்பட்டது: (மாணவர் விடுதிகளை நிர்மாணிப்பதற்கான துரித வேலைத்திட்டம்)**

| | திட்டங்களின் எண்ணிக்கை | 2013ல் வழங்கப்பட்ட திட்டங்கள் | மொத்தப் பெறுமதி (ரூபா. மி) |
|---|---|---|---|
| **மாணவர் விடுதி – கட்டம் I** | 30 | 30 | 13,860.00 |
| **மாணவர் விடுதி – கட்டம் II** | 26 | - | |

**9.2 மேலதிக மாணவர்களை 2011/2012 & 2012/2013 ல் சேர்ப்பதற்காக ரூபா. 20 மில்லியனுக்கு கீழான வேலைத் திட்டங்கள்**

இவ் வருடத்தின் போது பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக மாணவர்களை உள்வாங்க வசதியளிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களம் ரூபா. 20 மில்லியனுக்கு கீழான விசேட வேலைத்திட்டங்களின் கீழ் ரூபா. 670.5 மில்லியன் பெறுமதியான 60 வேலைத் திட்டங்களை அனுமதித்தது.

## 10. தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி

**பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில் நுட்ப ஆட்சி செயல்முறையை நடைமுறைப்படுத்தல்**

தகவல் தொழில் நுட்ப ஆட்சி கூட்டிணைந்த ஆட்சியின் ஒரு பகுதியாகவிருப்பதுடன், நிறுவனங்களின் உத்திகளும், நோக்கங்களுக்கும் அந் நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்பம் ஆதரவு அளிக்கின்றதென்பதை நிச்சயப்படுத்தும் கோட்பாடாகவுமுள்ளது. பல்கலைக்கழகங்களின் தொழில் நுட்ப ஆட்சி நிலைமையை அறிவதற்காக ஆய்வொன்று நடாத்தப்பட்டது.

ப.மா.ஆ.குழுவின் கூட்டிணைந்த திட்டத்துடன் இணைந்து, பல்கலைக்கழகங்களிலுள்ள தகவல் தொழில்நுட்ப ஆட்சியின் நிலையினை இனம் காண்பதற்கும், தகுந்த ஆட்சி மூலம் பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில் நுட்பங்களை ஆற்றலுடனும், வினைத்திறனுடனும் பயன்படுத்தலை விரிவாக்கும் பொருட்டு தகவல் தொழில் நுட்ப ஆட்சியையிட்டு விழிப்புணர்வுகளை ஊட்டுவதற்குமாக ஆய்வொன்று நடாத்தப்பட்டது.

**தகவல் தொழில்நுட்ப நிதிகள் பயன்படுத்தல் - 2012/2013**

தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு மற்றும் தொழில் நுட்ப திறனை மேம்படுத்துவதற்காக பின்வரும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு 2013ல் ரூபா. 11,397 மில்லியன செலுத்தப்பட்டன.

| நிறுவனங்கள் | வேலைத்திட்டம் | 2013ல் செலுத்தப்பட்ட தொகை(ரூபா.) |
|---|---|---|
| IATRS | ICT அடிப்படையாகக் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 5,500,000/- |
| GWAI | நடைமுறையிலுள்ள இணையத்தள வசதிகளை அபிவிருத்தி செய்தல் | 4,000,000/- |
| திரிகோணமலை வளாகம் | கணனி வசதிகளை மேம்படுத்தல் | 1,897,000/- |
| | **மொத்தம்** | **11,397,000/-** |

## 11. உயர் கல்வியில் தரத்தை உறுதிப்படுத்தல்

2005 ஆண்டிலிருந்து, தர உறுதிப்படுத்தல் சபையினால் 318 விடய நிகழ்ச்சித்திட்டங்கள் 40 விடய குழுக்களினால் மீள்பார்வை செய்யப்பட்டதுடன் 43 அளவு மதிப்பிடல் புள்ளிகள் விடய அறிக்கைகள் நிறுவப்பட்டன. 4 அளவு மதிப்பிடல் புள்ளிகள் அறிக்கைகள் 2013 முடிவுவரை நடைமுறைகளிலுள்ளன. கேள்வி அதிகமாகவுள்ள பகுதிகளுக்கான கல்வித்துறை நிகழ்ச்சித்திட்டங்களை மீள்பார்வை செய்வதற்காக பாடவிதான மீள்பார்வைகள் தேசிய, சர்வதேச அளவு மதிப்பிடல் புள்ளிகளுடன் பேணுவதற்காக பல்கலைக்கழகங்களினால் நடாத்தப்பட்டன. 13 நடைமுறை நியதிகள் உற்பத்தி செய்யப்பட்டன. 2013ல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவன மீள்பார்வைகளுக்கான இரண்டாவது மீள்பார்வை சுற்றுவட்டம், நிறுவன மீள்பார்வை நடாத்துவதற்காக 4 பல்கலைக்கழகங்கள் இனம் காணப்பட்டன. இக் காலகட்டத்தில், உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை மேம்படுத்த தேசிய, பல்கலைக்கழக/பீடங்கள் மட்டத்தில் 29 செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன.

**2013 ஜனவரியில் இருந்து நடாத்தப்பட்ட செயலமர்வுகள்**

| நிகழ்சித் திட்டம் | தேசிய | சர்வதேச | பல்கலைக்கழகம்/ பீடம்/ துறைகள்/ நிறுவகம் |
|---|---|---|---|
| 1.பல்கலைக்கழகங்களில் உள்ளக தரத்தை உறுதிப்படுத்தல் | - | - | 07 |
| 2.பல்கலைக்கழகங்களில் பாட மீள்பார்வை செய்ல்முறைகள் | - | - | 02 |
| 3. மாணவர் கருத்தும் கூர்ந்த கவனிப்பும் | - | 01 | - |
| 4. பல்கலைக்கழகங்களில் புதிய தர உத்தரவாத அபிவிருத்திகள் | - | - | 11 |
| 5. ஏனைய தர உத்தரவாதம் தொடர்பான செயலமர்வுகள் | 02 | 01 | 05 |
| மொத்தம் | 02 | 02 | 25 |
| | 29 | | |

**பல்கலைக்கழகங்களில் நிகழ்ச்சித்திட்டங்களை அங்கீகரித்தலின் நிலைமை**

| | பாட ஒழுங்கு | அங்கீகரிப்பு கைநூல் தயாரிப்பு |
|---|---|---|
| 1. | விவசாயம் தொடர்பானவை | பூர்த்தி |
| 2. | கலை தொடர்பானவை | நடைமுறையில் |
| 3. | முகாமைத்துவம் | பரிசீலனைப் பட்டியல் பூர்த்தி செய்யப்படவேண்டும் |
| 4. | விஞ்ஞானமும், மீன்வளமும் | பரிசீலனைப் பட்டியல் பூர்த்தி செய்யப்படவேண்டும |
| 5. | பொறியியல், கட்டடக்கலை, கேத்திர கணிதம், தகவல் தொழில்நுட்பம் | பரிசீலனைப் பட்டியல் பூர்த்தி செய்யப்படவேண்டும் |
| 6. | மருத்துவம், பல்சிகிச்சையும், இணைந்த சுகாதாரமும் | பரிசீலனைப் பட்டியல் பூர்த்தி செய்யப்படவேண்டும |

Q

QAA சபையினால் "இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட வெளிவாரி தர மதிப்பிடலை கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு முறை" க்காக சர்வதேச விருதை பெறமுடிந்தது. இது தாய்பேயில் நடைபெற்ற ஆசிய பசுபிக் தர வலையமைப்பு (APQN) 2013 வருடாந்த மாநாட்டில் தர உறுதிப்படுத்தலில் புதுமையாக்கம் பகுதியில் 46 சமர்ப்பிப்புகளின் போட்டிக்கிடையில், 1வது அங்கீகாரம் பெற்ற QA முகவராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 12. மாணவர் தொடர்பான விடயங்கள்

**பல்கலைக்கழக மாணவர் சாசனம்**

பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு 2013ல் "பல்கலைக்கழக மாணவர் சாசனம்" ஒன்றை அரச பல்கலைக்கழகங்களில் சேரும் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும், பல்கலைக்கழங்களுக்கும், அதன் மாணவர்களுக்கும் இடையேயுள்ள ஒப்பந்த நிலைமைகளைக் குறிப்பிடும் ஆவணமாகவும் சேவையாற்றும் பொருட்டும் வழங்கியது.
அரச பல்கலைக்கழகங்களின் சுமுகமான செயலாற்றலுக்கு அதன் சகல பங்காளர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படும் பொறுப்புணர்வை இச் சாசனம் வலியுறுத்துவதால், அது கல்வித்துறைசார், நிர்வாக மற்றும் ஆதரவு ஆளணியினர், பொதுமக்கள் ஆகியோருக்கு வழிகாட்டியாகவும் உதவுகின்றது. மேலும் இப் பல்கலைக்கழக மாணவர் சாசனம் அரச பல்கலைக்கழகங்கள் தங்களுக்கு கடமைப்பாடாக ஒப்படைக்கப்பட்ட பங்கினை ஆற்றி, நிறுவனத்தின் மூலாதார பெறுமதியினையும், கோட்பாடுகளையும் பாதுகாத்து தக்கவைப்பதற்கு சாத்தியமான ஒத்துளைப்பையும், பங்களிப்பினையும் செய்வதற்காக மாணவர்கயை ஆவலோடு தூண்டுகின்றது.

## 13. பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி

### 13.1 அறிமுகம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு 03 பிரதான திட்டங்களின் கீழ் நிதி உதவியளிக்கப்படுகின்றன. அவையாவன:

மஹாப்பொல புலமைப்பரிசில் திட்டம்
பல்கலைக்கழக கல்வி நிதியுதவித் திட்டம்
அறக்கட்டளைகள் கொடைகள் புலமைப்பரிசில் திட்டம்

இம் மூன்று திட்டங்களில், மஹாப்பொல புலமைப் பரிசில்களுக்கும், அறக்கொடைகள் புலமைப் பரிசில்களுக்குமான மாணவர்கள் வருடாந்தம், ப.க.மா. ஆணைக்குழுவினால் தெரிவு செய்யப்படும் அதேவேளை, பல்கலைக்கழக கல்வி நிதியுதவிக்கான தெரிவுகள், அந்தந்த பல்கலைக்கழகங்கள்/உ.க. நிறுவனங்களினால் கையாளப்படுகின்றன.

(1) **மஹாப்பொல புலமைப் பரிசில்கள்**
மஹாப்பொல புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ், மஹாப்பொல உயர் கல்வி புலமைப் பரிசில்கள் நம்பிக்கை நிதியம் இரு வகையான புலமைப் பரிசில்களை – அதாவது மஹாப்பொல திறமை புலமைப் பரிசில்கள், மஹாப்பொல உயர் கல்வி சாதாரண புலமைப் பரிசில்கள் ஆகியவற்றை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் இணைந்து வழங்கப்படுகின்றது.

(2) **கல்வி நிதியுதவி, மஹாப்பொல புலமைப்பரிசில் கொடுப்பனவு**
மஹாப்பொல புலமைப்பரிசில்கள் - திறைசேரி பங்களிப்பு மற்றும் கல்வி நிதியுதவி செலுத்துவதற்கான நிதிகள் ப.மா. ஆணைக்குழுவிற்கு, மதிப்பீட்டிலான மஹாப்பொல/கல்வி நிதியுதவி பெறுவோரையும், தற்போதுள்ள புலமைப்பரிசில் தவணைப்பணப் பெறுமதியையும் அடிப்படையாகக் கொண்டு ப.மா. ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

| மாணவருக்கான நிதியுதவியின் வகை | மஹாபொல புலமைப்பரிசில்கள் | | | நிதியுதவிகள் | | | அறக்கட்டளைக் கொடை புலமைப்பரிசில்கள் / ஏனைய நிதி உதவிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2011** | **2012** | **2013** | **2011** | **2012** | **2013** | **2011** | **2012** | **2013** |
| **மாணவர் எண்ணிக்கை** | 32,272 | 33,089 | 39,471 | 17,996 | 23,446 | 28,983 | 66 | 69 | 55 |
| **செலுத்தப்பட்ட மொத்தப் பணம் ரூபா. (மி)** | 126.8 | 101.46 | 94.95 | 357.1 | 283.4 | 385.9 | 0.96 | 2.5 | 2.5 |

(3) **அறக்கட்டளைக்கொடை புலமைப்பரிசில்கள்**

மேற்குறிப்பிட்ட புலமைப்பரிசில்களுக்கு மேலாக, கருத்திலெடுக்கப்படும் வருடத்தில் பின்வரும் புலமைப்பரிசில் திட்டங்களும் கூட நடைமுறையிலிருந்தன.

**(a) மிட்சுபிஷி கூட்டுத்தாபன சர்வதேச புலமைப் பரிசில்கள்**

மிட்சுபிஷி கூட்டுத்தாபன நிதியளிக்கப்படும் புலமைப பரிசில்கள் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று ப.மா.ஆ. குழுவிற்கும் மிட்சுபிஷி கூட்டுத்தாபனத்துக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது.
இப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தினதும், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தினதும் முகாமைத்துவ கற்கை நெறிகளைக் கற்க தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு முப்பது (30) புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப் புலமைப்பரிசிலின் வருடாந்த பெறுமதி ரூபா. 48, 000/= (12 மாதத்தவணைகளில் ரூபா. 4,000 வீதம் செலுத்தக்கூடியது) ஆகும். இந்த புலமைப்பரிசில் ஒரு வருட காலத்தைக் கொண்டிருப்பதுடன் மற்றொரு வருடத்திற்கு நீடிக்ககூடிய சாத்தியமுடையதுமாகும்.

**(b) பொலீஸ் சி.டவ்ளியு.சி நன்மைகள் திட்டம்**

பொலீஸ் சி.டவ்ளியு.சி நன்மைகள் திட்டத்தினால் நிதியளிக்கப்படும் இப் புலமைப்பரிசில்களின் கீழ், பொறியியல், மருத்துவம், விவசாயம் துறைகளில் மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பேராதெனிய பல்கலைக்கழகம், வயம்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கு 2011/2012 கல்வியாண்டிற்கு மூன்று (03) புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

ரூபா. 20,000/= த்தை வருடாந்த பெறுமதியாகக் கொண்ட இப் புலமைப் பரிசில் பத்து (10) மாதத் தவணைகளில் ரூபா. 2000/= வீதம் கற்கை நெறியின் முழுக்காலத்திற்கும் வழங்கப்படும்.

**(4) சுனாமியால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம்**

உள்நாட்டு, வெளிநாட்டு நலன் விரும்பிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நன்கொடைகளைக் கொண்டு ப.க.மா. ஆணைக்குழுவினால் 2005ல் நிறுவப்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான சுனாமி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், இளநிலைப் பட்டடதாரி மாணவர்களுக்கு 2013ம் வருடத்தில் ரூபா. 305, 846/89 வழங்கப்பட்டது.

## 13.2 புலமைப்பரிசில்கள் வழங்கலை ஒருங்கிணைத்தல்

- **பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோருக்கான வர்த்தக வங்கியின் புலமைப்பரிசில் திட்டம்**

  வர்த்தக வங்கியின் புலமைப் பரிசில் திட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கிய மருத்துவ, முகாமைத்துவ பீடங்களில் கற்பதற்கு பல்கலைக்கழகம் செல்வோருக்கான வடிவமைக்கப்பட்டுள்ளது. இப் புலமைப்பரிசிலின் பெறுமதி வருடத்திற்கு ரூபா. 25,000/- ஆகவிருப்பதுடன் 10 தவணைகளில் வழங்கப்படுகின்றது.

அதன்படி 2011/2012 கல்வியாண்டிலிருந்து 25 மாணவர்கள், 2011 க.பொ.த (உ/த) பரீட்சைகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு சிரத்தையுள்ள வருடத்தில் தெரிவு செய்யப்பட்டார்கள்.

| | |
|---|---|
| கொழும்பு பல்கலைக்கழகம் | - 2 |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | - 7 |
| பேராதெனிய பல்கலைக்கழகம் | - 4 |
| களனி பல்கலைக்கழகம் | - 9 |
| இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் | - 3 |

## 14. அதிமேதகு ஜனாதிபதியின் உயர் கல்வி அமைச்சிற்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குமான வருகை.

2013 மார்ச் 1ம் திகதி, அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் உயர் கல்வி அமைச்சிற்கும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர் கல்வியின் நடுத்தர கால முதலீட்டு திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்திற்காக வருகை தந்தார்கள். இக் கூட்டம் ப.மாஆணைக்குழுவின் மண்டபத்தில் நிறுவனங்களின் உயர்மட்ட முகாமையாளர்கள், அதேபோல் அனைத்து பல்கலைக்கழக முறைமையின் உப-வேந்தர்கள், பணிப்பாளர்கள் மற்றும் முதல்வர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது.




## 15. கௌரவ உயர் கல்வி அமைச்சருடனான முன்னேற்ற கூட்டங்கள்

கௌரவ உயர் கல்வி அமைச்சர் கல்வித்துறைசார்ந்தோர், நிர்வாகிகள், மற்றும் ஏயோர் அடங்கிய பல்கலைக்கழக சமூகத்துடன் பல்கலைக்கழக கல்விமுறைமைகளை நெறிப்படுத்தவும், நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கண்காணிக்கவும் வருடத்தின் போது பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன;

நடைபெற்ற கூட்டங்கள்;

1. மூலோபாய திட்டமிடலையும் நடைமுறைப்படுத்தலையும் முன்னேற்ற மீள்பார்வை செய்வதற்கு, உகஅமைச்சின் வரம்பிற்குள் தொடர்பான அதிகாரிகளுடன் மூலோபாய திட்டமிடல் மீள்பார்வை செயலமர்வு 18.01.2013லும், 19.01.2013லும் ஹொட்டல் ஜானகியில் நடைபெற்றது.

2. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துடனும் (கொத்மலை சமூக வானொலி) களனி பல்கலைக்கழகத்தின் உரிய அதிகாரிகளின் பங்குபற்றலுடன் தொலைத்தொடர்பு

வேலைத்திட்டத்தைப் பற்றி 30.01.2013ல் உயர் கல்வி அமைச்சில் ஆராய்வதற்கு நடாத்தப்பட்டது.

3. உயர் கல்வி அமைச்சின் 2012ன் முன்னேற்றத்தையும் மற்றும் 2013ன் செயற்பாட்டுத் திட்டத்தைப் பற்றியும் ஆராய்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பங்குபற்றலுடன், பத்திரிகை, ஊடகங்களுடன் 31.01.2013 ல் கிருலப்பனை கிரீன் கார்டன் ஹொட்டலில் நடைபெற்றது.

4. பமாஆணைக்குழுவின் மூலோபாயத் திட்டத் தயாரிப்பை உகஅமைச்சின் மூலோபாயத் திட்டத்துடன் சீரமைப்பதுபற்றி ப.மா ஆணைக்குழு, உ.க. அமைச்சு ஆகியவற்றின் உரிய அதிகாரிகளுடன் ஆராய்வதற்காக 02.04.2013ல் நடாத்தப்பட்டது.

5. க.பொ.த உயர்தர மட்டத்தில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட தொழில் நுட்ப பாட ஒழுங்கிலிருந்து பல்கலைக்கழக மாணவர்களை சேர்ப்பது தொடர்பான விநியோக வேறு மற்றும் பிரச்சினைகளை ஆராய கௌரவ கல்வி அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக முறைமையின் உரிய அதிகாரிகளுடனும், இரண்டு அமைச்சுக்களுடனும் 18.05.2013ல் அஹுங்கல ஹெரிற்ரன்ஸ் ஹொட்டலில் இடம் பெற்றது.

6. மூலோபாய திட்டமும் அதனை நடைமுறைப்படுத்தலையும் பற்றிய முன்னேற்ற மீளாய்வு செய்வதற்காக உகஅ அதிகார வரம்பெல்லைக்குட்பட்ட உரிய அதிகாரிகளுடன் மூலோபாய திட்டமிடல் மீளாய்வு செயலமர்வு 18.05.2013,19.05.2013ல் அஹுங்கல ஹெரிறரன்ஸ் ஹொட்டலில் நடைபெற்றது.

7. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் அண்மையிலுள்ள பாடசாலையொன்றின் அபிவிருத்தியின் முன்னேற்றம் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் 11.06.2013ல் அதிமேதகு ஜனாதிபதியுடன் இடம் பெற்றது.

8. மருத்துவ தொழில்நடத்துவதற்கு பதிவுசெய்வதற்கான பரீட்சையை (ERPM) ஆராய்வதற்காக இலங்கை மருத்துவ சபை, கொழும்பு பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம், மருத்துவ பட்டபின்படிப்பு நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் உரிய அதிகாரிகளுடன் உயர் கல்வி அமைச்சில் 11.06.2013, 02.07.2013ல் நடைபெற்றது.

9. தர உறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகரித்தலைப் பற்றி ஆராய்வதற்கு தர உறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகரித்தல் சபையின் உரிய அங்கத்தவர்களுடன் கூட்டம் 03.07.2013ல் நடைபெற்றது.

10. நாட்டிலுள்ள முகாமைத்துவ கல்வியை மேம்படுத்தலை ஆராய 25.07.2013ல் கொழும்பு சினமன் கிராண்ட ஹொட்டலில் தேசிய ஆலோசனை சபையின் உரிய அதிகாரிகளுடன் கூட்டம் நடாத்தப்பட்டது.

11. 2014 வருடாந்த வரவு செலவுத் திட்ட அறிக்கை தயாரிப்பதை கௌரவ உயர் கல்வி அமைச்சர், திறைசேரி செயலாளர், உயர் கல்வி அமைச்சின் செயலாளர், ப.மா.ஆ. குழுவின் தலைவி, உப வேந்தர்கள் மற்றும் வேறு உரிய அதிகாரிகளுடன் ப.மா. ஆணைக்குழுவின் கூட்ட அறையில் 03.09.2013ல் நடைபெற்றது.

12. "தலைமைத்துவ பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டம் - கல்வியாண்டு 2012/2013" பற்றி ஆராய உரிய அதிகாரிகளுடன் 14.10.2013ல் உயர்கல்வி அமைச்சில் நடைபெற்றது.

13. மாணவர் மையப்படுத்தப்பட்ட கற்றல் கற்பித்தல், கற்பித்தல் செயல்முறை செயல்முறை பற்றி வெளிநாட்டு ஆலோசகர்களுடனும், பமாஆணைக்குழு அதிகாரிகளுடனும் 25.10.2013ல் ஹொட்டல் ரேணுகாவில் நடாத்தப்பட்டது.

14. 2014 வரவு செலவுத் திட்ட அறிக்கையின் படி மதிப்பிடப்பட்டுள்ள மானியங்களை ஒதுக்குவது பற்றி ஆராய பமாஆணைக்குழுவின் உரிய அதிகாரிகளுடன் 04.11.2013ல் உயர்கல்வி அமைச்சில் நடைபெற்றது.

15. செயல் திறன் சார்ந்த வரவு செலவுத் திட்டத்திற்கான நடுத்தர கால வரவு செலவுத் திட்ட கட்டமைப்பும், வரவு செலவுத் திட்ட ஆதரவும் மற்றும் வரிசை அமைச்சுக்களின் திட்ட முகாமையை வலுப்படுத்துவதற்கான செயல்படுத்தலும் சீர்திருத்தமும் பற்றி ஆராய தலவத்துகொடை கிரான்ட மொனார்ச் ஹொட்டலில் 05.11.2013ல் நடைபெற்றது.

16. களனி பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு நிறுவகங்களைப் பற்றி ஆராய 06.11.2013ல் உயர்கல்வி அமைச்சில் நடைபெற்றது.

## 16. தேசிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள்

- 2005/06 உள்வாங்கல் (மீள் நடத்தப்பட்ட) MBBS இறுதி பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட ரஜரட்ட பல்கலைக்கழகம் தவிர்ந்த ஒரு தற்காலிக MBBS திறமை வரிசை பட்டியல் தொகுக்கப்படடு சுகாதார அமைச்சுக்கு உள்ளக பயிற்சிக்கு மார்ச்சில் இடமளிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

- உள்ளக பயிற்சி நியமனத்திற்கான 2005/06 உள்வாங்கலுக்கான MBBS (மீள்பரீட்சை) MBBS இறுதி சிறப்பு ஒழுங்கு பட்டியல் ரஜரட்ட பல்கலைக்கழகத்தையும் இணைத்து தொகுக்கப்பட்டு யூனில் உள்ளகப் பயிற்சி இடம் பெற சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- உள்ளக பயிற்சி நியமனத்திற்கான 2006/07 MBBS (பிரதான) உள்வாங்கலுக்கான MBBS இறுதி சிறப்பு ஒழுங்கு பட்டியல் ரஜரட்ட பல்கலைக்கழகத்தையும் இணைத்து தொகுக்கப்பட்டு ஒக்டோபரில் உள்ளகப் பயிற்சி இடம் பெற சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- 20022003 பிரதான மற்றும் மீள்பரீட்சை ஆயுர்வேத சிறப்பு ஒழுங்கு பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு ஆயுர்வேத திணைக்களத்திற்கு ஒக்டோபரில் நியமனங்களுக்கான நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

  உயர்கல்வி அமைச்சு, மத்திய வங்கி, குடிசன தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம், தொழில் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரசுங்களில் உயர் கல்வி பிரிவுகளின் தரவுகளைத் தொகுப்பதற்காக MIS பிரிவு உதவியது.

- யுனஸ்கோவின் புள்ளிவிபர நிறுவனத்திற்குத் தேவையான பல்கலைக்கழக கல்விக்குரிய தகவல்களையும் MIS பிரிவு சமர்ப்பித்தது.

# 17. சட்ட விவகாரங்கள்

## 17.1 புதிய சட்டம்

ஆய்விலுள்ள வருடத்தில், ஆணைக்குழுவின் சட்டப் பிரிவினால் 02 கட்டளைகளையும் 01 கட்டளைச் சட்டத்தையும் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(1) **வருடத்தின் போது விடுக்கப்பட்ட கட்டளைகள்:**

- 1978ம் பல்கலைக்கழகச் சட்ட இல. 16ன் 20(4) பிரிவின் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தன் முகாமைத்துவக் கற்கைகள் வணிகம் பீடத்தின் வணிகத் துறையை நிறுவ கட்டளை தயாரிக்கப்பட்டு, 2013 யூலை 18ம் திகதியுடைய 1819/27ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் பல்கலைக்கழகச் சட்ட இல. 16ன் 20(4) பிரிவின் கீழ் மொறட்டுவை பல்கலைக்கழகத்தன் கட்டடக்கலை பீடத்தின் ஒருங்கமைப்பு வடிவமைப்புத் துறையை நிறுவ கட்டளை தயாரிக்கப்பட்டு, 2013 யூலை 19ம் திகதியுடைய 1819/46ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

  உயர்கல்வி அமைச்சின் செயலாளர் அரசாங்க விசேட வர்த்தமானி இல: 1746/11னால் 2012 பெப்ரவரி 22ல் குறிப்பிட்ட ஆணை அதிகாரியாக நியமிக்கப்பட்டதால், பட்டமாணிகளை வழங்கும் நிலையை வழங்க வேறு 04 கட்டளைகளும் உயர்கல்வி அமைச்சினால் 1978ம் வருட 16ம் இல. பல்கலைக்கழக சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்டன.

- 1978ம் வருட 16ம் இல. பல்கலைக்கழக சட்டத்தின் 25 A பிரிவின் கீழ் இலங்கை சர்வதேச பௌத்த கல்லூரிக்கு அந் நிறுவனத்தின் பௌத்த தலைமைத்துவ பட்டமாணி என்னும் இளமாணி விசேட பட்டமாணியை மதிப்பிட்டு பட்டமாணி வழங்கும் தகுதியை வழங்க அரசாங்க விசேட வர்த்தமானி இல: 17986/62ல் 2013 பெப்ரவரி 22ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் வருட 16ம் இல. பல்கலைக்கழக சட்டத்தின் 25 A பிரிவின் கீழ்தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவகத்தின் தேசிய வியாபார முகாமைத்துவ பாடசாலையினால் வழங்கப்படும் ஐந்து பட்டமாணி பட்டமாணிகளையும், ஆறு பட்டப்பின்படிப்பு டிப்ளோமாக்களையும் மதிப்பிட்டு பட்டமாணி வழங்கும் தகுதியை வழங்க அரசாங்க விசேட வர்த்தமானி இல: 1800/6ல் 2013 மார்ச் 05ல் பிரசுரிக்கப்பட்டது. 2009 மார்ச் 20ல் பிரசுரிக்கப்பட்ட இல: 1624/11 அரசாங்க விசேட வர்த்தமானி இக் கட்டளையால் அழிக்கப்படுகின்றது.

- 1978ம் வருட 16ம் இல. பல்கலைக்கழக சட்டத்தின் 25 A பிரிவின் கீழ், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்திற்கு பட்டமாணி வழங்கும் தகுதியை அந் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இரண்டு பட்டமாணிகளை மதிப்பிட்டு பட்டமாணி வழங்கும் தகுதியை வழங்க அரசாங்க விசேட வர்த்தமானி இல: 1801/5ல் 2013 மார்ச் 12ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் வருட 16ம் இல. பல்கலைக்கழக சட்டத்தின் 25 A பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட கொழும்பு சர்வதேச கடல்சார் பொறியியல்

(தனியார்) கல்லூரிற்கு பட்டமாணி வழங்கும் தகுதியை அந் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட 3 பட்டமாணிகளை மதிப்பிட்டு பட்டமாணி வழங்கும் தகுதியை வழங்க அரசாங்க விசேட வர்த்தமானி இல: 1818/7ல் 2013 யூலை 09ல் பிரசுரிக்கப்பட்டது.

(2) **இவ் வருடத்தின் போது பின்வரும் கட்டளைச் சட்டம் செய்யப்பட்டது.**

2013 டிசம்பர் 05ம் திகதி விசேட அரசாங்க வர்த்தமானி இல. 1839/41 ல் பிரசுரிக்கப்பட்ட, 1978ன் பல்கலைக்கழகங்கள் சட்டம் இல. 16 ன் பிரிவு 18 உடன் வாசிக்கப்படும் 2013ல் செய்யப்பட்ட உப பிரிவு (2)ன் 23ம் பிரிவின் 01ம் இலக்க இலங்கை திறந்த பல்கலைக்கழக (திருத்தம்) கட்டளைச் சட்டத்திற்கு திருத்தம் செய்யப்பட்டது.

### 17.2 நீதிமன்ற வழக்குகள்

இவ் வருடத்தின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிராக சட்ட நீதிமன்றங்களிலும், தீர்ப்புச் சபைகளிலும் பதிவு செய்யப்பட்ட முழு எண்ணிக்கையான 20 வழக்குகளை ஆணைப்பிரிவின் சட்டப் பிரிவு கையாண்டது. அவைகள் பின்வருமாறு;

உயர் நீதிமன்றம் – 08 வழக்குகள
மேன் முறையீட்ட நீதிமன்றம் – 04 வழக்குகள
தொழில் தீர்ப்புச்சபை – 01 வழக்கு
பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை – 07 வழக்குகள

## 18. பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை (USAB)

USAB மீள்பார்வை வருடத்தின் போது 48 அமர்வுகளைக் கொண்டிருந்தது. 2013ல் பண்ணிரண்டு (12) மேன்முறையீடுகள் USAB வுடன் பதிவு செய்யபட்டன. பதினாங்கு (14) கட்டளைகள் வழங்கப்பட்டன. அவைகளில் ஏழு (07) வேலை நீக்கம் செய்யப்பட்டதுடன், ஏழு (07) அனுமதிக்கப்பட்டன. ஒரு (01) மேம்முறையீடு மட்டும் முடிவெடுக்கப்பட்டது. ஆரம்ப கட்டளைகள் வழங்கப்படவில்லை. ஒரு வழக்கு மட்டும் ஒதுக்கி வைக்கப்பட்டது. அதன்படி 2013ம் வருட இறுதியில் இருபத்தியேழு (27) மேம்முறையீடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மூன்று வழக்குகள் மேம்முறையீட்டு நீதிமன்றத்திலும், ஒரு வழக்கு உயர் நீதிமன்றத்திலும் USAB க்கு எதிராக தொடரப்பட்டுள்ளன.

## 19. நிதி முகாமைத்துவத்தையும், மத்திய உள்ளக கணக்காய்வையும் மேம்படுத்தல்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினதும், உயர் கல்வி நிறுவனங்களினதும் கணக்காய்வு ஒப்படைகள், விசாரணைகள் ஆகியன மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதுடன், அது சென்ற வருடங்களைப் போன்று தனது நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்கின்றது. இது உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் செய்முறைகளின் ஆற்றலளவினையும், சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள், பல்கலைக்கழக சட்டம் மற்றும் ஏனைய தொடர்பான விதி, ஒழுங்குவிதிகளைப் பின்பற்றலை நிச்சயப்படுத்தலையும் மீள்பார்வை செய்கின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவு, பல்கலைக்கழகங்களின் உள்ளக கணக்காய்வு பிரவுகளுடன் முறைமைகளிடையே

சிறந்த ஆட்சியைப் பேண இணைப்பாக்கலைக் செய்கின்றது. கண்காணிப்பு செயல்முறை, எவையேனும் புதிய அல்லது மாற்றுக் கொள்கைகளை பிரேரித்தல் ஆகியன பல்கலைக்கழக ஆணைக்குழுவின் கணக்காய்வுக் குழுக்கூடாக செய்யப்படுகின்றது. சகல தவறுகள், பலவீனங்கள், குறைபாடுகள் போன்றன உரிய அதிகாரிகங்களுக்கு, மேம்பாடுகளுக்கான ஆலோசனைகளுடன் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன

(1) கணக்காய்வாளர் நாயகத்தினதும் மற்றும் பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் குழுவினதும் [COPE] அவதானங்களையிட்டு, பமாஆணைக்குழுவினால் உகநகளின் நிதி முகாமைத்துவத்தை கிரமமாக மீள்பார்வை செய்வதற்காக கணக்காய்வு செயற்பாடு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக் குழு வரிசை அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் கிரமமாக கூடி, பல்கலைக்கழகங்களுக்கும், உகநி களுக்கும் உள்ளக முறைமைகளிலும், செயற்பாடுகளிலும் உள்ள பிழைகள், பலவீனங்கள், குறைபாடுகள் ஆகியவற்றை இனம் காண்பதற்கும், திறைச்சேரியின் நிதிப் பிரமாணங்களினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள சிறந்த ஆட்சியையும், முகாமைத்துவ செயற்பாடுகளையும் அடைவதை உறுதிப்படுத்தவும் உதவுகின்றது.

இவ் வருடத்தின் போது, 15 பல்கலைக்கழகள், 18 உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன;

(2) ஆய்விலுள்ள வருடத்தில், கணக்காய்வுக் குழு 20.03.2013, 28.06.2013, 27.09.2013, 10.12.2013 ஆகிய நான்கு தினங்களில் கூடியது.

(3) அத்துடன், பொது திறைச்சேரி, கணக்காய்வு நாயகத்தின் திணைக்களம், உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் உயர் மட்ட அதிகாரிகள், உயர் கல்வி நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோருடன் முறைமையானதும், தர்க்கரீதியான அணுகுமறை இல்லாததனால் ஏற்படும் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண நான்கு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 20. ஆய்வுகள், பிரசுரங்களும், ஆராய்ச்சி கற்கைகளும்

1. 2012 ஆகஸ்டில் “இலங்கை பல்கலைக்கழக புள்ளிவிபரங்கள் 2012” - இத் தொடரின் பதினோராவது தொகுதி 2013 யூலையில் பிரசுரிக்கப்பட்டது.

2. ‘‘இலங்கையின் முன்னேற்றமடையும் எரிபொருள் மற்றும் வாயு கைத்தொழிலின் வினையாற்றலைக் கட்டியமைத்தலும், கொள்ளலவினை மேம்படுத்தலும்’’ எனும் செயலமர்வின் கூட்டறிக்கையின் பிரசுரம் 2013 டிசம்பரில் பிரசுரிக்கப்பட்டது.

3. 2012ம் வருடத்திற்கான உயர் கல்வியின் முக்கிய குறிகாட்டிகளை உள்ளடக்கிய குறிகாட்டி பத்திரத்தை பமாஆணைக்குழுவின் உள்ளக பாவனைக்காக விருத்தி செய்து பிரசுரிக்கப்பட்டது.

4. பல்கலைக்கழக முறைமையினுள்ள உடன்படிக்கைகளை மீறியது தொடர்பாக வரவேண்டிய தொகைகளை மீளப்பெறுவதற்கான (2012 டிசம்பர் 31ல் உள்ளபடி) நடவடிக்கையின் முன்னேற்ற ஆய்வு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5. 2012ல் உயர் கல்வி நிறுவனங்களில் பட்டமாணி மாணவர்களுள்ள இருப்பிட வசதிகள் மீதான ஆய்வு ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 21. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டம் 1999 செத்தம்பர் 10ம் திகதியிலிருந்து அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டு, பமாஆ குழுவினால் வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் 1999 யூன் 10ம் திகதியுடைய சுற்றறிக்கை இல: 747ன் பிரகாரம் நிறுவப்பட்டது.

**ஆளுகையும், முகாமைத்துவமும்**


பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் ஆழுகையையும், முகாமைத்தவம் செய்தலையும் விரிவாக்கவும், வலுப்படுத்தவும் 2013ல் பிரேரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் ஒழுங்குபடுத்தல், நிருவாகம், முகாமைத்துவம் ஆகியவற்றிக்கான கட்டளைச் சட்டத்தை வரைவதற்காக குழுவொன்றினை நியமிப்பதற்கும், பல்கலைக்கழக ஓய்வூதியத்தின் நடவடிக்கைகளைக் காலத்திற்குக் காலம் மீள்பார்வை செய்வதற்கும் ஆலோசனை/கண்காணிப்பு சபையொன்றினை நியமிப்பதற்கும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. நிதியத்தின் வருடாந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வு செய்வதற்காக கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முதலீடுகளும் அரசாங்கத்தின் விதிகள், ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப இடப்பட்டுள்ளன.


**நிதி கூற்றுக்கள்**


**ஓய்வு நிதியத்தின் நிதிக் கூற்று பின்வருமாறு;**

| | | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| 1 | உறுப்புரிமை | | | | | |
| | செயற்படு உறுப்பினர்கள் | 6,883 | 7,282 | 7,588 | 8,167 | 9,124 |
| | ஏனைய செயற்படா உறுப்பினர்கள் | 1,080 | 1,363 | 1,503 | 1,778 | 2,003 |
| | உறுப்பினர்கள் எண்ணிக்கை | 7,963 | 8,645 | 9,091 | 9,945 | 11,127 |
| 2 | ஓய்வூதியம் பெறும் உறுப்பனர்களின் எண்ணிக்கை | 82 | 89 | 113 | 121 | 149 |
| 3 | நிதியத்தின் மீதி (ரூபா. மி.) | | | | | |
| | பங்களிப்போரின் நிதி | 1330 | 1633 | 1958 | 2,432 | 3,079 |
| | ஓய்வு பெறுவோரின் நிதியும், ஒதுக்கமும் | 164 | 201 | 278 | 299 | 403 |
| | Growth of the Fund | 1,494 | 1,833 | 2,236 | 2,731 | 3,482 |
| 4 | மொத்த முதலீடுகள் (ரூபா. மி.) | 1,392 | 1,679 | 2,000 | 2,454 | 2,937 |
| 5 | மொத்த முதலீட்டு வருமானம் (ரூபா. மி.) | 208 | 213 | 224 | 236 | 491 |
| 6 | வருமான வரி (ரூபா. மி.) | 21 | 21 | 22 | 20 | 41 |
| 7 | முதலீட்டின் மீள்திருப்பம் (%) | 15% | 13% | 11% | 10% | 17% |
| 8 | உறுப்பினர்களுக்கு வெளிப்படுத்திய வட்டி | 13% | 11.5% | 8% | 9% | 13.50% |
| 9 | ஓய்வூதியக் கொடுப்பனவுகள் (ரூபா. மி.) | 12 | 12 | 17 | 17 | 27 |





## 22. பல்கலைக்கழக சேமலாப நிதியம்


1978 ஆண்டின் பல்கலைக்கழக சட்ட இல. 16 ன் 89 – 96ம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பல்கலைக்கழக செமலாப நிதியம், பல்கலைக்கழக முறைமையின் கீழுள்ள பணியாளர்கள் ஓய்வு பெறும் காலத்தில், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் திட்டமாக நிறுவப்பட்டது. ஓய்வு பெறும் போது அல்லது சேவையிலிருந்து நீங்கும் போது சிறந்த வருமானத்தைப் பெறுவதற்காக இந் நிதியத்தை விவேகமாக முகாமை செய்வதே பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் நோக்காகும்.


சேமலாப நிதியத்தின் நிதிக் கூற்று பின்வருமாறு;


| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|
| 1. உறுப்புரிமை | | | | | | |
| செயற்படு உறுப்பினர்கள் | 26,143 | 27,450 | 27,368 | 27,892 | 28,291 | 30,103 |
| ஏனைய செயற்படா உறுப்பினர்கள் | 5,385 | 5,348 | 5,321 | 5,288 | 5,272 | 5,251 |
| 2. மீளளிப்புக்கள் | | | | | | |
| மீளளிப்புக்கள் எண்ணிக்கை | 2,544 | 2,302 | 2,847 | 2,663 | 2,349 | 2,722 |
| மீளளிப்புக்கள் பெறுமதி (ரூபா. மி) | 866.9 | 961.3 | 1,002.0 | 997.3 | 1,031.0 | 1,543.0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3. | நிதியத்தின் மீதி(ரூபா. மி.) | 13,761.3 | 15,515.1 | 16,906.6 | 18,502.0 | 20,832.0 | 23,397.0 |
| 4. | பொது ஒதுக்கம் (ரூபா. மி) | 162.5 | 49.4 | 74.8 | 123.7 | 391.0 | 469.0 |
| 5. | வட்டி வீத சமன்படல் ஒதுக்கம் (IRER) (ரூபா. மி) | - | - | 136.9 | 281.6 | - | - |
| 6. | வழங்கிய கடன் (ரூபா. மி) | 695.1 | 640.1 | 708.8 | 858.8 | 784.0 | 1,243.0 |
| 7. | மொத்த முதலீடுகள் (ரூபா. மி) | 9,955.6 | 11,350.5 | 12,547.0 | 13,582.0 | 15,682.0 | 16,607.0 |
| 8. | முதலீடுகள் வருமானம் (ரூபா. மி) | 1,189.0 | 1,627.4 | 1,553.8 | 1,560.6 | 1,762.0 | 2,455.0 |
| 9. | செலுத்திய வரி (ரூபா. மி) | 120.7 | 162.7 | 155.3 | 124.8 | 141.0 | 193.0 |
| 10. | முதலீடுகளின் வருமானம் | 12.12% | 14.34% | 12.38% | 11.50% | 11.3% | 14.78% |
| 11. | ஆரம்ப மீதியின் மீது வெளிப்படுத்தப்பட்ட வட்டி | 12% | 15.5% | 10.5% | 9.5% | 11.0% | 13.50% |



## 23. 2013ல் வெளியிடப்பட்ட ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களும், தாபன சுற்றுநிருபக் கடிதங்களும்

ப.ஆ.குழு, உயர் கல்வி நிறுவனங்களின் சுமூகமான செயற்பாட்டின் பொருட்டு ஆய்விலுள்ள வருடத்தில் 1978ன் பல்கலைக்கழகச் சட்ட இல. 16 னால் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள், செயற்பாடுகளுக்கு அமையவாகவும், சம்பளங்கள், ஆட்சேர்ப்பு, ஊழியக் கோட்புத் திட்டங்கள் போன்ற விடயங்கள் சார்பாகவும், உரிய அரசாங்க அமைப்புக்களால் செய்யப்பட்ட வழிகாட்டிகளைக் கொண்டு பின்வரும் ஆணைக்குழு சுற்று நிருபங்களையும், தாபன சுற்றறிக்கை கடிதங்களையும் வெளியிட்டது.

ஆய்விலுள்ள வருடத்தின் போது, பமாஆ குழு, பமாஆணைக்கழு மற்றும் பல்கலைக்கழகங்களின் 1984ல் பிரசுரிக்கப்பட்ட தாபன கோவையை மீள்பார்வை செய்வதை ஆரம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது தற்பொழுது முடியும் நிலையிலுள்ளது. இப்பணியின் முக்கியத்துவத்தையும், கடினமான தன்மையும் கருதி, பல்கலைக்கழக முறைமையிலிருந்து இளைப்பாறிய சிறந்த நபர்கள் மற்றும் தற்போது பமாஆணைக்குழுவில் சேவையாற்றும் சில சிரேஷ்ட நிர்வாகிகளிடமிருந்தும் வழிகாட்டலும், உதவிகளும் பெறப்பட்டன.

### (a) ஆணைக்குழு சுற்று நிருபங்கள்

| சுற்றறிக்கை இல. | விடயம் | திகதி |
|---|---|---|
| 998 | பல்கலைக்கழக பணியாளர்களுக்கு விசேட படி கொடுப்பனவு -2013 | 03.01.2013 |
| 999 | வரவு செலவுத் திட்ட பிரேரனைகள்களின் படி அரசாங்க, கூட்டுத்தாபன, சட்ட அமைப்புக்கள், கருத்திட்ட பணியாளர்களின் படி கொடுப்பனவுகளின் திருத்தம் -2013 | 04.01.2013 |
| 1000 | 2012 வரவு செலவுத் திட்ட பிரேரணைகளின் படி கல்விதுறைசார், ஆய்வு படிகள் கொடுப்பனவு - 2013 | 08.01.2013 |
| 01/2013 | 3விரிவுரையாளர் பதவிகள் (தகுதிகான்), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II, I ம் (மருத்துவம் /பற்சிகிச்சை) மற்றும் மருத்துவம் பற்சிகிச்சை அல்லாதவர்களை பதவிற்கு சேர்க்கும் திட்டத்திற்கு திருத்தங்கள் | 28.01.2013 |
| 02/2013 | தோத ஆட்சியும், முகாமைத்துவமும் (ததொ கொள்கை) | 29.01.2013 |
| 03/2013 | 2012 வரவு செலவு திட்டம் பிரேரணைகள் மீதான முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் இல. 30(1) ஐ அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக ஆளணியினரின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்தல்– 2012 | 07.03.2013 |
| 04/2013 | பல்கலைக்கழக முறைமையின் உப-விடுதி பொறுப்பாளர்களின் வடுமுறை | 19.03.2013 |
| 05/2013 | இலங்கை நியமங்கள் சட் (SLQF) | 22.04.2013 |
| 06/2013 | 1942ம் வருட தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம் இல. 45ன் பிரகாரம் பதிவுசெய்தல் | 22.04.2013 |
| 07/2013 | பவருகை தரும் விரிவுரையாளர்களின் கட்டணமும், போக்குவரத்துச் செலவும். | 24.04.2013 |
| 08/2013 | ஆசிரியர்களுக்கும், அதிகாரிகளுக்குமான விடுகை விடுமுறை | 14.05.2013 |

| | | |
|---|---|---|
| 09/2013 | பாதுகாவலர் (கீழ் தரம்) பதவியிலுள்ளோருக்கு பாதுகாவலர் (உயர் தரம்) பதவிற்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்கல் | 31.05.2013 |
| 03/2013(i) | வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் - 2012 மீதான முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 30(1) அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக பணியாளர்களின் சம்பள முரண்பாடுகளை நிவிர்த்தி செய்தல் | 12.06.2013 |
| 03/2013(ii) | வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் - 2012 மீதான முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 30(1) அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக பணியாளர்களின் சம்பள முரண்பாடுகளை நிவிர்த்தி செய்தல் | 27.06.2013 |
| 10/2013 | பல்கலைக்கழக முறைமையினுள்ள பெண் பணியாளர்களுக்கு பிரசவ விடுமுறை மற்றும் பாலூட்டும் இடைவேளைகள் | 02.09.2013 |
| 11/2013 | நிறைவேற்று ஆளணியினர்/கல்வித்துறை ஆதரவு பணியாளர்/ மருத்துவ அதிகாரிகள்/பல்வைத்தியர்கள் போன்றோருக்கு பட்டப்பின்படிப்பு பட்டமாணி துறைசார்ந்த தராதரங்களைப் பெறுவதற்கான விடுமுறை | 10.10.2013 |

## (b) தாபன சுற்றறிக்கை கடிதங்கள்

| சுற்றறிக்கை இல. | விடயம் | திகதி |
|---|---|---|
| 01/2013 | பல்கலைக்கழங்களின் பதிவாளர் பதவிற்காக வாகனங்களை அளித்தல் | 11.01.2013 |
| 02/2013 | ஆணைக்குழு சுற்றறிக்கைகளின் இலக்க குறியீடுகள் | 24.01.2013 |
| 03/2013 | பல்கலைக்கழக முறைமையில் கல்வித்துறைசாராத, நிர்வாகமுறை சாராத பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் - உள்ளக வகைகளின் கீழ் | 15.03.2013 |
| 04/2013 | பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவகங்கள் ஆகியவற்றின் சொத்துக்களின் வருடாந்த தொகை சரிபார்த்தலில் பின்பற்றவேண்டிய பொதுவான வழிகாட்டிகள் | 10.04.2013 |
| 05/2013 | பொது நிர்வாக சுற்றறிக்கைகளை பின்பற்றல் | 15.05.2013 |
| 06/2013 | கல்வித்துறைசாராத, நிர்வாகத்துறை சாராத தரங்களிலுள்ள பணியாளர்களுக்கு பாதுகாப்பு காலணிகளை வழங்கல் | 16.05.2013 |
| 07/2013 | வருகை தரும் விரிவுரையாளர்களின் கட்டணமும், போக்குவரத்துச் செலவும். | 17.05.2013 |
| 08/2013 | மொழித் தேர்ச்சிக்கான படி கொடுப்பனவு | 23.05.2013 |
| 09/2013 | பல்கலைக்கழகங்களுடன் கற்கை விடுமுறையில் சென்ற ஆசிரியர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறியதற்காக பெறப்படும் வருமானத்தைப் பயன்படுத்தல் | 05.06.2013 |
| 10/2013 | பயிற்சியாளர்களின் நியமனத்திற்கான அங்கீகாரத்தைப் பெறல் | 17.06.2013 |

| | | |
|---|---|---|
| 11/2013 | நமலான் (நம்சான்) பருவம் - 2013 போது விசேட விடுமுறை வழங்கல் | 08.07.2013 |
| 12/2013 | அதிகாரிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்கல் | 29.08.2013 |
| 13/2013 | கடமையிலிருக்கும் வேளையில் காயாமடையும் பல்கலைக்கழக பணியாளருக்கு நட்டஈடு | 13.09.2013 |
| 14/2013 | அலுவலக சீருடை தைப்பதற்கான கட்டணங்கள் | 01.10.2013 |
| 15/2013 | நூலக உதவியாளர் தரம் III, II, I பணியணி உதவியாளர்/ பல்கலைக்கழக சேவைகள் மற்றும் சிரேஷ்ட பணியணி உதவியாளர்/நூலக சேவைகள் | 05.12.2013 |
| 16/2013 | தென் ஆபிரக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மன்டலாவின் மறைவிற்கு அரைக்கம்பத்தில் தேசிய கொடியை பறக்கவிடல் | 09.12.2013 |
| 17/2013 | கணனி பிரயோக உதவியாளர் தரம் II பதவிற்கு ஆட்சேர்ப்பு திட்டம் | 20.12.2013 |
| 18/2013 | பல்கலைக்கழக பணியாளர்களுக்கு விசேட முற்பணக் கொடுப்பனவு - 2014 | 30.12.2013 |
| 19/2013 | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 35/2013 பின்பற்றல் | 31.12.2013 |
| 20/2013 | சம்பள அளவின் உட்ச படியில் தேக்கத்தின் மீது சம்பள உயர்வுகளை வழங்கல் | 31.12.2013 |

பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு

31 திசெம்பர் 2013ல் உள்ளவாறான ஐந்தொகை

| | குறிப்பு | பக்கம் | 2013 ரூபாய் | 2012 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையில்லாத சொத்துக்கள்** | | | | |
| சொத்து, பொறி, உபகரணங்கள் | 1 | 9 | 529,142,307 | 545,594,270 |
| முதலீடுகள் | 2 | 10 | 30,489,962 | 34,876,395 |
| | | | 559,632,259 | 580,470,665 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பொருளிருப்புக்கள் | 3 | 10 | 2,079,049 | 3,668,369 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 4 | 10 | 115,583,692 | 63,796,997 |
| முற்கொடுப்பனவுகளும், வைப்புக்களும் | 5 | 11 | 5,683,657 | 3,383,369 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் | 6 | 11 | 63,462,411 | 6,104,707 |
| | | | 186,808,809 | 76,953,441 |
| **மொத்தச் செலவுகள்** | | | | |
| | | | 746,441,068 | 657,424,106 |
| **பொறுப்புக்கள்** | | | | |
| **திரட்டு நிதியம்** | | | | |
| பிற்போட்ட மூலதன மானியம் | 7 | 12 | 41, 006,818 | 26,771,465 |
| மூலதன மானியங்கள் செலவழிக்காதவை | 8 | 12 | 2,091,164 | 4,066,949 |
| நிலையான சொத்துக்களின் பிற்போட்ட புனரைப்பு மற்றும் முன்னேற்றம் | 9 | 12 | 2,097,125 | 1,126,076 |
| மீள்மதிப்பு மிகை | | | 509,313,767 | 509,313,767 |
| இருந்த மிகைகள் (பற்றாக்குறை) | | | (19,764,544) | (22,137,450) |
| ஏனை பணியணியர் அபிவிருத்தி ஓதுக்கம் | | | 17,000,000 | |
| | | | 524,836,416 | 519,811,100 |
| **நடைமுறையில்லாப் பொறுப்புக்கள்** | | | | |
| ஆராய்ச்சி நிதியம் | 10 | 12 | 12,150,870 | 18,987,239 |
| குறிப்பிட்ட நிதியம் | 11 | 12 | 10,278,787 | 9,881,435 |
| பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம் | 12 | 13 | 19,230,185 | 18,258,844 |
| ஓய்வூதிய நன்மைகள் கடற்பாடு | 13 | 18 | 36,798,930 | 35,696,924 |
| | | | 78,458,772 | 82,824,442 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டியவைகள் | 14 | 18 | 125,046,784 | 42.136,386 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 15 | 18 | 17,776,713 | 7,892,499 |
| குத்தகை கடன் கொடுத்தோர்- இலங்கை வரையறுக்கப் பட்ட வர்த்தக வங்கி லிமிடட் | 16 | | --- | 4,386,659 |
| வைப்புக்கள | 17 | 18 | 322,383 | 373,018 |
| | | | 143,145,880 | 54,788,563 |
| மொத்த உரிமையான்மையும், பொறுப்புக்களும் | | | 746,441,068 | 657,424,106 |

(பேராசிரியர் (திருமதி) எஸ்.எஸ்.எம்.கே. கே. ஹிரிம்புருகம
தலைவர்

(ஆர்.ஏ.யு. ரணவீர)
கணக்காளர்

பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு
2013 டிசம்பர் 31ல் முடிவடையும் வருடத்திற்கான
வருமாம், செலவு கூற்று

| | குறிப்பு | பக்கம் | 2013<br>ரூபாய் | 2012<br>ரூபாய் |
|---|---|---|---|---|
| வருமானம் | | | | |
| அரசாங்க மானியங்கள் | | | | |
| மீண்டெழும் மானியங்கள் | 18 | 19 | 807,826,734 | 1,085,874,583 |
| நிலையான சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம் | 19 | 19 | 19,528,951 | 9.490,059 |
| திரட்டிய மூலதன மானியங்கள் | 20 | 19 | 17,418,640 | 22,991,495 |
| தெற்காசிய பல்கலைக்கழகத்திற்கா பங்களிப்பு | | | 111,221,124 | 70,359,281 |
| KED மீதான மூலதன மானியங்கள் | | | 173,653,707 | 398,514,723 |
| சொத்துக் கடன்கள் | | | 17,105,414 | |
| மொத்த அரசாங்க மானியங்கள் | | | 1,146,754,571 | 1,587,230,141 |
| ஏனைய வருமானங்கள் | 21 | 19 | 41,572,325 | 19,739,390 |
| | | | 1,188,326,896 | 1,606,969,531 |
| <u>கழி: செலவீனம்</u> | | | | |
| ஆளணி வேதனங்கள் | 22 | 20 | 115,982,137 | 112,104,960 |
| பிரயாணச் செலவுகள் | 23 | 20 | 3,283,340 | 1,419,918 |
| வழங்கல்கள் | 24 | 20 | 12,069,233 | 10,896,944 |
| பராமரிப்பு | 25 | 20 | 6,667,438 | 7,383,341 |
| ஒப்பந்த செலவீனங்கள் | 26 | 20 | 31,925,647 | 22,421,462 |
| ஏனைய மீண்டெழும் செலவீனம் | 27 | 21 | 62,016,907 | 36,269,554 |
| புனரமைப்புச் செலவீனம் | 28 | 21 | 19,528,951 | 9,490,059 |
| நிலையானச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு | 29 | 21 | 21,295,633 | 22,991,495 |
| மாணவர் நிதி உதவிகள் | 30 | 21 | 480,847,100 | 384,860,380 |
| பல்கலைக்கழகங்கள்/உகநிலையங்களுக்கு நிதி உதவி | 31 | 21 | 416,874,831 | 993,956,286 |
| | | | 1,170,491,218 | 1,601,794,400 |
| மிகைகள்/(பற்றாக்குறை) | | | 17,835,677 | 5,175,131 |

பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு

2013 திசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கானது காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2013 | 2012 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல் | ரூபா. | ரூபா. |
| செயற்பாட்டு மிகைகள் (பற்றாக்குறை) | 17,835,677 | 5,175,131 |
| <u>சீராக்கலிற்கானது</u> | | |
| முற்கொடுப்பனவிற்கான வருட முன்னரான சீசாக்கம் | 260,000 | |
| பெறுமானத்தேய்வு | 21,295,633 | 22,991,495 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 4,639,084 | 3,610,826 |
| நிலையான சொத்து விற்பனை இலாபம்/நட்டம் | (579,943) | 1,442,719 |
| வட்டிச் செலவினம் | 912,528,951 | 912,773 |
| மூலதன மானியத் திரட்டு | (17,418,640) | (22,991,495) |
| புனரமைப்பு மானிய திரட்டு | (19,528,951) | (9,490,059) |
| செயற்பாட்டு மிகைகள் (பற்றாக்குறை) | **7,415,646** | **1,651,390** |
| <u>தொழிற்படு மூலதன மாற்றங்கள்</u> | | |
| பொருளிருப்பு அதிகரிப்பு | 1,589,319 | 541,266 |
| பெறவேண்டியவைகளில் அதிகரிப்பு | (51,786,694) | (26,455,124) |
| முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு | (2,300,288) | (1,143,956) |
| உயர் கல்வி நிறுவனங்களிற்கு செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | 82,910,398 | 19,969,963 |
| வியாபாரக் கடன்கொடுத்தோரில் வீழ்ச்சி | 9,884,214 | (792,066) |
| வைப்புக்களில் வீழ்ச்சி | (50,635) | (123,627) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவாக்கப்பட்ட காசு | 47,661,958 | (6,352,154) |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (3,537,078) | (3,785,625) |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (912,786) | (912,773) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | **43,212,094** | **(11,050,553)** |
| <u>முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்</u> | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண சுவீகரிப்பு | (4,075,707) | (8,626436) |
| நிலையான சொத்துக்களின் கைதவிர்ப்பு | 1,089,290 | |
| நிலையான வைப்பீடுகளில் முதலீடு | 4,386,442 | 163,418 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **1,400,025** | **(8,463,018)** |

<u>நிதியிடல் நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்</u>

| | | |
|---|---|---|
| பெறப்பட்ட மூலதன மானியங்கள் | 2,100,000 | 8,00,000 |
| புனரமைப்பு மானியங்கள் | 20,500,000 | 7,000,000 |
| ஆராய்ச்சி நிதிகளில் அதிகரிப்பு | (6,836369) | 1,010,832 |
| வாகனங்களுக்கான நிதிக் குத்தகை கொடுப்பனவு | (4,386,738) | (4,386,668) |
| வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்தான பெறுவனவுகள்/கொடுப்னவுகள் | | (2,344,720) |
| விசேட நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட நிதிகள் | 397,352 | |
| புலமைப்பரிசில் நிதியத்திடம் இருந்து பெறுவனவுகள் /கொடுப்பனவுகள் | 971,341 | (75,628) |
| **நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **12,745,586** | **10,862,469** |
| **தேறிய காசுப்பாய்ச்சல்** | **57,357,706** | **(8,651,103)** |
| 2013.01.01 இல் உள்ளவாறான காசு | 6,104,707 | 14,755,811 |
| **2013.12.31 இல் உள்ளவாறான காசு குறிப்பு 1** | **63,462,413** | **6,104,707** |

<u>குறிப்பு 1</u>

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி – 2323284 | 33,710,651 | (89,970,566) |
| இலங்கை வங்கி – வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் | 277,940 | 277,940 |
| இலங்கை வங்கி – பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம் | 4,473,822 | 5,797,333 |
| குறுகியகால வைப்புக்களில் முதலீடுகள் இ.வ. – 2323284 | 25,000,000 | 90,000,000 |
| | 63,462,413 | 6,104,767 |

பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு

2013 திசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மூலதனத்திலுள்ள மாற்றங்கள் கூற்று

| | பிற்போடப்பட்ட மானியங்கள் | இருந்த மிகை/ (பற்றாக்குறை) | மீள்மதிப்பு மிகை | ஆளணி அபிவிருத்தி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2011 திசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | 50,116,339 | (29,456,544) | 509,313,767 | ---- | 519,811,100 |
| விலகிய பணியாளருக்கான நன்கொடை ஏற்பாடு | -- | 2,142,963 | -- | -- | -- |
| அதிகரிக்கப்பட்டட மூலதன மானியங்கள் | 5,509,939 | -- | -- | --- | 5,509,939 |
| சோத்துக்களின் பெறுமானத் தேய்விற்கான மானியங்கள் திரட்டு | (22,991,495) | -- | -- | -- | (22,991,495) |
| 2012ற்கான மொத்த வருமானம்/ மிகை(பற்றாக்குறை) | --- | 5,175,131 | | | 5,175,131 |
| 2012ல் உள்ளவாறு மீதி | 32,634,783 | (22,137,450) | 509,313,767 | | 519,811,100 |
| **2013ல் உரிமையின் மாற்றங்கள்** | | | | | |
| முன்கொடுப்னவிற்கான சீராக்கல் | --- | 260,000 | -- | -- | 260,000 |
| நிலையான சொத்துக்களை கைதவிர்ப்பு | --- | 1,277,229 | -- | -- | 1,277,229 |
| மூலதன மானியங்களின் அதிகரிப்பு | 3,071,050 | --- | -- | --- | 3,071,050 |
| சொத்துக்களின் பெறுமானத் தேய்விற்கான மானியங்கள் திரட்டு | (17,418,640) | --- | --- | --- | (17,418,640) |
| 2013ற்கான மொத்த வருமானம்/ மிகை(பற்றாக்குறை) | ---- | 17,835,677 | --- | ---- | 17,835,677 |
| ஆளணி அபிவிருத்தி நிதியத்திற்க மாற்றம் | ---- | (17,000,000) | ---- | 17,000,000 | ---- |
| 2013 திசம்பர் 31இல் உள்ளவாறான மீதி | 18,287,193 | (19,764,544) | 509,313,767 | 17,000,000 | 524,836,416 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ඊසී/බී/යූජීසී/1/13/11 | ඔබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2015 පෙබරවාරි 12 දින

සභාපති,
විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව

**විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාවේ 2013 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 12(5) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2014 නොවැම්බර් 27 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.පී.සී. වික්‍රමරත්න
විගණකාධිපති (වැඩබලන)

පිටපත්: 1. ලේකම් - මහාමාර්ග, උසස් අධ්‍යාපන හා ආයෝජන ප්‍රවර්ධන අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| මගේ අංකය / எனது இல. / My No. | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date |
|---|---|---|
| ஈசீ/பீ/யூஜீசீ/1/13/11 | | 2014 நவம்பர் 27 |

தலைவர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 12(5) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 12(1), (4) மற்றும் (7) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை ஆணைக்குழுவின் தலைவருக்கு 2014 யூலை 31 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும்

பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது மாணவ உதவுதொகை செலுத்துவதற்காக வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 26,401,600 தொகையாகவும் 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டுகளின் போது வரிசை அமைச்சிற்காக ஏற்கப்பட்ட ரூபா 893,271 கூட்டுத்தொகையான செலவினம் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) புலமைப்பரிசில் நலனாளிகளுக்குச் செலுத்தப்படாது 2011 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 64,600 தொகை மீளாய்வாண்டின் இறுதியில்

செலுத்தப்பட வேண்டிய புலமைப்பரிசில் நிதியக் கணக்கில் காணப்பட்டது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 17,835,677 மிகையானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,175,131 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 12,660,546 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் மற்றும் மேம்பாட்டு மானியம் ரூபா 10,038,892 தொகையால் அதிகரித்தமையும், தெற்காசியப் பல்கலைக்கழகங்களுக்கான உதவுதொகையாகக் கிடைக்கப்பெற்ற மானியம் ரூபா 40,861,843 தொகையால் அதிகரித்தமையும், ஆதனக் கடன்களுக்காக ரூபா 17,105,414 தொகையான மானியம் கிடைக்கப்பெற்றமையும், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான செலவினம் ரூபா 577,081,455 தொகையால் குறைவடைந்தமையும் இவ் வளர்ச்சிக்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

3.2 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு எதிராக நீதிமன்றத்திலும் ஏனைய நிறுவனங்களிலும் 86 சட்ட நடவடிக்கைகள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கடந்த 03 ஆண்டுகளுக்காக பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட

5

மாணவர் எண்ணிக்கையும் செலவிடப்பட்ட மீண்டெழும் செலவினங்களினதும் பொழிப்பு பின்வருமாறாகும்.

| | 2010/2011 | 2011/2012 | 2012/2013 |
|---|---|---|---|
| பல்கலைக்கழகத்திற்கு தகைமைபெற்ற மாணவர் எண்ணிக்கை | 142,516 | 141,411 | 144,816 |
| பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக்கொள்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை | 22,016 | 28,937 | 22,943 |
| பல்கலைக்கழகத்திற்கு தகைமைபெற்ற மாணவர் எண்ணிக்கையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர் எண்ணிக்கை சதவீதமாக | 15 | 20 | 16 |

| | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|
| செலவிடப்பட்ட மீண்டுவரும் செலவினம் (ரூபா '000') | 14,972,000 | 17,587,000 | 21,655,000 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 77,657 | 73,295 | 80,380 |
| ஒரு மாணவருக்கான சராசரி மீண்டுவரும் செலவினம் (ரூபா) | 192,796 | 239,948 | 269,407 |

- முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் பல்கலைக்கழக நுழைவிற்காக தகைமைபெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் 02 சதவீத அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 21 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் ஒரு மாணவனுக்கான சராசரி மீண்டுவரும் செலவினம் ரூபா 269,407 ஆக இருந்தது.

**(ஆ) ஆறு தேசிய பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகங்கள் வரையில் மேம்படுத்துதல்**

2013 ஆம் ஆண்டின் போது மேற்குறித்த விடயத்திற்காக 6 பல்கலைக்கழகங்களுக்காக ரூபா 285 மில்லியன் தொகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2013 யூலை மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சர்வதேச நிதி நிலைச் சுட்டியின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உருகுணைப் பல்கலைக்கழகம் மாத்திரமே சர்வதேச தரத்திலான சுட்டியின் உயர் நிலையில் காணப்பட்டதுடன் கொழும்பு, மொறட்டுவை, ஸ்ரீ ஜயவர்தனபுர, களனி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்கள் அச் சுட்டியில் குறைந்த நிலையில் காணப்பட்டன.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டிற்குச் சென்று உடன்படிக்கையை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பிணைப் பெறுமதி 4 பல்கலைக்கழகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி ரூபா 273,491,143 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6, 7.7 மற்றும் 7.8 ஆம் பிரிவுகளின் மூலம் இத்தொகையை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக பல்கலைக்கழகங்களைத் தொடர்புபடுத்துதல் மற்றும் பின்தொடர் அவதானிப்பிற்காக சாதகமான முறை ஒன்று ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவிடம் நிலவிய ரூபா 16,612,390 கூட்டுத்தொகையான 4 வெளிநாட்டு நிதியங்களின் மீதி மீளாய்வாண்டின் போது அந் நிதியங்களின் நோக்கங்கள் எய்தப்படுவதற்குப் பயன்படுத்தப்படாது செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் படி, உடன்படிக்கை மீறப்பட்டமைக்காக அறவிடப்பட்ட தொகை பல்கலைக்கழக நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திறைசேரியின் அங்கீகாரமின்றி உடன்படிக்கைகளை மீறிய விரிவுரையாளர்களின் நிதியமொன்று ஒவ்வொரு பல்கலைக்கழகங்களாலும் பேணப்பட்டு இதிலிருந்து கிடைக்கும் வருமானம் பல்கலைக்கழகங்களின் நானாவித செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. 13 பல்கலைக்கழகங்களினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் இந் நிதியின் கூட்டுத்தொகை ரூபா 593,760,767 ஆகக் காணப்பட்டது.

(ஆ) உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்படாது ஓர் தனியார் கம்பனியிடமிருந்து ஆணைக்குழுவால் இணையதள வசதிகள் பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,985,324 தொகை இதற்காகச் செலவிடப்பட்டிருந்தது.

(இ) உபசாரச் செலவினம் மற்றும் தொலைபேசிச் செலவினத் தீர்ப்பனவிற்காகத் திறைசேரியின் இணக்கப்பாடின்றி 2014 மார்ச் 26 ஆம் திகதிய 06/2011 ஆம் இலக்க மற்றும் 2011 மே 24 ஆந் திகதிய 05/2011 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் விநியோகிக்கப்பட்டிருந்தது.

4.4 பதவியணியினர் நிர்வாகம்

ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த பதவியணியினர் 293 ஆன போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 206 ஆக காணப்பட்டமையால் 87 பேரின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2.1 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 21 சதவீதம் முதல் 228 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.2 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் படி நிதியாண்டு முடிவடைந்து 06 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) மூலதன மானியங்களை பயன்படுத்தல்

(இ) பதவியணியினர் நிர்வாகம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
*Ms/v*

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

<table>
<tr><th></th><th>விடயம்</th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள்</th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள்</th><th>எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை</th></tr>
<tr><td>2.<br>2.1<br>2.1.1</td><td>நிதிக் கூற்றுக்கள்<br>விளக்கமான நிதி மீளாய்வு<br>நிதி நிலைமை</td><td>ஆணைக்குழுவின் 2012 மற்றும் 2013 நிதி நிலைமை சம்பந்தமான பொழிப்பு மற்றும் அதன் மாற்றங்களின் வீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br><table><tr><th>விடயம்</th><th>2013<br>ரூ.</th><th>2012<br>ரூ.</th><th>மாற்றத்தின் வீதம் %</th></tr><tr><td>வருமானம்</td><td>1,188,326,896</td><td>1,606,969,531</td><td>26</td></tr><tr><td>செலவு</td><td>1,170,491,218</td><td>1,601,794,400</td><td>27</td></tr><tr><td>செலவைவிட அதிகமான வருமானம</td><td>17,835,677</td><td>5,175,131</td><td>245</td></tr></table></td><td>கீழ் குறிப்பிடப்படும் பிரதான காரணங்கள் இந்த மாற்றத்தின் மீது பாதிப்புச் செலத்தியுள்ளது.<br>வருமானம்<table><tr><th>விடயம்</th><th>மாற்றம் %</th><th>காரணம்</th></tr><tr><td>மீண்டுவரும் நிதி ஏற்பாடு</td><td>(25% )</td><td>வாழ்க்கைச் செலவுப்படியில் ஊழியர் சேமலாப நிதியின் பங்களிப்பின் நிலுவைத் தொகையை செலுத்துவதற்காக பெற்றுக்கொண்ட நிதி ஏற்பாடு73% இனால் குறைந்திருப்பது இதற்கான அடிப்படைக் காரணமாகும்.</td></tr><tr><td>KEID இற்கான மூலதன நிதி ஏற்பாடு</td><td>(56% )</td><td>2012 ஆம் ஆண்டில் இந்த நிதி ஏற்பாட்டை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களுக்கு பெற்றுக்கொடுத்தாலும் 2013 ஆம் ஆண்டில் அந்த நிதி ஏற்பாட்டை நேரடியாக பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ப.மா.ஆ.குழுவிடம் மிகக்குறைந்தளவு நிதி ஏற்பாடே காணப்பட்டது.</td></tr><tr><td>தெற்காசிய பல்கலைக்கழகங்களுக்கான பங்களிப்பு</td><td>58%</td><td>இதற்காக இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டிய பங்களிப்புத் தொகை 2012 இல் 0.527 மில். அமெ.டொலர்களாக இருப்பதுடன் 2013 இல் அத்தொகை0.874 மில். அமெ.டொலர்களாக அதிகரித்தமையினால் வேண்டப்பட்ட நிதி ஏற்பாடு அதிகரித்துள்ளது.</td></tr></table></td><td>2013 ஆம் ஆண்டில் வருமானம் குறைவடைந்தமைக்கு கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் பாதிப்புச் செலுத்தியுள்ளன.<br>(i) நிலுவை வாழ்க்கைச் செலவுப்படியை செலுத்தும் நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டமையினால் 2013 ஆண்டில் நிலுவை வாழ்க்கைச் செலவுப்படியை செலுத்தும் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் அளவு குறைந்தமை.<br>(ii) 2013 ஆம் ஆண்டு முதல் அறிவு விருத்தி மற்றும் நிறுவன அபிவிருத்திக்கான நிதி ஏற்பாடுகளை உரிய பல்கலைக்கழகங்களின் கீழ் அங்கீகரித்து நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனால் ப.மா.ஆ.குழுவின் நிதி ஏற்பாட்டில் குறைவைக் காண முடிகின்றது.<br>(iii) தெற்காசிய பல்கலைக்கழகங்களின் பங்களிப்புத் தொகை2012 இல் 0.527 மில். அமெ.டொலர்களாக இருப்பதுடன் 2013 இல் அத்தொகை 0.874 மில். அமெ.டொலர்களினால் அதிகரித்தமை நிதி ஏற்பாட்டின் அதிகரிப்பு மீது தாக்கம் செலுத்துகின்றது.</td></tr>
</table>

<table>
<tr><th></th><th>விடயம்</th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள்</th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள்</th><th>எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை</th></tr>
<tr><td>2.1.1</td><td>நிதி நிலைமை</td><td></td><td>செலவு
<table>
<tr><th>விடயம்</th><th>மாற்றம் %</th><th>காரணம்</th></tr>
<tr><td>பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கான நிதி உதவி</td><td>(58% )</td><td>2013 ஆம் ஆண்டில் இந்த நிதி ஏற்பாட்டை நேரடியாக பெற்றுக்கொடுத்ததன் காரணமாக அறிவு மேம்பாடு மற்றும் நிறுவன அபிவிருத்திக்கான செலவு 56% இனால் குறைந்தமையும் வாழ்க்கைச் செலவுப்படி தொடர்பாக நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கான செலவு 74% இனால் குறைவடைந்தமையும் இந்த மாற்றத்திற்கு முதன்மையான காரணங்களாகும்.</td></tr>
<tr><td>மாணவர்களுக்கான கல்விக் கொடுப்பனவு உதவிகள்</td><td>25%</td><td>கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது கல்விக் கொடுப்பனவுகளை ஈடு செய்வதற்காக பல்கலைக்கழகங்களினால் கிடைக்கப்பெற்ற வேண்கோள்கள் 36% இனால் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாகும்.</td></tr>
<tr><td>ஏனைய மீண்டுவரும் செலவினம்</td><td>71%</td><td>2013 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக முறைமையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக் கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்காக செலுத்தப்பட்ட 17 மி.ரூ.செலவும் பொதுநலவாய புலமைப் பரிசில் நிதியத்திற்கான இலங்கை அரசின் பங்களிப்பாக வழங்கப்பட்ட 6.6 மி.ரூ.செலவும் இந்த மாற்றத்திற்கான பிரதான காரணமாகும்.</td></tr>
</table></td><td>2013 ஆண்டின் செலவு மாற்றத்திற்கான காரணங்கள்<br><br>(i) 2013 ஆம் அண்டில் அறிவு மேம்பாடு மற்றும் நிறுவன அபிவிருத்திக்கான நிதி ஏற்பாடுகளை நேரடியாக பல்கலைக்கழகங்களுக்கு வழங்கியமையும் வாழ்க்கைச் செலவுப்படியை தீர்க்கும் நடவடிக்கை 2012 இல் 75% மட்டில் பூர்த்தி செய்யப்பட்டமையினால் 2013 ஆம் ஆண்டில் செலவு குறைந்தமை.<br><br>(ii) மாணவர் கல்விக் கொடுப்பனவை ஈடு செய்வதற்காக பல்கலைக்கழகங்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் அதிகரித்தமை.<br><br>(iii) 2013 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக முறைமையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக் கடன்களுக்கான வட்டியைச் செலுத்துவதற்காக செலுத்தப்பட்ட 17 மி.ரூ.செலவும் பொதுநலவாய புலமைப் பரிசில் நிதியத்திற்கான இலங்கை அரசின் பங்களிப்பாக வழங்கப்பட்ட 6.6 மி.ரூபாவை வழங்கியமை.</td></tr>
</table>

96

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

<table>
<tr><th></th><th>விடயம்</th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள்</th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள்</th><th>எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை</th></tr>
<tr>
<td>2.1.2</td>
<td>நிதி நிலைமைக் கூற்று</td>
<td>ஆணைக்குழுவின் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அதன் மாற்றங்களின் வீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>விடயம் 2013 2012 மாற்றத்தின்<br>ரூ. ரூ. வீதம் %<br><br>நிலையான சொத்து 559,632,259 580,470,665 4<br>அசையும் சொத்து 186,808,809 76,953,441 143<br>அசையும் பொறுப்புக்கள் 143,145,880 54,788,563 161<br>அசையா பொறுப்புக்கள் 78,458,772 82,824,442 5<br>நன்கொடைகள், நிதியம் 524,836,416 519,811,100 1</td>
<td>
<table>
<tr><th>விடயம்</th><th>மாற்றம் %</th><th>காரணம்</th></tr>
<tr><td>அசையும் சொத்து</td><td>143%</td><td>பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய நிதி இதன் மூலம் குறித்துக்காட்டப்படுகின்றது.</td></tr>
<tr><td>அசையும் பொறுப்புக்கள்</td><td>161%</td><td>மகாபொல, மாணவர் கல்விக் கொடுப்பனவு மற்றும் சொத்துக் கடனுக்காக பல்கலைக்கழகங்களுக்கு செலுத்த வேண்டிய அளவின் அதிகரிப்புஇதன் மூலம் குறித்துக்காட்டப்படுகின்றது.</td></tr>
</table>
</td>
<td>(i) பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய நிதியில் சுமார் 90% உம் திறைசேரியிலிருந்து கிடைக்க வேண்டிய நிதியில் 100% உம் இதுவரை கிடைத்துள்ளது.<br><br>(ii) மகாபொல, மாணவர் கல்வி கல்விக் கொடுப்பனவு மற்றும் சொத்துக் கடனுக்காக பல்கலைக்கழகங்களுக்கு செலுத்த வேண்டிய தொகையை தற்போது செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளது.</td>
</tr>
</table>

97

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 2.1.3 | காசுப் பாய்ச்சல் கூற்று | ஆணைக்குழுவின் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் அதன் மாற்றங்களின் வீதம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>விடயம் / 2013 ரூ. / 2012 ரூ. / மாற்றத்தின் வீதம் %<br>செயற்பாட்டு நடவடிக்கைகள் 43,212,094 (11,050,553) 491<br>முதலீட்டு நடவடிக்கைகள் 1,400,025 (8,463,018) 117<br>நிதி நடவடிக்கைகள் 12,745,586 10,862,469 17<br>ஆரம்ப காசு மீதி 6,104,707 14,755,811 59<br>இறுதி காசு மீதி 63,462,413 6,104,707 940 | **செயற்பாட்டு நடவடிக்கைகள்** - செயற்பாட்டு மேலதிகம் 2012 ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா **5,175,131** இலிருந்து ரூபா **17,835,677** வரை **245%** இனால் அதிகரித்தமையும், பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா **19,969,963** இலிருந்து ரூபா **82,910,398** வரை **315%** இனால் அதிகரித்தமையும் இந்த மாற்றத்திற்கான பிரதான காரணமாகும்.<br><br>**முதலீட்டு நடவடிக்கைகள் -**<br>நிலையான சொத்துக்களை உரிமைகொள்ளுவதற்கான செலவு ரூபா 8,626,436 இலிருந்து 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,075,707 வரை அதிகரித்தமையும் நிலையான வைப்புக்களில் முதலீடு 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,3486,442 வரை குறைந்தமையும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளது.<br><br>**இறுதி காசு மீதி**- 2012 ஆம் ஆண்டில் ரூபா (89,970,566) ஆக இருந்த 2323284 ஆம் இலக்கக் கணக்கின் மீதி 2013 ஆம் ஆண்டில் ரூபா 33,710,651 ஆக இருந்ததுடன் அது 137% வளர்ச்சியாகும். அத்துடன் 2012 ஆம் ஆண்டில் ரூபா 90,000,000 ஆக இருந்த குறுகிய கால முதலீடுகள் 2013 ஆம் ஆண்டில் ரூபா 25,000,000 வரை 72% இனால் குறைவடைந்துள்ளது. | பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டிய நிதி தற்போது வழங்கப்பட்டுள்ளது. |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 2.2 | நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக கருத்துக் கூறல் | | | |
| 2.2.1 | கணக்கியல் குறைபாடுகள் | கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(i) மூலதன சொத்துக்கள் மேம்பாடு மற்றும் புனரமைப்புக்காக நிறுவனத்திற்கு மூலதன உதவித் தொகைகளாக 2011,2012,2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 3,500,000 ரூபா 8,000,000 ரூபா 21,626,076 கிடைத்தது. குறிப்பிட்ட ஆண்டுகளில் மூலதன உதவித் தொகைகளில் செலவு செய்யப்பட்ட ரூபா 11,317,941 ரூபா 9,490,059 ரூபா 19,528,951 வரவு செலவுக் கணக்கில் மீண்டுவரும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் செலவு செய்யப்படாத மீதி நிதி ஏற்பாடுகள் ஒத்தி வைக்கப்பட்ட மூலதனமாக குறிப்பிட்ட ஆண்டிறுதியில் பொறுப்புக்களின் குறிப்பிடப்பட்டிருந்தமை.<br>(ii) 2013 டிசம்பர் 31 ஆம் திகதியாகும்போது ஓய்வூதிய அனுகூலங்களைச் செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 36,798,930 பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை.<br>(i). ஆண்டிறுதியில் செலவு செய்யப்படாத நிதி ஏற்பாடுகள் "செலவு செய்யப்படாத மூலதன உதவிகள்" (Unspent Capital Grants) என சரியான முறையில் இறுதிக் கணக்குகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.<br>(ii). இந்தத் தொகையை தற்போது முதலீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | (i).ஆண்டிறுதியில் செலவு செய்யப்படாத நிதி ஏற்பாடுகள் "செலவு செய்யப்படாத மூலதன உதவிகள்" (Unspent Capital Grants) என சரியான முறையில் இறுதிக் கணக்குகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.<br>(ii) பணிக்கொடை செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 36,700,000 பணம் திறைசேரி முறிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 2.2.2 | இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் | கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(அ) பேரேட்டிற்கமைய வாகனங்கள் கடன் கணக்கின் மீதி ரூபா 1, 131,297 ஆக இருந்ததுடன் குறிப்பிட்ட ஆவணத்தில் மொத்தம் ரூபா 1,112,964 ஆக இருந்தமையால் ரூபா 18,333 மாற்றம் அவதானிக்கப்பட்டது.<br>(ஆ) பேரேட்டில் பண்டிகைக்கால முற்பணக் கணக்கின் பெறுமதி ரூபா 183,900 ஆக இருந்ததுடன் குறிப்பிட்ட ஆவணத்தில் ரூபா 136,000 ஆக குறிப்பிடப்பட்டிருந்தமையினால் ரூபா 47,900 மாற்றம் அவதானிக்கப்பட்டது.<br>(இ) பேரேட்டிற்கமைய கணனி கடன் கணக்கின் மீதி ரூபா1,565,500 ஆக இருந்ததுடன் குறிப்பிட்ட ஆவணத்தில் ரூபா 1,458,500 மாற்றம் அவதானிக்கப்பட்டது. | (அ),(ஆ) மற்றும் (இ) போன்ற கணக்காய்வு அவதானிப்புகளுடன் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கமைய வாகனக் கடன் கணக்கு, பண்டிகைக்கால முற்பணக் கணக்கு மற்றும் கணனிக் கடன் கணக்கு என்பன சம்பள கணனி முறைமை ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கைகளுடன் கீழ் காணப்படும் காரணங்கள் காரணமாக சமப்படவில்லை.<br>(i). ஊழியர்கள் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு / உயர் கல்வி நிறுவகங்களுக்கு இடமாற்றலாகிச் செல்லும் சந்தர்ப்பங்களில் அவர்கள் பற்றிய தரவுகளை சம்பள கணனி முறைமையிலிருந்து நீக்கப்பட்டாலும் குறிப்பிட்ட கடன் தொகையை குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு மாற்றி அனுப்பும்வரை கடன் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட மாட்டாது. அத்துடன் ஊழியர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு மாற்றலாகி வரும்போது சம்பள கணனி முறைமையில் உட்படுத்தப்பட்டாலும் குறிப்பிட்ட நிறுவகங்களிலிருந்து கடன் தொகையை மாற்றிக்கொள்ளும்வரை கடன் பதிவேடுகளில் உட்படுத்தப்பட மாட்டாது.<br>(ii) பண்டிகைக்கால முற்பணம் குறிப்பிட்ட பண்டிகைக்கு 14 தினங்களுக்கு முன்னர் வழங்கப்படல் வேண்டும். அதற்கமைய பண்டிகைக்கால முற்பணத்தை வழங்கும் சந்தர்ப்பத்தில் அந்தக் கடன், கடன் பதிவேட்டில் பதியப்படுவதுடன் அதனை சம்பள கணனி முறைமையில் அடுத்த மாதம் அறவிடப்படும்போதே உட்படுத்தப்படுகின்றது. | பல்கலைக்கழகங்களுக்கு / உயர் கல்வி நிறுவகங்களுக்கு இடமாற்றலாகிச் செல்லும் சந்தர்ப்பங்களில் அவர்கள் பற்றிய தரவுகளை சம்பள கணனி முறைமை மற்றும் கடன் பதிவேட்டிற்கிடையில் ஏற்படும் கணக்கியல் ரீதியான மாற்றங்கள் மாதாந்தம் தயாரிக்கும் கடன் இணக்கப்பாட்டு விபரத்தின் ஊடாக தெளிவாகின்றது. |

100

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

<table>
<tr><th></th><th>விடயம்</th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள்</th><th>கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள்</th><th>எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை</th></tr>
<tr><td>2.2.3</td><td>பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்</td><td>கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(அ) <u>பெறப்பட வேண்டிய கணக்குகள்</u><br><br>கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் அவதானிக்கப்படுகின்றன.<br><br>(i) 2011 ஆம் ஆண்டில் அமைச்சுக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவான ரூபா 893,271 மீளாய்வு ஆண்டின் இறுதி வரை ஈடு செய்யப்படாமல் பெறப்பட வேண்டிய கணக்குகளாக பதியப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக கடந்த ஆண்டின் கணக்கறிக்கை ஊடாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தாலும் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று மாணவர் கல்விக் கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட முற்பணத்தில் தீர்க்கப்படாத முற்பணத்தின் அளவு ரூபா 41,951,200 ஆக இருந்ததுடன் அதில் 2011 ஆம் ஆண்டில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்திற்கு வழங்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா முற்பணமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த முற்பணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.</td><td>(அ). <u>பெறப்பட வேண்டிய கணக்குகள்</u><br><br>(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான அலுவலகமொன்றை அமைச்சு வளவினுள் நடாத்தியதுடன் அந்த அலுவலகத்தில் காணப்படும் உபகரணங்களை தற்காலிகமாக அமைச்சு பயன்படுத்துவதுடன் இந்த உபகரணங்களை மீண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பெற்றுத் தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(ii) திறைசேரியிலிருந்து ஏனைய செலவுகளுக்காக கிடைக்கும் நிதியை முகாமைத்துவப்படுத்துவதன் மூலம் பல்கலைக்கழகத்தின் ஊடாக மாணவர் கல்விக் கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. ஆனாலும் 2013 ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து நிதி கிடைப்பதற்கு தாமதமாகியமையினால் இவ்வாறு முற்பணம் விடுவிக்க நேரிட்டது. அதனூடாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாணவர் கல்விக் கொடுப்பனவு நிதியை வழங்குவதனை முகாமைத்துவப்படுத்துவதற்கு ப.மா.ஆ.குழு நிதமும் நடவடிக்கை மேற்கொள்ளும்.<br><br>2013.12.31 ஆம் திகதியன்று நிலவிய கிடைக்கப்பெற வேண்டிய முற்பண மீதிகளில் 98% அளவு 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதுடன் அதில் 55% அளவு 2013 ஆம் ஆண்டில் இறுதி 3 மாதங்களுக்குள்ளேயே வழங்கப்பட்டது.</td><td>(i) இந்த உபகரணங்களை மீண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பெற்றுத் தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(ii) 2014.10.31 ஆம் திகதியாகும்போது அந்த முற்பணம் கீழ் குறிப்பிடப்படும் வகையில் தீர்க்கப்ப்டிருந்தது.<br><br><table><tr><th>பல்கலைக்கழகம்</th><th>முற்பணப் பெறுமதி 31/12/2013</th><th>தீர்க்கப்பட்ட தொகை(ரூ)</th><th>தீர்க்கப்பட்ட திக</th></tr><tr><td>திரு.மலை வளாகம்</td><td>1,000,000</td><td>-</td><td>-</td></tr><tr><td>ஸ்ரீபாளி வளாகம்</td><td>709,800</td><td>709,800</td><td>14.01.31</td></tr><tr><td>களனி பல்.கழகம்</td><td>5,000,000</td><td>5,000,000</td><td>14.02.13</td></tr></table></td></tr>
</table>

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

2011 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 64,600 பெறுமதிமிக்க புலமைப் பரிசில் தொகையை புலமைப் பரிசில் பெறுபவர்களுக்கு செலுத்தாது 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய புலமைப் பரிசில் நிதியக் கணக்கில் காணப்பட்டது.

**2014.06.30 ஆம் திகதியன்று அந்த முற்பணங்கள் கீழ் குறிப்பிடப்படும் வகையில் தீர்க்கப்பட்டிருந்தது.**

| திகதி | பல்கலைக்கழகம் | முற்பணப் பெறுமதி **31/12/2013** | தீர்க்கப்பட்ட தொகை(ரு) | தீர்க்கப் பட்ட திகதி |
|---|---|---|---|---|
| 11.03.09 | திரு.மலை வளாகம் | 1,000,000 | - | - |
| 13.07.04 | ஸ்ரீபாளி வளாகம் | 709,800 | 709,800 | 14.01.31 |
| 13.07.31 | களணி பல்.கழகம் | 5,000,000 | 5,000,000 | 14.02.13 |
| 13.08.08 | ஸ்ரீ ஜ.புர பல்.கழகம் | 12,017,400 | - | - |
| 13.10.25 | ஸ்ரீபாளி வளாகம் | 484,800 | 484,800 | 14.01.13 |
| 13.10.25 | யாழ். பல்.கழகம் | 9,355,000 | 9,355,000 | 14.03.19 |
| 13.11.06 | மொரட்டுவை பல்.கழகம் | 3,636,600 | - | - |
| 13.12.03 | ஸ்ரீ ஜ.புர பல்.கழகம் | 9,747,600 | - | - |
| மொத்தம் | | **41,951,200** | **15,549,600** | |

அத்துடன் திறைசேரியிலிருந்து நிதி கிடைப்பதன் பிரகாரம் அவ்வப் பல்கலைக்கழகங்களின் ஊடாக இந்த முற்பணம் ஈடு செய்யப்படும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

இந்த செலுத்த வேண்டிய கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 64,600 பெறுமதியான செலுத்த வேண்டிய புலமைப் பரிசில் தொகையைச் செலுத்துவதற்கான வேண்டுகோள்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து கிடைக்கவில்லையாதலால் எதிர்காலத்தில் கணக்குகளுடன் சீர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

| பல்கலைக்கழகம் | முற்பணப் பெறுமதி **31/12/2013** | தீர்க்கப்பட்ட தொகை(ரு) | தீர்க்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| ஸ்ரீ ஜ.புர பல்.கழகம் | 12,017,400 | | |
| ஸ்ரீபாளி வளாகம் | | 12,017,400 | 14.10.29 |
| யாழ். பல்.கழகம் | 484,800 | | |
| மொரட்டுவை பல்.கழகம் | | 484,800 | 14.03.19 |
| | 9,355,000 | | |
| ஸ்ரீ ஜ.புர பல்.கழகம் | 3,636,600 | 9,355,000 | - |
| | | | - |
| | 9,747,600 | - | |
| | | 9,747,600 | 14.10.29 |
| மொத்தம் | **41,951,200** | **37,314,600** | |

அத்துடன் திறைசேரியிலிருந்து நிதி கிடைப்பதன் பிரகாரம் அவ்வப் பல்கலைக்கழகங்களின் ஊடாக இந்த முற்பணம் ஈடு செய்யப்படும்.

(ஆ) இந்த செலுத்த வேண்டிய கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 64,600 பெறுமதியான செலுத்த வேண்டிய புலமைப் பரிசில் தொகையைச் செலுத்துவதற்கான வேண்டுகோள்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து கிடைக்கவில்லையாதலால் எதிர்காலத்தில் கணக்குகளுடன் சீர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 2.2.4 | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை | கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(i) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கமைய ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை(எரிதலை) பரிசோதிக்க வேண்டியிருப்பினும் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான வாகனங்கள் சம்பந்தமாக அந்த பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை.<br><br>(ii) நிதிப் பிரமாணம் 104 இற்கமைய திடீர் விபத்துக்கள், நட்டங்கள் பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதியை அறிவுறுத்தப்படவில்லை.<br><br>(iii) நி.பி 1646 இற்கமைய பயணங்கள் பற்றிய மாதாந்த பொழிப்பின் அசல் பிரதிகள் மற்றும் நாளாந்த ஓட்டப் பத்திரக் குறிப்புக்களை(Running chart) அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காயவாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும் அந்த அறிக்கையை உரிய முறையில் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லையென்பதுடன் வாகன லொக் குறிப்புப் புத்தகங்களும் உரிய முறையில் | (i) தற்போது ஆணைக்குழுவின் வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை(எரிதலை) 06 மாதத்திற்கு ஒருமுறை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>(ii) 2013 ஆம் ஆண்டில் வாகன விபத்துக்கள் சம்பந்தமாக 2014.06.30 ஆம் திகதிய UGC/T/1/1ஆம் இலக்க கடிதம் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியை அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>(iii) சகல மாதங்களிலும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஓட்டப் பத்திரக் குறிப்புக்களை (Running chart) உரிய முறையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வாகன லொக் குறிப்புப் புத்தகங்களும் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. | (i) தற்போது ஆணைக்குழுவின் வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டை(எரிதலை) 06 மாதத்திற்கு ஒருமுறை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>(ii) வாகன விபத்துக்கள் சம்பந்தமாக உரிய தினத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>(iii) சகல மாதங்களிலும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஓட்டப் பத்திரக் குறிப்புக்களை (Running chart) உரிய முறையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வாகன லொக் குறிப்புப் புத்தகங்களும் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. |



103

| | | | | |
|---|---|---|---|---|
| | | பராமரிக்கப்படவில்லை. | | |
| | | (iv) நி.பி.1647(உ) மற்றும் நிதிப் பிரமாணம் II பிரிவின் VI ஆவது அட்டவணைப் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் வாகனங்கள் பற்றிய பதிவேட்டைப் பேணி வர வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. | (iv) தற்போது வாகனங்கள் பற்றிய பதிவேட்டை பேணி வர ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | (iv) தற்போது வாகனங்கள் பற்றிய பதிவேட்டை பேணி வர ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| | | (v) 2000 மார்ச் 25 ஆம் திகதிய 07/2000 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கை ஊடாக 1999 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 22/99 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையானது ஆணைக்குழுவுக்கு ஏற்புடைத்தாக்கப்பட்டிருப்பினும் அந்த சுற்று நிருபத்தின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் உத்தியோகத்தர்களுக்காக சுற்றறிக்கைப் பிரகாரம் பெற்றுக்கொள்ள வேண்டிய அங்கீகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் குறிப்பிடப்பட்ட பந்தியின் பிரகாரம் உச்ச எல்லையான 40 கி.மீட்டர்களைத் தாண்டி ஓடிய சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | (v) குறிப்பிட்ட எழுத்தாவணங்கள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br><br>மேலும், கடமை அவசியத்திற்கேற்ப 40 கி.மீ.எல்லையைத் தாண்ட வேண்டியேற்பட்டது. | (v) கடமை அவசியத்திற்கேற்ப 40 கி.மீ.எல்லையைத் தாண்ட வேண்டியேற்பட்டது. |
| | | (vi) 2002 ஜுலை 03 ஆம் திகதிய 804 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைப் பிரகாரம் ப.மா.ஆணைக்குழுவுக்கு கணனி உள்ளீட்டு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும்போது திறந்த ரீதியிலான அறிவித்தல் ஊடாக உளச்சார்பு(Aptitude) சோதனை மூலம் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. குறிப்பிட்ட சுற்றறிக்கைக்குப் புறம்பாக 2006 ஜுன் 06 ஆம் திகதிய 876 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை ஊடாக திறந்த திறந்த ரீதியிலான அறிவித்தல் | (vi) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 137 ஆவது சரத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் சட்டத்தின் 15 (ix) சரத்திற்கமைய பல்கலைக்கழக முறைமையுடன் தொடர்பான சுற்றறிக்கைகளை வெளியிடுவதற்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு.<br><br>அதற்கமைய 876 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் நடைமுறைகளைப் பின்பற்றி இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>இந்தக் கணக்காய்வுக்கான பதில் | 876 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் நடைமுறைகளைப் பின்பற்றி இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. |

104

| | | | | |
|---|---|---|---|---|
| | | இன்றி கணனி உள்ளீட்டு உதவியாளர்களை( தரம் III) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு தொடர்ந்தும் ஆட்சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>அவ்வாறு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட கணனி உள்ளீட்டு உதவியாளர்கள்( தரம் III) இருவருக்கு 2013 ஆம் ஆண்டு சம்பளமாக ரூபா 577,475 ப.மா.ஆணைக்குழுவால் செலுத்தப்பட்டுள்ளது.<br>(EC/B/UGC/2013/10) | 2014.06.16 ஆம் திகதிய UGC/P/7/ கணக்காய்வு ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 2.2.5 | சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் | கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(அ) ப.மா.ஆணைக்குழுவினால் திறைசேரியின் அனுமதியின்றி 2002 ஜுலை 10 ஆம் திகதிய 805 ஆம் இலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டு ஒப்பந்த மீறல் நிதியம் பல்கலைக்கழகங்களின் தேவைகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2002 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>(EC/B/UGC/2013/03/01)<br>(ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சினால் 2010 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் அரச துறைக்கான தொலைபேசிக் கட்டணங்களைத் தீர்க்கும் சுற்றறிக்கையை ப.மா.ஆ.குழு பல்கலைக்கழக முறைமையின் நிருவாக கட்டமைப்புக்கு பொருந்தும் வகையில் திருத்தியமைத்து 2011 மே 24 ஆம் திகதிய 5/2011 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையை வெளியிட்டு ஏற்புடைத்தாக்கியுள்ளதுடன் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.<br>(EC/B/UGC/2013/5) | (அ). உடன்படவில்லை.<br>ஒப்பந்த மீறல்களுடன் தொடர்பான நிதியத்தின் அலுவல்கள் மற்றும் அதன் வருமானத்தை செலவு செய்யும் முறை சம்பந்தமாக தெளிவான ஆலோசனைகள் 737 மற்றும் 805 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.<br>(ஆ) 5/2011ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை<br>அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்குதல் மற்றும் கட்டணங்களை செலுத்தித் தீர்த்தல் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 2010.09.01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளை பல்கலைக்கழக முறைமையின் நிருவாக கட்டமைப்புக்கு பொருந்தும் வகையில் தயாரித்து 5/2011 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையை ப.மா.ஆ.குழு வெளியிட்டுள்ளது.<br>**இது சம்பந்தமான தெளிவுபடுத்தல் 2014.06.05 ஆம் திகதி பிரதிக் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.** | (அ)இந்த நிதியத்தின் பயன்பாடு 737 மற்றும் 805 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.<br>(ஆ) அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பாடல் வசதிகளை வழங்குதல் மற்றும் கட்டணங்களை செலுத்தித் தீர்த்தல் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 2010.09.01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளை பல்கலைக்கழக முறைமையின் நிருவாக கட்டமைப்புக்கு பொருந்தும் வகையில் தயாரித்து ப.மா.ஆ.குழுவினால் வெளியிடப்பட்டுள்ள 5/2011 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் கட்டணங்கள் செலுத்தித் தீர்க்கப்படுகின்றது. |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 2.2.6 | எதிர்பாரா பொறுப்புக்கள் | நிறுவனத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 86 ஆக இருப்பதுடன் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன<br><br><u>தாக்கல் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள்</u> — <u>வழக்கு எண்ணிக்கை</u><br>உயர் நீதிமன்றம் 26<br>முறையீட்டு நீதிமன்றம் 29<br>பல்கலைக்கழக மேன்முறையீட்டு சபை 15<br>மனித உரிமைகள் ஆணைக்குழு 4<br>தொழில் நியாய சபை 6<br>மேல் நீதிமன்றம் 2<br>மாவட்ட நீதிமன்றம் 3<br>இணக்கப்பாடு <u>1</u><br><u>86</u> | உடன்படுகின்றோம் | இதுவரை 45 வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன. |

107

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 3. | நிதி மீளாய்வு | | | |
| 3.1. | நிதி விளைவுகள் | சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நிறுவனத்தின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 17,835,677 மேலதிகமாக இருந்ததுடன் அதற்கு இணையாக கடந்த ஆண்டிற்கான மேலதிகம் ரூபா 5,175,131 ஆக இருந்ததன் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வு ஆண்டின் நிதி விளைவு ரூபா 12,660,546 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றோம் | உடன்படுகின்றோம் |

108

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 4. | | | | |
| 4.1 | செயற்பாட்டு மீளாய்வு செயலாற்றுகை | கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கடந்த 03 வருடங்களாக பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட மீண்டுவரும் செலவினங்கள் பற்றிய பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>**2010/2011 2011/2012 2012/2013**<br>தகுதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 142,516 141,411 144,816<br>தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 22,016 28,937 22,943<br><br>தகுதிபெற்ற மாணவர் எண்ணிக்கையில் பல்கலைக்கழகங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அளவின் வீதமாக 15% 20% 15.8%<br>**2011 2012 2013**<br>மேற்கொள்ளப்பட்ட மீண்டுவரும் செலவு(ரூ.)12,961,095 14,611,003 16,932,456<br>மொத்த மாணவர் எண்ணிக்கை 77,657 73,295 80,324<br>ஒரு மாணவருக்கான மீண்டுவரும் செலவு(ரூ)166,902 199,345 210,802<br>2012/2013 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு தகுதி பெற்ற மாணவர் எண்ணிக்கையில் 16% மானவர்கள் மட்டும் பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன் ஒரு மாணவருக்கான மீண்டுவரும் செலவு ரூபா 210,802 ஆக இருந்தது. அவ்வாறே மீளாய்வு ஆண்டில் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களில் 42% மானவர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். | (அ)உடன்படுகின்றோம் | (அ)உடன்படுகின்றோம் |

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|

**(ஆ). தேர்ந்தெடுக்கப்பட்ட 6 பல்பலைக்கழகங்களை சர்வதேச தரப் பல்கலைக்கழகங்களாக மேம்படுத்தல்**

06 பல்கலைக்கழகங்கள் அதாவது, பேராதனை, மொரட்டுவை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, களனி மற்றும் ருஹுனு போன்ற பல்கலைக்கழகங்களுக்காக 285 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு அதனை பயன்படுத்திய விதம் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த பல்கலைக்கழகங்களின் சர்வதேச பல்கலைக்கழக தரக் குறிகாட்டிகளில் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

| பல்கலைக்கழகம் | சர்வதேச தரக்குறிகாட்டி 2012 ஜூலை | 2013 ஜனவரி | ஜூலை |
|---|---|---|---|
| 1.கொழும்பு பல்கலைக்கழகம் | 1682 | 1883 | 2150 |
| 2.மொரட்டுவை பல்கலைக்கழகம் | 2011 | 1970 | 2255 |
| 3.அழகியற்கலை பல்கலைக்கழகம் | 17566 | 16640 | 16799 |
| 4.ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 12566 | 15357 | 14944 |
| 5. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 5664 | 5976 | 8509 |
| 6. வயம்ப பல்கலைக்கழகம் | 12355 | 11322 | 11258 |
| 7. ஸ்ரீ ஜ.புர பல்கலைக்கழகம் | 2759 | 3198 | 4508 |
| 8.சப்ரகமுவ பல்கலைக்கழகம் | 9868 | 9637 | 8708 |
| 9.ரஜரட்ட பல்கலைக்கழகம் | 6228 | 13494 | 13541 |
| 10.ருஹுனு பல்கலைக்கழகம் | 3294 | 2618 | 2353 |
| 11. களனி பல்கலைக்கழகம் | 3048 | 3430 | 5969 |
| 12.பேராதனை பல்கலைக்கழகம் | 2467 | 2711 | 2973 |
| 13.கிழக்குப் பல்கலைக்கழகம் | 12322 | 11670 | 12124 |
| 13.தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 16005 | 14638 | 14219 |

**(ஆ).தேர்ந்தெடுக்கப்பட்ட 06 தேசிய பல்கலைக்கழகங்களை சர்வதேச தர பல்கலைக்கழகங்களாக உயர்த்துவதற்கான முன்னேற்ற மீளாய்வு அறிக்கையை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதனை மீண்டும் இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.**

| பல்கலைக்கழகங்கள் / நிறுவகங்கள் | 2013 இற்கான நிதி ஏற்பாடு | செலவு | முன்னேற்றம் நிதி | பௌதீக |
|---|---|---|---|---|
| பேராதனை பல்கலைக்கழகம் | 75 | 64.85 | 92% | 95% |
| கொழும்பு பல்கலைக்கழகம் | 10 | 9.85 | 96% | 97% |
| ஸ்ரீ ஜ.புர பல்கலைக்கழகம் | 40 | 20.89 | 52% | 90% |
| களனி பல்கலைக்கழகம் | 75 | 20.36 | 35% | 95% |
| மொரட்டுவை பல்கலைக்கழகம் | 50 | 41.68 | 82% | 100% |
| ருஹுனு பல்கலைக்கழகம் | 35 | 30.00 | 95% | 100% |
| | 285 | 187.63 | | |

(ஆ)முன்னேற்ற அறிக்கை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

110

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | | (இ) மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்விக்கான தேசிய மத்திய நிலையத்தினால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் 06 பேருக்கு முதுமாணிப் பட்டப் பாடநெறிகளுக்காக 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட மானியமான ரூபா 33,440,150 சம்பந்தமாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.<br>(i) கற்கைக் காலம் 03 - 05 ஆண்டுகளாக இருந்ததுடன் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியாகும்போது கற்கை நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்காமை.<br>(ii) மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்விக்கான தேசிய மத்திய நிலையத்தினால் நிதி உதவியைப் பெற்று முதுமாணிப் பட்டப் பாட நெறிகளை பூர்த்தி செய்யாத மேற்குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர்கள் அப் பாடநெறிகளுக்காக ஏனைய திட்டங்களின் ஊடாகவும் நிதி உதவியைப் பெற்றிருத்தல்.<br>(iii) மேற்குறிப்பிடப்பட்ட விரிவுரையாளர்களினால் அந்த பட்டப் பாடநெறிகளுக்காக சம்பளத்துடனான மற்றும் சம்பளமற்ற விடுமுறையையும் பெற்றிருத்தல்.<br>(iv) களணிப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் ரூபா 3,465,789 உதவித் தொகையையும் 2007 மார்ச் 11 முதல் 2011 பெப்ரவரி 28 வரை கற்கை விடுமுறையைப் பெற்றிருப்பினும் 2013 டிசம்பர் 31 ஆகும்போது ஒப்பந்தத்தை மீறி சேவைக்கு சமுகமளிக்காதிருப்பினும் இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுத்திருக்காமை. | (இ).மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்விக்கான தேசிய மத்திய நிலையம் 2005.10.19 ஆம் திகதி 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 24 ஆம் சரத்தின் கீழ் 1415/17 ஆம் இலக்க விபரக்கொத்தின் ஊடாக வேறான உயர் கல்வி நிறுவகமாக தாபிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த நிறுவனத்திற்கான நிதி ஏற்பாடு திறைசேரி ஊடாக ஒதுக்கப்படுவதுடன் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவகம் தனது தேவைக்கேற்ப திறைசேரியிலிருந்து விடுவிக்கப்படும்.<br><br>அதற்கமைய மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்விக்கான தேசிய மத்திய நிலையத்தின் பணிப்பாளர் (கணக்கீட்டு அலுவலர்) மற்றும் கட்டுப்பாட்டு சபை அதன் செயற்பாடுகள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியிருப்பதனால் நீங்கள் சுட்டிக்காட்டிய விடயங்கள் சம்பந்தமாக அதன் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இது தொடர்பாக மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான உயர் கல்விக்கான தேசிய மத்திய நிலையத்தின் பணிப்பாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற பதில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 1) |

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 2009/2010 கற்கை ஆண்டுடன் ஒப்பிடும்போது 2012/2013 கற்கை ஆண்டில் குறைவடைந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. | (ஈ). இது சம்பந்தமான விளக்கம் இணைப்பு 2 ஊடாக காட்டப்பட்டுள்ளது. |

| கற்கைப் பாடநெறி | தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | | வேறுபாடு |
|---|---|---|---|
| | 2009/2010 | 2012/2013 | |
| Agriculture | 701 | 525 | 176 |
| Computer Science | 263 | 260 | 3 |
| Design(Architecture) | 50 | 48 | 2 |
| Pace &Conflict Resolution | 36 | 33 | 3 |
| Information &Communication Technology | 228 | 148 | 80 |
| Agriculture Technology &Management | 210 | 202 | 8 |
| Computer Science &Technology | 49 | 40 | 9 |
| Animal Science | 49 | 35 | 14 |
| Visual &Technological Arts | 50 | 45 | 5 |
| Export Agriculture | 49 | 32 | 17 |

112

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Tea Technology &Value Addition | 49 | 33 | 16 | |
| | | Mineral Resources &Technology | 49 | 33 | 16 | |
| | | Business Information Systems (Special) | 50 | 46 | 4 | |
| | | Computing &Information Systems | 80 | 57 | 23 | |
| | | Speech &Hearing Science | 49 | 38 | 11 | |
| | | Animal Science &Fisheries | 49 | 37 | 12 | |
| | | Food Production &Technology Management | 59 | 45 | 14 | |
| | | Aquatic Resources Technology | 49 | 30 | 19 | |
| | | Palm &Latex Technology and Value Addition | 49 | 31 | 18 | |
| | | Information Technology &Management | 207 | 115 | 92 | |

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 4.2 | முகாமைத்துவக் குறைபாடுகள் | கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(அ). புலமைப் பரிசில் பெற்று கற்கை நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள 3 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஒப்பந்தங்களை மீறிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை 2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 69,771,034 ஆக இருந்த போதிலும் பல்கலைக்கழக தாபனக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6, 7.7 மற்றும் 7.8 ஆம் பிரிவுகளின் படி அந்தத் தொகையை பல்கலைக்கழகங்கள் அறவிடுவதற்குத் தேவையான செயல்முறையொன்றை ஆணைக்குழு தயாரித்திருக்கவில்லை.<br><br>(EC/B/UGC/2013/02)<br><br>(ஆ) புலமைப் பரிசிலைப் பெற்று கற்கை நடவடிக்கைகளுக்காக வெளிநாடு செல்வது சம்பந்தமாக வேண்டப்பட்ட கடந்த 5 ஆண்டு காலத்தினுள் வெளிநாடு சென்ற ப.மா.ஆ.குழு ஆளணியில் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பெயர்ப் பட்டியல், வெளிநாடு சென்று திரும்பி வராத உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் அவர்கள் பிணைமுறித் தொகையை மீளச் செலுத்தினார்களா என்பது பற்றி, சேமலாப நிதியத்திலிருந்து அந்தத் தொகை அறவிடப்பட்டுள்ளதா என்பது பற்றி, அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.(EC/B/UGC/2013/02) | (அ) மற்றும் (ஆ). உடன்படவில்லை.<br><br>2010.0205 ஆம் திகதி வெளியிடப்பட்ட 920 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை ஊடாக இதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அது தவிர 2014 ஜுன் மாதம் நடைபெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தின்போது இதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக 07 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.<br><br>அந்தக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும். | (அ) மற்றும் (ஆ)<br><br>2014 ஜுன் மாதம் நடைபெற்ற ஆணைக்குழுக் கூட்டத்தின்போது இதற்காக தேவையான நடவடிக்கை எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு முன்வைக்கும் சிபாரிசின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

114

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | | (இ) 2012 நவம்பர் 30 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் சட்ட ரீதியாக தாபிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருப்பினும் கிளிநொச்சியில் அறிவியல் நகரைத் தாபிப்பதற்காக குறிப்பிட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான நிர்மாணப் பணிகளை ஒப்படைப்பதற்கான அங்கீகாரம் 2014 பெப்ரவரி 21 ஆம் திகதிய, அப/14/0153/521/007 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாகவாகும்.<br><br>மேலும், உயர் கல்வி அமைச்சு 2013 ஆம் ஆண்டிற்கான மேற்குறிப்பிடப்பட்ட செயல் திட்டத்திற்காக ரூபா 130,000,000 நிதியை ஒதுக்கியிருந்தபோதிலும் எந்தவிதமான தொகையும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | (இ). உடன்படவில்லை.<br><br>2013 ஆம் ஆண்டில் பொறியியல் பீடத்தை தாபிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு / உயர் கல்வி அமைச்சின் ஊடாக யாழ் பல்கலைக்கழகத்திற்கு நிதி வழங்கப்படவில்லை. | (இ) 2013 ஆம் ஆண்டில் பொறியியல் பீடத்தை தாபிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு / உயர் கல்வி அமைச்சின் ஊடாக யாழ் பல்கலைக்கழகத்திற்கு நிதி வழங்கப்படவில்லை. |

115

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 4.3 | சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் | கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>(அ) ஒப்பந்த மீறல்கள் மூலம் அறவிடப்பட்ட தொகை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் 1998 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 737 ஆம் இலக்க ஆ.குழுச் சுற்றறிக்கைக்கமைய திறைசேரி அங்கீகாரம் இன்றி ஒப்பந்தத்தை மீறிய விரிவுரையாளர்களின் நிதியமொன்றை(bond violation / Breach Fund) ஒவ்வொரு பல்கலைக்கழகமும் பராமரித்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை பல்கலைக்கழகத்தின் பல்வேறு செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. 13 பல்கலைக்கழகங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரி சோதனையின் பிரகாரம் இந்த நிதியத்தின் மொத்தம் ரூபா 592,890,340 ஆகும். ப.மா.ஆ.குழுவின் இந்த நிதியத்தின் மீதித் தொகை ரூபா 10,278,787 ஆகும். விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>__பல்கலைக்கழகம்__ — ஒப்பந்தத்தை மீறிய விரிவுரையாளர்களின் நிதியத்தின் மீதி ரூ<br>1.மொரட்டுவை பல்கலைக்கழகம் — 86,559,003<br>2.அழகியற்கலை பல்கலைக்கழகம் — 1,494,871<br>3.ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் — 5,007,007<br>4.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் — 170,799,973<br>5.வயம்ப பல்கலைக்கழகம் — 19,623,171<br>6.ஸ்ரீ ஜ.புர பல்கலைக்கழகம் — 2,435,760<br>7.சப்ரகமுவ பல்கலைக்கழகம் — 14,906,132<br>8.ரஜரட்ட பல்கலைக்கழகம் — 5,014,429<br>9. றுஹுணு பல்கலைக்கழகம் — 33,780,845<br>10. களனி பல்கலைக்கழகம் — 45,994,263<br>11. பேராதனை பல்கலைக்கழகம் — 202,093,247<br>12. கிழக்குபல்கலைக்கழகம் — 123,356<br>13. தென்கிழக்கு பல்கலைக்கழகம் — 5,058,283<br>592,890,340 | (அ).உடன்படவில்லை<br>ஒப்பந்த மீறல்கள் தொடர்பான நிதியத்தின் அலுவல்கள் மற்றும் அதன் வருமானத்தை செலவு செய்ய வேண்டிய விதம் சம்பந்தமாக தெளிவான ஆலோசனை 737 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கை ஊடாக வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய குறிப்பிட்ட வருமானத்தை செலவு செய்யும் பொறுப்பு பல்கலைக்கழகங்களின் நிருவாக சபைகளுக்குரியதாகும்.<br><br>ஒப்பந்த மீறல்களின் கீழ் ப.மா.ஆ.குழு நிதியத்தின் மீதி ரூபா 10,278,787 அன்றி ரூபா 870,427 என திருத்தப்படல் வேண்டும் | (அ)<br>திறைசேரி அங்கீகாரத்தின் கீழ் 737, 805 ஆம் ஆ.குழுச் சுற்றறிக்கைகள் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய இந்த நிதியம் பயன்படுத்தப்படுகின்றது. |

116

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | | (ஆ). ப.மா.ஆ.குழுவினால் தனியார் நிறுவனமான Lanka Education and Research Network நிறுவனத்திடமிருந்து இணையத்தள வசதிகளைப் பெற்றுக்கொள்ளும்போது அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளாதிருந்ததுடன் 2013 ஜனவரி முதல் 2013 டிசம்பர் 31 வரையிலன காலப் பகுதிக்காக ரூபா 1,985,324 செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(இ) 1985 இன் 7 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின்(திருத்தப்பட்டவாறான) 50 ஆவது சரத்தின் பிரகாரம் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை ஆணைக்குழு அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனமொன்றிற்கு ஏற்புடைத்தாக்கலாகாது என குறிப்பிடப்பட்டிருந்தாலும் 2013 ஆம் ஆண்டில் ப.மா.ஆ.குழுவினால் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 2,282,072 செலுத்தப்பட்டிருந்தது. | **(ஆ). உடன்படவில்லை.**<br><br>Lanka Education and Research Network (LERN) தனியார் நிறுவனமொன்றல்ல. இது சகல பல்கலைக்கழகங்களினதும் பங்களிப்புடன் பல்கலைக்கழக முறைமைக்கான இணையத்தள வசதிகளை வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட உத்தரவாதம் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாகும். சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள் இதன் அங்கத்தவர்களாக இருப்பதுடன் அவர்களை உள்ளடக்கிய நிருவாக சபை ஒன்றின் ஊடாக இதன் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கமைய இந்த நிறுவனத்திடமிருந்து இணையத்தள சேவை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ப.மா.ஆ.குழு தனியான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கான தேவை எழாது.<br><br>(இ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 97 A சரத்து 1993 இன் 19 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் சரத்தின் பிரகாரம் நீக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய ப.மா.ஆ.குழு, ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்துவது சரியாகும். | (ஆ) LERN நிறுவனம் தனியார் நிறுவனமல்லாத காரணத்தினால் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கான தேவை எழாது.<br><br>(இ)1993 இன் 19 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ப.மா.ஆ.குழு ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை செலுத்துகின்றது. |

117

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 4.4 | நிதியத்தின் குறைந்த பயன்பாடு | கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>(அ). 2013 ஆண்டின் இறுதியில் செலவு செய்யப்படாத நிலையான சொத்துக்கள் கொள்வனவுக்கான மூலதன உதவிகளின் (unspent F/A Account Grant) பெறுமதி ரூபா 2,091,164 ஆக இருந்தது.<br>விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.<br>__விபரம்__ — __பெறுமதி(ரூ.)__<br>செலவு செய்யப்படாத கட்டிடங்கள் கணக்கு (unspent building) 506,297<br>செலவு செய்யப்படாத மரத் தளபாடங்கள் கணக்கு (unspent furniture ) 971,405<br>செலவு செய்யப்படாத நூல்கள்,சஞ்சிகைகள் கணக்கு ( unspent books and periodicals) 422,363<br>செலவு செய்யப்படாத தகவல் தொழில்நுட்பக் கணக்கு (unspent IT) __191,099__<br>__2,091,164__ | (அ). உடன்படுகின்றோம்<br>இந்த நிதி ஒப்பந்த சேவைகளுக்குரியவை களாக இருப்பதுடன் தற்போது அத்தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. | (அ) தற்போது அத்தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. |

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| | | (ஆ). ரூபா 16,612,390 மொத்தத் தொகையான 4 விசேட நிதியங்கள் ப.மா.ஆ.குழுவுக்குக் கீழ் காணப்பட்டாலும் அந்த நிதியம் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை. விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>**<u>நிதியம்</u>** — **<u>பெறுமதி</u>**<br>மத்திய ஆராய்ச்சி நிதியம் (Central Research Fund) — 10,271,234<br>ஸ்ரீமதி இந்திராணி ஞாபகார்த்த நிதியம் — 367,450<br>ஊழியர் மேம்பாட்டு நிதியம் (Staff Development Fund) — 5,867,304<br>தேசிய விஞ்ஞான மன்றம் (National Science Foundation) — <u>106,402</u><br><u>16,612,390</u> | (ஆ). உடன்படுகின்றோம்.<br><br>**நிதியத்தின் பெயர் / காரணம் / தற்போதைய நிலைமை**<br><br>மத்திய ஆராய்ச்சி நிதியம், ஸ்ரீமதி இந்திராணி ஞாபகார்த்த நிதியம்: இந்த நிதியங்களின் மீதிகள் நிகழ்காலக் கொள்கைகளுக்கு பொருந்தும் வகையில் புதியதொரு நிதியத்தின் கீழ் கொண்டுவந்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.(இணைப்பு 5)<br><br>ஊழியர் மேம்பாட்டு நிதியம்: ஊழியர் மேம்பாட்டிற்கான சில செயல் திட்டங்கள் / வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டாலும் அந்த செயற்பாடுகள் இந்த நிதியத்தின் கீழ் தனியாக சுட்டிக்காட்டப்படவில்லை. எதிர்காலத்தில் அந்த செயற்பாடுகளை இந்த நிதியத்தின் கீழ் சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>தேசிய விஞ்ஞான மன்றம்: தற்போது இது செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது. | இந்த நிதியங்களின் மீதிகள் நிகழ்காலக் கொள்கைகளுக்கு பொருந்தும் வகையில் புதியதொரு நிதியத்தின் கீழ் கொண்டுவந்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>ஊழியர் மேம்பாட்டிற்கான சில செயல் திட்டங்கள் / வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டாலும் அந்த செயற்பாடுகள் இந்த நிதியத்தின் கீழ் தனியாக சுட்டிக்காட்டப்படவில்லை. எதிர்காலத்தில் அந்த செயற்பாடுகளை இந்த நிதியத்தின் கீழ் சுட்டிக்காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>தற்போது இது செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது. |

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 4.5 | ஆளணி நிர்வாகம் | ஆணைக் குழுவின் 2013 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு அனுமதிக்கப்பட்ட ஆளணியில் 293 பேரும் உண்மையான ஆளணியில் 206 பேரும் இருந்ததுடன் 87 ஊழியர்களுக்கான வெற்றிடம் அவதானிக்கப்பட்டது.<br>விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br>ஊழியர்வகை / அனுமதிக்கப்பட்ட / உண்மையான / வெற்றிடம்<br>(i)சிரேஷ்ட மட்டம் 63 40 23<br>(ii)இரண்டாம் நிலை 177 119 58<br>(iii)மூன்றாம் நிலை 53 47 6<br>**மொத்தம் 293 206 87** | உடன்படுகின்றோம் | தற்போது நிலவும் வெற்றிடங்களில் 14 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. |
| 4.6 | பெறுகைகள் திட்டம் | ஆணைக் குழுவினால் 2013 ஆம் ஆண்டில் ரூபா 4,075,787 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலும் மீளாய்வு ஆண்டில் பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படவில்லை<br>ப.மா.ஆ.குழு 2013 ஆம் ஆண்டில் 6 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க பெறுகைகள் திட்டத்தை தயாரித்து 2013 பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ப.மா.ஆ.குழுவின் 2013 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தை தயாரித்து 2013 பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடங்கள்

4.7 வரவு செலவுத் திட்ட ரீதியான கட்டுப்பாடு

2003 ஜுன் 02 ஆம் திகதிய P.E.D 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.2.1 இன் பிரகாரம் வரவு செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லையென்பதுடன் கீழ் குறிப்பிடப்படும் செலவினங்களில் காணப்பட்ட மாற்றங்களை(வேறுபாடுகளை) கவனத்திற்கொள்ளும்போது சிறப்பான கட்டுப்பாட்டுக் கருவியாக வரவு செலவுத் திட்ட ஆவணத்தை பயன்படுத்தப்பட்டுள்ளதனை கணக்காய்வின்போது திருப்திப்பட முடியாதுள்ளது. விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | நிதி அறிக்கை ரூ. | வரவு செலவுத் திட்ட ஆவணம் ரூ. | வேறுபாடு ரூ. | வீதம் % |
|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 115,982,137 | 147,482,000 | 31,499,863 | 21 |
| போக்குவரத்து செலவினம் | 3,283,340 | 1,000,000 | 2,283,340 | 228 |
| ஏனைய மீண்டுவரும் செலவினம் | 62,016,907 | 1,352,245,000 | 1,290,228,093 | 95 |
| மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பும் மேம்பாடும் | 19,528,951 | 45,000,000 | 25,471,049 | 57 |
| அறிவு மேம்பாடும் நிறுவன அபிவிருத்தியும் (KEID) | 173,653,707 | 140,000,000 | 33,653,707 | 24 |

**கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள்**

4.7 வரவு செலவுத் திட்ட ஆவணம் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கிடையில் நிலவும் வேறுபாடுகள் கீழ் குறிப்பிடப்படும் வகையில் விளக்கப்படுகின்றது.

| **ஆளுக்குரிய வேதனாதிகள்** | **ரூபா மில்லியன்களில்** |
|---|---|
| வரவு செலவு ஆவணம் | 147.4 |
| நிதி அறிக்கை | 115.9 |
| வேறுபாடு | 31.4 |

**காரணம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த 33 மில்லியன் ரூபா பயன்படுத்தப்படாமை.

| **போக்குவரத்து செலவு** | **ரூபா மில்லியன்களில்** |
|---|---|
| வரவு செலவு ஆவணம் | 1.0 |
| நிதி அறிக்கை | 3.2 |
| வேறுபாடு | 2.2 |

**காரணம்**

உள்நாட்டுப் போக்குவரத்துச் செலவு (1.4) வேறுபாடு 0.9 ஆகும். போக்குவரத்துக் கொடுப்பனவு 2013.01.01 ஆம் திகதி முதல் ஒரு கி.மீட்டருக்கு 25/= வரை 13/= வினால் அதிகரித்தமை காரணமாக ஆணைக்குழு உறுப்பினர்களின் போக்குவரத்துச் செலவுகள் ரூபா 840,072.25 வரை அதிகரித்துள்ளது. அத்துடன் செயலமர்வுகளில் கலந்துகொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு விமானப் பயணச் செலவு ரூபா 205,500.00 ஆகும்.

வெளிநாட்டுச் செயலமர்வுகள் மற்றும் மாநாடுகள் போன்வற்றிற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டமை காரணமாக வரவு செலவு ஆவணத்திலும் பார்க்க உண்மையான செலவு 1.3 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

| **ஏனைய மீண்டுவரும் செலவினம்** | **ரூபா மில்லியன்களில்** |
|---|---|
| வரவு செலவு ஆவணம் | 1,352.2 |
| நிதி அறிக்கை | 62.0 |
| வேறுபாடு | 1,290.2 |

122

காரணம்

சொத்துக் கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகைக்காக 285.4 மி.ரூ. நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும் பல்கலைக்கழகங்களினால் ஈடு செய்வதற்காக வேண்டப்பட்ட தொகை 17 மி.ரூபாவாகும். அத்துடன் மாணவர் உதவித் தொகைக்காக ஒதுக்கப்பட்டிருந்த 501 மில்.ரூ.நிதியில் 2013 ஆம் ஆண்டில் ஈடு செய்வதற்காக வேண்டப்பட்டிருந்த தொகை 386.3 மில்.ரூபாவாகும். ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான வாழ்க்கைச் செலவுப்படியின் நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்காக 300 மில்.ரூபா ஒதுக்கப்பட்டிருந்தாலும் ஈடு செய்வதற்காக வேண்டப்பட்டிருந்த தொகை 125 மி.ரூபா மட்டுமாகும். மேலும், தெற்காசிய பல்கலைக்கழகங்களுக்கான பங்களிப்புத் தொகையான 111.2 மில்.ரூபா, ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான வாழ்க்கைச் செலவுப்படியின் நிலுவைத் தொகையான 125 மில்.ரூபா நிதிக் கூற்றில் "பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான நிதி உதவி" இன் கீழ் வகைப்படுத்தலும், மாணவர் உதவித் தொகை மற்றும் மகாபொல என்பவற்றுக்கான செலவு 480.8 மில்.ரூபா மாணவர் நிதி உதவிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருப்பதனால் ஏனைய மீண்டுவரும் செலவு வேறுபாட்டிற்குக் காரணமாகும்.

## மூலதனச் சொத்துக்கள் - புனரமைப்பும் மேம்பாடும்

மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தாலும் அதனை 2013 ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முடியாதுபோனமையினால் அந்த நிதி ஏற்பாடு மேலதிகமாகியது.(25 மில்.ரூபா)

## அறிவு மேம்பாடும் நிறுவன அபிவிருத்தியும் (KEID)

33 மில். ரூபா மேலதிக நிதி ஏற்பாடு தேவைப்பட்டதுடன் அதற்கான மூலதனச் செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மேலதிக நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டது. அதற்கமைய மொத்தமாக நோக்கும்போது வரவு செலவு ஆவணத்தின் வேறுபாடுகள் மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது சிறப்பான கட்டுப்பாட்டு முறையென உறுதியாகின்றது.

123

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 1978 இன் 16 ஆம் இலக்கபல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 108(2) சரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எடுத்துள்ள/ எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

| | விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 4.8 | ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல் | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 16 ஆவது சரத்திற்கமைய நிதியாண்டு பூர்த்தியாகி 06 மாதம் முடிவடைய முன்னர் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2012 ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றோம் | 2014.08.07 ஆம் திகதி உயர் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 5 | முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் பற்றி அடிக்கடி தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுத் துறைகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.<br><br>பிரதான செயற்பாட்டுப் பிரிவு<br>(அ) மூலதன நிதி ஏற்பாடு பயன்பாடு — மூலதன நிதி ஏற்பாடாக ஒதுக்கப்படும் நிதியத்தை மீண்டுவரும் செலவுகளுக்காகப் பயன்படுத்தல்<br>(ஆ) ஆட்சேர்ப்பு — ஊழியர் ஆட்சேர்ப்புக்களை அனுமதிக்கப்பட்ட சுற்றறிக்கைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளல்<br>(இ) சுற்றறிக்கை வெளியிடல் — திறைசேரி அனுமதியின்றி சுற்றறிக்கைகளை வெளியிட்டு நடைமுறைப்படுத்தல்.<br>(ஈ) நிதியத்தை பேணி வரல் — நிதியங்களை குறைந்த பயன்பாட்டுடன் பேணிவருதல். | அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் சம்பந்தமாக விசேட கவனத்தைச் செலுத்துவதற்கு உடன்படுகின்றோம். | அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் சம்பந்தமாக விசேட கவனத்தைச் செலுத்துவதற்கு உடன்படுகின்றோம். |

## பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

2013 டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறான நிதியியல் நிலைமைக் கூற்று

| | குறிப்பு | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **அசையாச் சொத்துக்கள்** | | | |
| திறைசேரி முறிகள் | 1 | 517,474,522 | 550,129,273 |
| நிலையான வைப்புக்கள் | 2 | 2,390,828,833 | 1,898,828,833 |
| | | 2,908,303,355 | 2,448,958,106 |
| **அசையும் சொத்துக்கள்** | | | |
| கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொகை | 3 | 24,685,454 | 54,476,918 |
| கிடைக்க வேண்டிய முதலீட்டு வருமானம் | 4 | 579,724,206 | 242,618,707 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 5 | 36,144,828 | 6,298,524 |
| | | 640,554,488 | 303,394,149 |
| **கழிக்குக: பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 56,909,584 | 24,374,301 |
| அங்கத்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை | 6 | 4,297,319 | 4,395,380 |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை | 7 | 5,586,731 | 64,270 |
| நானாவித கடன் வழங்குநர்கள் | 8 | 181,175 | 138,000 |
| | | 66,974,809 | 28,971,951 |
| **தேறிய அசையும் சொத்துக்கள்** | | 573,579,679 | 274,422,198 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **3,481,883,034** | **2,723,380,304** |
| **அங்கத்துவ நிதியம் மற்றும் இருப்புக்கள்** | | | |
| பங்களிப்பு நிதியம் | | 3,078,551,984 | 2,432,210,621 |
| ஓய்வூதிய நிதியம் | | 103,928,247 | 78,674,647 |
| ஒட்டுமொத்த வருமானம் | | 299,402,803 | 212,495,036 |
| **நிதியத்தின் தேறிய பெறுமதி** | | **3,481,883,034** | **2,723,380,304** |

ஒப்பம்:திஸ்ஸ நந்தசேன
செயலாளர்

ஒப்பம்:ஆர்.ஏ.யூ.ரணவீர
கணக்காளர்

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்**

2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் செயலாற்றுகைக் கூற்று

| | | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| முதலீட்டு வருமானம் | | 9 | 490,871,379 | 227,837,778 |
| கழிக்குக: | வருமான வரி | | 41,174,151 | 20,113,517 |
| வரி நீங்கலான தேறிய வருமானம் | | | 449,697,228 | 207,724,261 |
| கழிக்குக: | **செலவுகள்** | | | |
| | ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை | 10 | 2,895,828 | 1,755,904 |
| | தொழிற்பாட்டுச் செலவுகள் | 11 | 394,398 | 110,950 |
| | | | 3,290,226 | 1,866,854 |
| **செலவுகளை கழித்த பின்னர் தேறிய வருமானம்** | | | **446,407,001** | **205,857,407** |
| கூட்டுக: | முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | 212,495,036 | 201,906,600 |
| **பங்கிட முடியுமான தேறிய வருமானம்** | | | **658,902,037** | **407,764,007** |
| கழிக்குக: | **அங்கத்துவர் வட்டி** | | | |
| | பங்களிப்பு நிதியத்திற்கான வட்டி | | 349,500,444 | 189,115,287 |
| | ஓய்வூதிய நிதியத்திற்கான வட்டி | | 9,998,790 | 6,153,684 |
| | | | 359,499,234 | 195,268,971 |
| **முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம்** | | | **299,402,803** | **212,495,036** |

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| வரி மற்றும் செலவுக்குப் பின்னரான தேறிய வருமானம் | 447,740,263 | 205,857,407 |
| கூட்டுக/(கழிக்குக): திறைசேரி முறிகள் மீதான கழிவு / உபரித்தொகை | (20,061,870) | (9,930,494) |
| விற்கப்பட்ட திறைசேரி முறிகள் மீதான லாபம் / நட்டம் | (21,772,398) | - |
| ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை | 2,895,828 | 1,755,905 |
| வருமான வரி | 41,174,151 | 20,113,517 |
| | 449,975,974 | 217,796,335 |
| <u>தொழிற்பாட்டு மூலதனம் செயற்பாட்டு நிதியங்களின் மாற்றல்கள்</u> | | |
| பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம் (அதிகரிப்பு) / குறைவு | (338,438,761) | (7,776,395) |
| நானாவித கடன் தருநர்களின்(அதிகரிப்பு) / குறைவு | 43,175 | 33,000 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசு உருவாக்கம் | 111,580,388 | 210,052,940 |
| கழிக்குக : செலுத்திய வருமான வரி | (8,638,868) | (15,791,126) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமாகப் பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல்** | **102,941,520** | **194,261,814** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| நிலையான வைப்புக்களின் விருத்தி | 466,000,000 | 1,540,000,000 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | (958,000,000) | (2,039,828,833) |
| விற்பனை / முதிர்ச்சி - திறைசேரி முறிகள் | 692,376,702 | 382,371,951 |
| திறைசேரி முறிகள் கொள்வனவு | (617,887,684) | (321,093,216) |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமாக பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல்** | **(417,510,982)** | **(438,550,098)** |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்** | | |
| பங்களிப்புத் தொகை பெறுகை | 390,017,519 | 276,834,536 |
| பங்களிப்புத் தொகை மீளச் செலுத்தல் | (18,912,289) | (15,682,163) |
| ஓய்வூதியம் செலுத்துதல் | (26,689,465) | (17,495,086) |
| **நிதி நடவடிக்கைகள் மூலமாக பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல்** | **344,415,765** | **243,657,287** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | 29,846,304 | (630,997) |
| ஆரம்ப காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 6,298,524 | 6,929,521 |
| இறுதி காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | **36,144,828** | **6,298,524** |

## பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்
## 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்றல் கூற்று

| | பங்களிப்பு நிதியம் ரூபா | ஓய்வூதிய நிதியம் ரூபா | ஒட்டுமொத்த நிதியம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| **2011 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி** | 1,957,687,424 | 76,114,210 | 201,906,600 | 2,235,708,234 |
| 2012 ஆம் ஆண்டிற்கான மேலதிகம் | | | 10,588,436 | 10,588,436 |
| நடப்பு ஆண்டு வருமானத்தின் ஊடான பரிமாற்றல் | | 1,755,904 | | 1,755,904 |
| தவறான பங்களிப்பு மூலம் பெற்ற வட்டி | (1,136) | - | | (1,136) |
| நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம் | 317,109,810 | | | 317,109,810 |
| பூரணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல் | (17,744,027) | | | (17,744,027) |
| பங்களிப்பு நிதியம் / ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல் | (12,145,935) | 12,145,935 | | - |
| ஓய்வூதிய சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல் | (1,810,802) | | - | (1,810,802) |
| 2012 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல் | | (17,495,086) | | (17,495,086) |
| ஓய்வூதிய நிதியத்தின் / பங்களிப்பு நிதியத்தின் வட்டி | 189,115,287 | 6,153,684 | - | 195,268,971 |
| **2012 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி** | 2,432,210,621 | 78,674,647 | 212,495,036 | 2,723,380 |
| 2013 ஆம் ஆண்டிற்கான மேலதிகம் | - | | 446,407,001 | 446,407,001 |
| நடப்பு ஆண்டு வருமானத்தின் ஊடான பரிமாற்றல் | | 2,895,828 | | 2,895,828 |
| ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான பங்களிப்புத் தொகை வரவு | | 926,143 | | 926,143 |
| தவறான பங்களிப்புக்களை சீர்செய்தல் | (895) | | | (895) |
| நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம் | 361,043,993 | | - | 361,043,993 |
| பூரணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல் | (24,336,689) | | - | (24,336,689) |
| பங்களிப்பு நிதியம் / ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல் | (38,122,303) | 38,122,303 | | - |
| ஓய்வூதிய சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல் | (1,743,186) | | - | (1,743,186) |
| ஆண்டிற்கான ஓய்வூதியம் செலுத்துதல் | - | (26,689,465) | | (26,689,465) |
| ஓய்வூதிய நிதியத்தின் / பங்களிப்பு நிதியத்தின் வட்டி | 349,500,444 | 9,998,790 | (359,499,234) | - |
| **2013 டிசம்பர் 31 ஆம் திகதி மீதி** | **3,078,551,984** | **103,928,247** | **299,402,803** | **3,481,883,034** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | ඊසී/බී/පීඑක්එෆ්/<br>1/13/05 | මබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2014 නොවැම්බර් 2.4 දින |

සභාපති,

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව

විශ්වවිද්‍යාල විශ්‍රාම වැටුප් අරමුදලේ 2013 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2014 ඔක්තෝබර් 16 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.පී.සී. වික්‍රමරත්න

වැඩබලන විගණකාධිපති

පිටපත්: 1. ලේකම්, උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශය

2. ලේකම්, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය


අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனது இல. My No. ஈசீ/பீ/பீஎன்எப்/1/13/05 ඔබේ අංකය உமது இல. Your No. දිනය திகதி Date 2014 ஒக்தோபர் 16

தலைவர்,

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் ஏன்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 செலுத்தவேண்டிய கணக்குகள்

வாழ்க்கைச் செலவினங்களை உள்ளடக்கி ஓய்வூதியத்தைக் கணிப்பீடு செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்ததன் பின்னர் அதற்காக ஓய்வூதியத்தில் செலவு வைக்கவேண்டிய தொகையைத் தீர்ப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 5,586,731 தொகை உரிய ஓய்வூதியக் கணக்கில் செலவு வைக்கப்படாது உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 97 ஆம் பிரிவு | ஓய்வூதிய நிதியத்தை முறைமைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவ நிலைமைகளுக்காக ஆணைக்குழுவினால் விபரக்கொத்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1999 ஏப்ரல் 09 ஆந் திகதிய அமப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்காக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற 25 சதவீதத் தொகையிலிருந்து 10 சதவீதம் ஓய்வூதிய நிதியத்திற்குச் செலவு வைக்க வேண்டியிருந்தது. எனினும் அதற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம் 747 இன் மூலம் ஊழியரினால் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற 15 சதவீத பங்களிப்புத் தொகையிலிருந்து 8/15 அளவு ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2012 இன் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் பொது முயற்சிகள் குழுவின் அமர்வின் போது இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தும் அந்த பிரச்சனைகளுக்காக உரிய தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 446,407,001 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 205,857,407 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 240,549,594 தொகையான அதிகரிப்பைக் காட்டியது. நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு முதலீட்டு வருமானம் ரூபா 241,972,967 இனால் உயர்வடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் சேவைக் காலம் 20 வருடங்களைப் பூர்த்தி செய்யாது சேவையிலிருந்து விலகிய ஊழியர்களுக்கு அவர்களின் ஓய்வூதியக் கணக்கில் செலவில் உள்ள மீதியைச் செலுத்தும் போது 01 தொடக்கம் 05 வருடங்கள் வரையான காலதாமதத்தை எடுத்த 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) சேவைக் காலம் 20 வருடங்களைப் பூர்த்தி செய்யாத ஊழியர்களுக்கு அவர்களின் ஓய்வூதியக் கணக்கில் செலவில் உள்ள பங்களிப்புப் பணத்தை மீளச் செலுத்தும் போது கடைசியாக வட்டி கணிப்பீடு செய்யப்பட்ட திகதி மற்றும் அத்தொகையும் வட்டியும் செலுத்தப்பட்ட திகதி என்பவற்றுக்கிடையே கால இடைவெளி காணப்படுகின்றமையினால் பங்களிப்பாளரால் இழக்கப்படுகின்ற வட்டித்தொகை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. ஓய்வூதியத்தை தீர்மானிப்பது தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

ஒப்பம்: எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்<br>2.2.1 செலுத்த வேண்டிய கணக்குகள் | வாழ்க்கைச் செலவினங்களை உள்ளடக்கி ஓய்வூதியத்தைக் கணிப்பீடு செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்ததன் பின்னர் அதற்காக ஓய்வூதியத்தில் செலவு வைக்க வேண்டிய தொகையைத் தீர்ப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 5,586,731/- தொகையை உரிய ஓய்வூதியக் கணக்குகளில் செலவு வைக்கப்படாமல் உயர் கல்வி நிறுவகங்களுக்குச் செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | உடன்படவில்லை.<br><br>நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு முதல் வாழ்க்கைச் செலவுப் படியின் அடிப்படையில் ஓய்வூதியத்தை கணக்கிடுவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்தது.<br><br>அதற்கமைய ஓய்வூதிய நிதியத்தின் அங்கத்தவர் ஒருவர் என்ற வகையில் ஓய்வூதிய அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளாமல் சேவையிலிருந்து விலகிய ஊழியர்களுக்குரிய நிலுவை வாழ்க்கைச் செலவுப் படியின் அடிப்படையிலான ஓய்வூதியப் பங்களிப்பை உரிய பல்கலைக்கழகங்களின் ஊடாக அவர்களுக்குச் செலுத்த வேண்டும். அதற்கமைய ரூபா 5,586,731/- தொகையை 45 ஆம் இலக்க உறுதிச் சீட்டின்(Voucher) ஊடாக 2014.03.20 ஆம் திகதி பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது. | ரூபா 5,586,731/- தொகையை 45 ஆம் இலக்க உறுதிச் சீட்டின்(Voucher) ஊடாக 2014.03.20 ஆம் திகதி பல்கலைக்கழகத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது. |
| 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை<br>(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 97 ஆம் சரத்து | ஓய்வூதிய நிதியத்தை முறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவம் சம்பந்தமாக ஆணைக்குழுவினால் விபரக்கொத்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றோம்.<br><br>விபரக்கொத்து வரைவு தயாரிக்கப்பட்டு 2014.09.04 ஆம் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | 2014.09.04 ஆம் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் சட்ட வரைஞர் திணைக்களத்தின் கண்காணிப்பில் இருக்கின்றது. |

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| **3. நிதி மீளாய்வு**<br>**3.1 நிதி விளைவுகள்** | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம். 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 446,407,001 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 205,857,407 ஆக இருந்தது. அதன் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது நிதி விளைவுகளில் ரூபா 240,549,594 தொகை அதிகரிப்பைக் காட்டுகின்றது. நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு முதலீட்டு வருமானம் ரூபா 241,972,967 இனால் உயர்வடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | உடன்படுகின்றோம்.<br><br>ஓய்வூதிய நிதியத்தின் அடிப்படை நோக்கம், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அதிகளவு நன்மை கிடைக்கும் வகையில் அதனைப் பேணி வருவதாகும். இங்கு ஓய்வூதியம் பெறுபவர்களின் பங்களிப்புத் தொகையை முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானத்தைப் பயன்படுத்தி ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்பவர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வருடாந்தம் அதிக வட்டி பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி விளைவுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உடன்படுகின்றது. |
| **4.செயற்பாட்டு மீளாய்வு**<br>**4.1 செயலாற்றுகை** | **(அ)** தெரிவு(மாதிரி) பரிசோதனையின் பிரகாரம் 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாது சேவையிலிருந்து விலகிய ஊழியர்களுக்கு அவர்களது ஓய்வூதியக் கணக்கில் செலவில் உள்ள மீதியைச் செலுத்தும்போது 01 தொடக்கம் 05 வருடங்கள் வரையான கால தாமதத்தை எடுத்த 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | உடன்படவில்லை.<br><br>ஓய்வூதிய நிதியத்தின் அங்கத்தவர் ஒருவர் சேவையிலிருந்து விலகிய திகதி மற்றும் செலுத்திய திகதியை அடிப்படையாகக் கொண்டு கால தாமதத்தைக் கணக்கிடுவது சரியான முறையன்று. அதற்காக சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை ஓய்வூதியப் பிரிவிற்கு ஒப்படைத்த திகதி மற்றும் அந்த நபருக்குரிய தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான பற்றுச் சீட்டில் கையொப்பமிட்ட திகதியை கவனத்திற்கொண்ட பின்னர் கால தாமதத்தை கணக்கிடுதல் வேண்டும். | கால தாமதமின்றி நிதி விடுவிக்கப்படுகின்றது. |

| பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | | | |
|---|---|---|---|
| **விடயம்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள்** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள்** | **தற்போதைய நிலைமை** |
| **(ஆ) 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய, அப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்.** | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உத்தியோகத்தர்களுக்காக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற 25% தொகையில் 10% த்தினை ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டியிருந்தது. எனினும் அதற்கு முரணாக 747 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுச் சுற்றறிக்கை ஊடாக தொழில் தருநரால் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற 15 சதவீத பங்களிப்புத் தொகையிலிருந்து 8/15 அளவு ஓய்வூதிய நிதியத்திற்குசெலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் பொது முயற்சிகள் குழு அமர்வின்போதும் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தும் அந்தப் பிரச்சினைகளுக்காக உரிய தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய பங்களிப்புத் தொகையின் சதவீதத்தில் திருத்தம் மேற்கொள்ளுதல் சம்பந்தமாக இடைக்கிடை உயர்கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் திறைசேரியின் பிரதிநிதிகளுடன் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமையத் தயாரிக்கப்பட்ட அமைச்சரவை நிருபம் 2014.05.12 ஆம் திகதி உயர்கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தயாரிக்கப்பட்ட அமைச்சரவை நிருபம் 2014.05.12 ஆம் திகதி உயர்கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| | (ஆ) 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத ஊழியர்களுக்கு அவர்களின் ஓய்வூதியக் கணக்கில் செலவில் உள்ள பங்களிப்புத் தொகையை மீளச் செலுத்தும்போது கடைசியாக வட்டி கணிப்பீடு செய்யப்பட்ட திகதி மற்றும் அத்தொகை மற்றும் வட்டி செலுத்தப்பட்ட திகதி என்பவற்றுக்கிடையே கால இடைவெளி காணப்படுகின்றமையினால் பங்களிப்பாளர் இழக்கின்ற வட்டித்தொகை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | உடன்படுகின்றோம்.<br><br>2014 ஆம் ஆண்டு முதல் பங்களிப்பாளருக்கு வட்டி இழப்பு ஏற்படாதவாறு செலுத்தப்பட்டுள்ளது. | பங்களிப்பாளருக்கு வட்டி இழப்பு ஏற்படாதவாறு செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. ஓய்வூதியத்தை தீர்மானிப்பது தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது. | தற்போது விவரக்கொத்தொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. | விவரக்கொத்து வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்தின் கண்காணிப்பில் இருக்கின்றது. |

## பல்கலைக்கழக சேமலாப நிதியம்
## 2013.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று

| | 2013ஆம் ஆண்டு ரூபா | 2012 ஆம் ஆண்டு ரூபா |
|---|---|---|
| **அசையாச் சொத்து** | | |
| நீண்ட கால முதலீடுகள் | 16,607,011,906 | 15,612,171,387 |
| கடன்கள் | 4,652,632,394 | 4,174,979,575 |
| | 21,259,644,300 | 19,787,150,962 |
| **அசையும் சொத்துக்கள்** | | |
| கையிருப்பு | 115,978 | 137,247 |
| பெறப்பட வேண்டிய வட்டி | 2,859,352,445 | 1,692,094,329 |
| பெறப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை | 130,020,121 | 133,563,334 |
| பெறப்பட வேண்டிய சேமலாப நிதி கடன் தவணை | 27,755,563 | 28,831,961 |
| ஏனைய முற்பணங்கள் | 1,000 | 1,000 |
| காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்கள் | 54,459,514 | 5,107,417 |
| | 3,071,704,621 | 1,859,735,288 |
| **கழிக்குக : அசையும் பொறுப்புக்கள்** | | |
| வரி | 253,651,637 | 123,550,316 |
| செலுத்த வேண்டிய சேமலாப நிதிய அனுகூலங்கள் | 25,864,332 | 20,732,015 |
| செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படி நிலுவை பங்களிப்புத் தொகை | 153,337,883 | 270,399,312 |
| நானாவித கடன் உரிமையாளர்கள் | 391,189 | 466,506 |
| | 433,245,041 | 415,148,149 |
| **தேறிய அசையும் சொத்துக்கள்** | 2,638,459,580 | 1,444,587,139 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | 23,898,103,881 | 21,231,738,101 |
| நிதியளிப்புக்களாவன, | | |
| அங்கத்துவ கணக்கு மீதி | 23,457,619,698 | 20,832,082,627 |
| செயற்பாடற்ற கணக்குகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் | 3,000,000 | 3,000,000 |
| வேண்டப்படாத அனுகூல இருப்புக்கள் | 6,903,570 | - |
| நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | 430,580,613 | 396,655,475 |
| **நிதியத்தின் தேறிய பெறுமதி** | 23,898,103,881 | 21,231,738,102 |

## பல்கலைக்கழக சேமலாப நிதியம்
## 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

| | 2013ஆம் ஆண்டு ரூபா | 2012 ஆம் ஆண்டு ரூபா |
|---|---|---|
| வருமானம் | | |
| முதலீட்டு வருமானம் | 2,454,618,499 | 1,751,025,815 |
| ஏனைய வருமானங்கள் | 41,601 | - |
| மொத்த வருமானம் | 2,454,660,100 | 1,751,025,815 |
| **கழிக்குக:** வருமானம் | (193,471,607) | (140,091,507) |
| வரிக்குப் பின்னரான வருமானம் | 2,261,188,493 | 1,610,934,308 |
| செயற்பாட்டுச் செலவுகள் | (184,321) | (123,770) |
| **செயற்பாட்டு இலாபம்** | 2,261,004,172 | 1,610,810,538 |
| **கூட்டுக: இருப்புக்கள்** | | |
| வட்டி வீதத்தை சமப்படுத்தும் இருப்புக்கள் | - | 281,650,220 |
| செயற்பாடற்ற கணக்குகளுக்கான ஒதுக்கீடு | - | 5,000,000 |
| வருமானத்திற்கு சீர்படுத்தல் | 20,536,806 | 9,030,091 |
| கடந்த ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | 396,655,475 | 115,683,608 |
| **பகிர்வதற்கான தேறிய இலாபம்** | 2,678,196,453 | 2,022,174,457 |
| அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | (2,243,823,280) | (1,623,471,262) |
| செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | (3,792,561) | (2,047,720) |
| முன் கொண்டு செல்லப்படும் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | 430,580,613 | 396,655,475 |

## பல்கலைக்கழக சேமலாப நிதியம்

## 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று

| | 2013ஆம் ஆண்டு ரூபா | 2012 ஆம் ஆண்டு ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்கள்** | | |
| வரி மற்றும் செலவுகளுக்குப் பின்னரான இலாபம் | 2,261,004,172 | 1,610,810,538 |
| **சீர்படுத்துகைகள்** | | |
| திறைசேரி உண்டியல்கள் குறைந்த விலை / உச்ச விலை | (22,723,257) | - |
| பதிவழிக்கப்பட்ட நானாவித கடன்கள் | (41,601) | - |
| திறைசேரி உண்டியல்கள் விற்பனை மூலமான இலாபம் / நட்டம் | 28,459,430 | - |
| வருமான வரி | 193,471,607 | 140,091,507 |
| செயற்பாட்டு மேலதிகம் / குறைவு | 2,460,170,351 | 1,750,902,045 |
| | | |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றம்** | | |
| கையிருப்பு மாற்றம் | 21,269 | (43,820) |
| பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமான மாற்றம் | (1,167,258,116) | (422,854,453) |
| கடன் மாற்றம் | (476,576,421) | (149,255,085) |
| செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படி மாற்றம் | (117,061,429) | 270,399,312 |
| நானாவித கடன் உரிமையாளர்கள் மாற்றம் | 75,317 | 41,545 |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய தொகை | 699,220,337 | 1,449,189,544 |
| ஆண்டினுள் செலுத்திய வருமான வரி | (63,370,286) | (119,650,840) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய தேறிய காசுப் பாய்ச்சல்** | 635,850,051 | 1,329,538,704 |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலம் ஈட்டிய காசுப் பாய்ச்சல்கள்** | | |
| நிலையான வைப்புக்களின் முதிர்ச்சி | 5,666,200,000 | 5,050,000,000 |
| நிலையான வைப்புக்கள் முதலீடு | (7,600,000,000) | (9,971,700,000) |
| பிரீமியம் பிணைப்பத்திரங்கள் முதிர்ச்சி | - | 4,999,384 |
| சேமிப்பு வைப்பு கணக்குகளை முடிவுறுத்தல் | (93,920) | - |
| திறைசேரி முறிகள் விற்பனை / முதிர்ச்சி | 5,420,831,836 | 3,280,821,087 |
| திறைசேரி முறிகள் கொள்வனவு | (4,487,473,004) | (394,571,571) |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய தேறிய காசுப் பாய்ச்சல்** | (1,000,535,088) | (2,030,451,100) |
| | | |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் ஈட்டிய காசுப் பாய்ச்சல்** | | |
| அங்கத்துவப் பணம் வரவு | 1,948,028,708 | 1,728,199,770 |
| அங்கத்துவப் பணம் செலுத்துகை | (1,533,991,573) | (1,035,615,478) |
| **நிதிச் செயற்பாடுகள் மூலம் ஈட்டிய தேறிய காசுப் பாய்ச்சல்** | 414,037,135 | 692,584,292 |
| | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்களின் தேறிய அதிகரிப்பு | 49,352,097 | (8,328,104) |
| ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்கள் | 5,107,417 | 13,435,521 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமான சொத்துக்கள் | 54,459,514 | 5,107,417 |

## பல்கலைக்கழக சேமலாப நிதியம்

## 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று

| | அங்கத்துவ மீதி | செயற்பாடற்ற கணக்குகளுக்கான ஒதுக்கீடுகள் | வேண்டப்படாத அனுகூலங்களின் இருப்பு | வட்டி வீதத்தை சமப்படுத்தும் இருப்பு | நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2011.12.31 ஆம் திகதியன்று மீதி | 18,501,983,566 | 8,000,000 | - | 281,650,220 | 115,683,608 | 18,907,317,394 |
| ஒதுக்கீடுகளை மாற்றுதல் | - | (5,000,000) | - | (281,650,220) | 286,650,220 | - |
| அங்கத்துவ வட்டி | 1,623,471,262 | - | - | - | (1,623,471,262) | - |
| 2012 ஆம் ஆண்டின் மேலதிகம் | - | - | - | - | 1,610,810,538 | 1,610,810,538 |
| ஆண்டிற்கான அங்கத்துவப் பணம் | 1,749,849,911 | - | - | - | - | 1,749,849,911 |
| ஆண்டிற்கான அங்கத்துவப் பணத்தை மீளச் செலுத்துதல் | (1,031,244,558) | - | - | - | - | (1,031,244,558) |
| சீர்படுத்துகை | (7,698,223) | - | - | - | 9,030,091 | 1,331,868 |
| ஓய்வு விடுமுறைக்கான அறவீடுகள் | (4,279,330) | - | - | - | - | (4,279,330) |
| செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | - | - | - | - | (2,047,720) | (2,047,720) |
| **2012.12.31 ஆம் திகதியன்று மீதி** | 20,832,082,628 | 3,000,000 | - | - | 396,655,475 | 21,231,738,103 |
| ஆண்டிற்கான அங்கத்துவப் பணம் | 1,944,485,495 | - | - | - | - | 1,944,485,495 |
| அங்கத்துவ வட்டி | 2,243,823,280 | - | - | - | (2,243,823,280) | - |
| ஆண்டிற்கான அங்கத்துவப் பணத்தை மீளச் செலுத்துதல் | (1,542,881,312) | - | - | - | - | (1,542,881,312) |
| ஓய்வு விடுமுறைக்கான அறவீடுகள் | (6,416,726) | - | - | - | - | (6,416,726) |
| சீர்படுத்துகை | (6,622,361) | - | - | - | 20,536,807 | 13,914,446 |
| ஒதுக்கீடுகள் | (6,851,306) | - | 6,851,306 | - | - | - |
| சீர்படுத்துகை | - | - | 52,264 | - | - | 52,264 |
| செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | - | - | - | - | (3,792,561) | (3,792,561) |
| 2013 ஆம் ஆண்டின் மேலதிகம் | - | - | - | - | 2,261,004,172 | 2,261,004,172 |
| **2013.12.31 ஆம் திகதியன்று மீதி** | 23,457,619,698 | 3,000,000 | 6,903,570 | - | 430,580,613 | 23,898,103,881 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ඊසී/බී/යූජීඑෆ්/ 1/13/06 | ඔබේ අංකය / உமது இல. / Your No. } | දිනය / திகதி / Date } 2015 පෙබරවාරි 13 දින

සභාපති,

විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව

**විශ්වවිද්‍යාල අර්ථසාධක අරමුදලේ 2013 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2014 දෙසැම්බර් 08 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.පී.සී. වික්‍රමරත්න
විගණකාධිපති (වැඩබලන)

පිටපත්: 1. ලේකම් - මහාමාර්ග, උසස් අධ්‍යාපන හා ආයෝජන ප්‍රවර්ධන අමාත්‍යාංශය
2. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஈசீ/பீ/யூபீஎப்/1/13/06   ඔබේ අංකය / உமது இல. / Your No.   දිනය / திகதி / Date 2014 டிசெம்பர் 08

தலைவர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களற்ற கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மாணிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதிஉயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிசார்கூற்றுக்கள் பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிசார்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிசார்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிசார் கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வாழ்க்கைச் செலவுடன் தொடர்புடைய சேமலாப நிதிய உதவு தொகை நிலுவையை நலன்பெறுநர்களது செலவில் வைப்பதற்கென 2012 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்ற தொகை ரூபா 500 மில்லியன் ஆகும். நிலுவையாக உள்ள வாழ்க்கைச் செலவுத் தொகையாகக் கணிப்பிடப்பட்ட ரூபா 153.3 மில்லியன் இதிலிருந்து பல்கலைக்கழக சேமலாப நிதியத்தில் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாது நடைமுறைப் பொறுப்பாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

2.2.2 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டிலிருந்த சேமலாப உதவு தொகையானது சேமலாப நிதியத்திற்குக் கையளிக்கப்படுகையில் குறிப்பாக இனங்காணப்படாத மீதிகள் நிலவின. மீளாய்வாண்டு முடிவிலும் இனங்காணப்பட முடியாதிருந்த மீதி ரூபா 6,903,570 ஆகும். இம் மீதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நலன்களுக்கான ஒதுக்கக் கணக்கிற்கு அது மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சேவை முடிவடைந்த அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 19,400,886 பெறுமதியான காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு 2 முதல் 13 ஆண்டுகள் கழிந்திருந்தன.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 91 ஆம் பிரிவு | மீளாய்வாண்டு முடிவிலான ரூபா 23,457,619,698 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தை நெறிப்படுத்தல், நிர்வகித்தல், அதன் முகாமைத்துவம் தொடர்பாக ஆணைக்குழு விதிமுறைகளைத் தயாரிக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 264 | கொடுப்பனவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்படும் சகல கொடுப்பனவுகளையும் பெறுநர் பெற்றுக்கொண்டதை உறுதி செய்யும் பற்றுச்சீட்டு இருக்க வேண்டும். தெரிவுச் |

செவ்வையின் பிரகாரம் ரூபா 69,796,055 கூட்டுத்தொகையுடைய 16 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் பற்றுச் சீட்டுக்களின் மூலம் உறுதி செய்யப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் நிகர இலாபம் ரூபா 2,261,004,172 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் நிகர இலாபம் ரூபா 1,610,810,538 ஆகும். முதலீட்டு வருமானம் ரூபா 703,592,684 அதிகரித்தமையே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிசார் விளைவுகளில் ரூபா 650,193,634 அதிகரிப்பு ஏற்பட்டதற்கான விசேட காரணமாகும்.

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் திட்டமிடப்பட்ட பணிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது செயல் நடவடிக்கைத் திட்டத்தினூடாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2011/2012 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மருத்துவ காப்புறுதித் திட்டமொன்றை உருவாக்கி அதனைச் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு முடிவு வரை அது அமுலாக்கப்படாதிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) விதிமுறைகளைத் தயாரித்தல்
(ஆ) உதவு தொகைச் சேகரிப்பும் வட்டியைக் கணிப்பிடலும்
(இ) நிதியம் பெற வேண்டியவற்றை அறவீடு செய்தல்
(ஈ) அங்கத்தவர் நிதியத்தை விடுவித்தல்

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)
*k/y*

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளித்துள்ள பதில்கள் மற்றும் அவதானிப்புக்கள் | எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், தற்போதைய நிலைமை(2015.07.31 ஆம் திகதியன்றுள்ளவாறு) |
|---|---|---|---|
| <u>நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்</u><br><br>**2.2.1**<br><u>கணக்கியல் குறைபாடுகள்</u> | வாழ்க்கைச் செலவுப் படிக்குரிய நிலுவை சேமலாப நிதிப் பங்களிப்பை பயனாளிகளுக்கு வரவு வைப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற 500 மில்லியன் ரூபாவில் 153.3 மில் ரூபா நிலுவை வாழ்க்கைச் செலவுப்படியை கணக்கிட்டு பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களது கணக்கில் செலவு வைக்காது வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது அசையும் பொறுப்புக்களாக நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | இந்த நிலுவை வாழ்க்கைச் செலவுப்படிக்கான நிலுவை பங்களிப்புத் தொகையைச் செலுத்துவதற்கு கிடைத்த நிதி ஏற்பாடுகளில் இதுவரை 153.3 மில்லியன் ரூபா மீதியாக இருப்பதுடன் பல்கலைக்கழகங்களில் இருந்து குறிப்பிட்ட கணக்கீடுகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் 2014 ஆம் ஆண்டில் பங்களிப்புத் தொகையை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இதுவரை குறிப்பிட்ட செலுத்துகைக்கான ஆவணங்கள் கிடைத்த வண்ணமுள்ளன. செலுத்துகையை மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு நாம் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளோம். |
| **2.2.2**<br><u>செலுத்த வேண்டிய கணக்குகள்</u> | (அ)பல்கலைக்கழகங்களினால் செயற்படுத்தப்பட்ட சேமலாப நிதியத்திற்குரிய பங்களிப்புத் தொகையை சேமலாப நிதியத்திடம் ஒப்படைக்கும்போது குறிப்பாக கண்டறிய முடியாத மீதி நிலவியதுடன் மீளாய்வு ஆண்டு முடிவில் கண்டறிய முடியாத மீதிகளின் பெறுமதி 6,903,570 ரூபாவாக இருந்தது. இந்த மீதியை கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளாது வேண்டப்படாத பயன்கள் இருப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | சேமலாப நிதியத்தில் அறிந்துகொள்ளப்படாத மீதி சம்பந்தமாக விசாரணை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அந்தக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் இந்த அறிந்துகொள்ளப்படாத மீதி கீழ் குறிப்பிடப்படும் காரணங்களின் அடிப்படையில் “ வேண்டப்படாத பயன்கள் இருப்புக் கணக்கிற்கு” மாற்றப்பட்டது.<br><br>* பல்கலைக்கழக சேமலாப நிதியத்தை ஆரம்பிக்கும்போது ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் வெவ்வேறாக நிலவிய மீதிகளை 1974 ஆம் ஆண்டில் ஒன்றிணைத்தபோது அறிந்துகொள்ளப்படாத மீதிகளின் கூட்டுத்தொகையில் இந்த மீதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | இந்த மீதி சம்பந்தமாக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசின் அடிப்படையில் “ வேண்டப்படாத பயன்கள் இருப்புக் கணக்கிற்கு” மாற்றப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | * குறிப்பிட்ட மீதிகளை சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு செலுத்தும்போது தொடர்ந்தும் இந்த அறிந்துகொள்ளப்படாத மீதிகளுடன் சீர்படுத்த வேண்டியேற்பட்டமை.<br><br>* சேமலாப நிதியம் தொடர்பாக கால எல்லையானது கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீது அதிகாரம் செலுத்தாததன் காரணமாக(1958 இன் 15 ஆம் இலக்க சேமலாப நிதியச் சட்டத்தின் 17.3 ஆம் சரத்தின் படி) அதனை வருமானத்தில் வரவு வைக்க முடியாதுபோனமை | |
| | (ஆ)சேவை முடிவுறுத்தப்பட்ட அங்கத்தவர்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 19,400,886 பெறுமதிமிக்க காசோலைகளை இரத்துச் செய்து 02 முதல் 12 வருடங்கள் வரையான காலம் கடந்து விட்டிருந்தமை. | பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 93 ஆவது சரத்தின்படி சேவை முடிவுறுத்தப்பட்டுள்ள அங்கத்தவர்களுக்கு அவர்களுக்குரிய சேமலாப நிதியைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>இந்த கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 20 மில்லியன் ரூபா தொடர்பில் 3 நினைவூட்டல் அறிவித்தல்களை அனுப்பிய பின்னர் காசோலைகளை இரத்துச் செய்து செலுத்த வேண்டிய சேமலாப நிதியாக கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.<br><br>1981 இன் 15 ஆம் இலக்க சேமலாப நிதியச் சட்டத்தின் 17.3 ஆம் சரத்திற்கமைய சேமலாப நிதியை விடுவிக்கும்போது கால எல்லையானது கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீது தாக்கம் செலுத்துவதில்லையாதலால் மற்றும் வேண்டப்படும்போது செலுத்த வேண்டியிருப்பதனால் இந்தத் தொகையை வருமானத்தில் சேர்க்க முடியாது. | பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 93 ஆவது சரத்தின்படி சேவை முடிவுறுத்தப்பட்டுள்ள அங்கத்தவர்களுக்கு அவர்களுக்குரிய சேமலாப நிதியைச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>இந்த கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 20 மில்லியன் ரூபா தொடர்பில் 3 நினைவூட்டல் அறிவித்தல்களை அனுப்பிய பின்னர் காசோலைகளை இரத்துச் செய்து செலுத்த வேண்டிய சேமலாப நிதியாக கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.<br><br>1981 இன் 15 ஆம் இலக்க சேமலாப நிதியச் சட்டத்தின் 17.3 ஆம் சரத்திற்கமைய சேமலாப நிதியை விடுவிக்கும்போது கால எல்லையானது கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீது தாக்கம் செலுத்துவதில்லையாதலால் மற்றும் வேண்டப்படும்போது செலுத்த வேண்டியிருப்பதனால் இந்தத் தொகையை வருமானத்தில் சேர்க்க முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| **2.3**<br>**<u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை</u>** | (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரங்கள் சட்டத்தின் 91 ஆவது சரத்து<br><br>மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூபா 23,457,619,698 பெறுமதிமிக்க ஊழியர் சேமலாப நிதியத்தை முறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவத்திற்காக ஆணைக்குழு விபரக்கொத்தை தயாரித்திருக்காமை. | வரைவு விபரக்கொத்தை தயாரித்தல் தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>1.2012.05.17<br>வரைவு விபரக்கொத்து சட்ட வரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>2.2012 ஒக்டோபர்<br>சட்ட வரைஞர் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கமைய தொழில் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கிடையே பல சுற்றுக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.<br><br>3.2013.08.15<br>தொழில் அமைச்சின் கருத்துக்களையும் உள்ளடக்கிய திருத்தப்பட்ட வரைவு விபரக்கொத்தை சட்ட வரைஞர் திணைக்களத்திடம் முன்வைத்தல்.<br><br>4. 2014.02.11<br>சட்ட வரைஞர் திணைக்களத்தினால் உட்படுத்தப்பட்ட புதிய திருத்தங்கள் சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் மேலும் கருத்துக்களை வினவுதல்.<br><br>5. 2014.03.28<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உரிய அலுவலர்களிடம் கருத்துக்களை வினவியதன் பின்னர் குறிப்பிட்ட அவதானிப்புக்களை சட்ட வரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.<br><br>6. இது தொடர்பாக அடிக்கடி தொலைபேசியில் வினவியபோது சட்ட வரைஞருடன் கலந்துரையாடி இறுதி வரைவை எமக்கு சமர்ப்பிப்பதாக சட்ட வரைஞர் திணைக்கள உத்தியோகத்தர்கள் அறிவித்தனர். | விபரக்கொத்தொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | (ஆ) இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் நிதிப் பிரமாணம் 264.<br><br>அனைத்து செலுத்துகைகளும் உறுதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை உரியவர் பெற்றுக்கொண்டமையை பற்றுச் சீட்டின் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தபோதிலும் எழுமாறான சோதனைப்படி ரூபா 69,796,055 பெறுமதிமிக்க 16 உறுதிச் சீட்டுக்களுக்குரிய செலுத்துகைகளும் பற்றுச் சீட்டுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. | குறிப்பிட்ட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்துகைகள் சேமலாப நிதியின் கடன் சம்பந்தப்பட்ட உறுதிப்பத்திரங்களாகும். அந்த அனைத்து செலுத்துகைகளுக்கும் பற்றுச் சீட்டை அனுப்புமாறு பல்கலைக்கழகங்களுக்கு அறிவித்திருந்தாலும் அவ்வாறு நடக்காத சந்தர்ப்பங்களும் உண்டு. இது சம்பந்தமாக பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் இது சம்பந்தமாக நினைவூட்டி பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், காசோலைகளை வழங்கும்போது குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்றுக்கொள்ளப்படும் கடிதத்தின் அடிப்படையிலேயே காசோலைகளை வழங்குவதுடன் பற்றுச் சீட்டு கிடைக்கும்வரை குறிப்பிட்ட அந்தக் கடிதத்தை உறுதிச் சீட்டுடன் இணைத்து வைக்கப்படும். | குறிப்பிட்ட பற்றுச் சீட்டுக்களை பல்கலைக்கழகங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **3.1** நிதி விளைவுகள் | முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுப் பிரகாரம், 2013 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் தேறிய வருமானம் ரூபா 2,261,004,172 ஆக இருந்ததுடன் இதனுடன் ஒப்பிடும்போது கடந்த ஆண்டின் தேறிய வருமானம் ரூபா 1,610,810,538 ஆக இருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிட்டு நோக்கும்போது மீளாய்வு ஆண்டின் நிதி விளைவின் ரூபா 650,193,634 வளர்ச்சியில் முதலீட்டு வளர்ச்சி ரூபா 703,592,684 இனால் அதிகரித்திருப்பது விசேடமாக தாக்கம் செலுத்தியிருந்தது. | உடன்படுகின்றோம். | உடன்படுகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| **4.1 செயற்பாட்டுத் திட்டம்** | பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் திட்டமிடப்பட்ட அலுவல்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டுத் திட்டத்தின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளதுடன் 2011/2012 செயற்பாட்டுத் திட்டத்தின்படி மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் மீளாய்வு ஆண்டின் இறுதிவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. | மருத்துவக் காப்புறுதி சம்பந்தமாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைப் பிரகாரம் சகல தொழிற் சங்கங்களுடனும் கலந்துரையாடிய பின்னர் மருத்துவக் காப்புறுதித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மருத்துவக் காப்புறுதி முறை சம்பந்தமாக நிதியத்தின் அங்கத்தவர்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளது. |
| 5. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகளை இடைக்கிடை தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழ் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விசேட கவனம் ஈர்க்கப்படல் வேண்டும். | | |
| | 1. விபரக்கொத்து தயாரித்தல் | விபரக்கொத்து சட்ட வரைஞர் திணைக்களத்தில் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. | விபரக்கொத்தொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | 2. பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் வட்டியைக் கணக்கிடுதல். | அங்கத்தவரின் பங்களிப்புத் தொகையில் 99.6% உரிய நேரத்தில் சேகரிக்கப்படுகின்றது. வட்டியைக் கணக்கிடுதலும் சரியாக மேற்கொள்ளப்படுகின்றது. | குறிப்பிட்ட பங்களிப்புத் தொகை உரிய நேரத்தில் சேகரிக்கப்படுகின்றது. வட்டியும் சரியாக கணக்கிடப்படுகின்றது. |
| | 3. நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய தொகையை அறவிடுதல் | நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய சகல பணங்களும் முறையாக நேரத்திற்கு அறவிடப்படும். | நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய சகல பணங்களையும் உரிய நேரத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| | 4. அங்கத்தவர்களுக்கான நிதியை விடுவித்தல் | அங்கத்தவர்களுக்கான நிதியை விடுவித்தல் பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 93 ஆவது சரத்திற்கமைய மேற்கொள்ளப்படும். | அங்கத்தவர்களுக்கான நிதியை விடுவித்தல் பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 93 ஆவது சரத்திற்கமைய மேற்கொள்ளப்படும். |